அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

சன்மார்க விவேக விருத்தி

சமுதாய மின்னிதழ்



கௌரவ ஆசிரியர்
திருவருட்பிரகாச வள்ளலார்
மருதூர்

ஆசிரியர்
தி.ம.இராமலிங்கம்
கடலூர்

மே - 2016
மின்னிதழ்--10

கொலை புலை தவிர்த்தோர் மட்டுமே உள்ளே புகுதல் வேண்டும்

பொருளடக்கம்

எண்	தலைப்புகள்	பக்கம்
1	கௌரவ ஆசிரியரின் தலையங்கம்	3
2	மே தின வாழ்த்துக்கள்	8
3	தேர்தல் அவசரம்	9
4	அதிர்ந்தது ஆலயம்	11
5	வள்ளலாரைப் புரிந்துக்கொள்ளுங்கள்	17
6	சன்மார்க்க குரவர் நால்வர்	23
7	இந்து மதம் எங்கே போகிறது?	29
8	சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளின் சரித்திரக் குறிப்புகள்	35
9	மனுமுறைகண்ட வாசகம் - நற்சிந்தனை	41
10	இராமலிங்க அகவல்	47
11	சிவபெருமானும் வள்ளற்பெருமானும்	53
12	கண்மூடி வழக்கம்	59
13	சாது தரிசனம்	67
14	மாதம் ஒரு மகான்	69
15	சன்மார்க்க குறுக்கெழுத்துப் போட்டி	75
16	சத்விசாரம்	77
17	சுத்த சன்மார்க்க நீதி	81
18	மே மாதத்தில் அன்று	89
19	கிறுஸ்து	91
20	இஸ்லாம்	93
21	புத்தம்	95
22	சமணம்	97
23	கடவுளைத் தேடி	99
24	Topmost Advise	103

நூல் வெளியீடு
காரணப்பட்டு ச.மு.க. அருள் நிலையம்


ஆசிரியர்
தி.ம.இராமலிங்கம்
மேல்அழிஞ்சிப்பட்டு, கடலூர்.
தொடர்பு எண்:9445545475
www.vallalarlive@live.com
www.vallalarr.blogspot.in

SS Trust

கௌரவ ஆசிரியர்

ஞானசபையும் நடராஜரும்

ஒரு பொருளினது நாம ரூப குண குற்றங்களை விசாரியாமல் அந்தப் பொருளைக் காணுதல் இந்திரியக்காட்சி, இந்திரிய அறிவு. அதன் நாம ரூபத்தையும் குண குற்றங்களையும் விசாரித்தறிதல் மனஅறிவு. அதன் பிரயோஜனத்தை யறிதல் ஜீவ அறிவு. அந்தப் பொருளினது உண்மையை அறிதல் ஆன்மஅறிவு. ஞானசபை யென்பது ஆன்மப் பிரகாசம். அந்தப் பிரகாசத்திற்குள் ளிருக்கும் பிரகாசம் கடவுள். அந்த உள்ளொளியின் அசைவே நடனம். இவற்றைத்தான் சித்சபை அல்லது ஞானசபை என்றும், நடராஜர் என்றும், நடனம் என்றும் சொல்லுகிறது.



ஆசிரியர்

மனித உயிர்க்கு நான்கு அறிவுகள் இருக்கும் என வள்ளற்பெருமான் பறைசாற்றுகிறார். அவை, 1.இந்திரிய அறிவு, 2.மன அறிவு, 3.ஜீவ அறிவு, 4.ஆன்ம அறிவு என்பதாகும். முதல் மூன்று அறிவையும் கடந்து நான்காவது அறிவான ஆன்ம அறிவைக்கொண்டவன் சுத்த சன்மார்க்கி.

1. இந்திரிய அறிவு:-

ஒருவன் தனக்கு எதிரில் உள்ள ஒரு பொருளைக் காணும்போது, அப்பொருளின் பெயர் என்ன? அப்பொருளின் வடிவம் என்ன? அப்பொருளின் குணம் என்ன? அப்பொருளின் குற்றம் என்ன? என்று விசாரிக்காமலும், தெரியாமலும் - அப்பொருள் எப்படி இருக்கிறதோ அதுவே உண்மை என்று அறிதல் இந்திரிய அறிவு.

கௌரவ ஆசிரியர்

2. மன அறிவு:-

ஒருவன் தனக்கு எதிரில் உள்ள ஒரு பொருளைக் காணும்போது, வடிவத்தை தெரிந்துக்கொள்ளுதல், அப்பொருளின் குணத்தை தெரிந்துக்கொள்ளுதல், அப்பொருளால் வரும் குற்றத்தை தெரிந்துக்கொள்ளுதல் - இவ்வாறு அப்பொருளின் பெயர், வடிவம், குணம், குற்றம் இவைகளை தெரிந்துக்கொண்டு அவையே உண்மை என அறிதல் மன அறிவு.

3.ஜீவ அறிவு:-

ஒருவன் தனக்கு எதிரில் உள்ள ஒரு பொருளைக் காணும்போது, அப்பொருளினால் நமக்கு என்ன உபயோகம் என்று, அப்பொருளை நாம் நமக்கு சாதகமாக எப்படிப் பயன்படுத்திக்கொள்வது, பாதகம் என்றால் அதனை விட்டு விலகுவது என்ற அறிவை அறிவது ஜீவ அறிவு.

4.ஆன்ம அறிவு:-

ஒருவன் தனக்கு எதிரில் உள்ள ஒரு பொருளைக் காணும்போது, அப்பொருளின் உண்மை என்ன? என்பதை அறிவது ஆன்ம அறிவு.
இந்த நான்கு அறிவினையும் ஒரு சினிமாப் பாடல் மூலம் விளக்கலாம்.
"நீயும் பொம்மை... நானும் பொம்மை... நினைத்துப்பார்த்தால் எல்லாம் பொம்மை..." என்ற பாடல் வரிகளை பாடியவர், மேற்கண்ட நான்கு அறிவில் எந்த அறிவு கொண்டு இந்தப் பாடலை அவர் இயற்றியிருப்பார் என்று சிந்தித்தால்..., அது இந்திரிய அறிவு கொண்டு இப்பாடலை இயற்றியிருப்பார் எனத் தோன்றுகிறது.

ஏனென்றால், அவர் மனிதர்களாகிய நம்மையும், மற்ற உயிர்களையும், இறைவனையும் பொம்மையாகவே பார்க்கிறார். இவருக்கு உயிரற்ற பொம்மையே இவ்வுலகில் உண்மை எனத் தோன்றுகிறது. அதற்கு மேற்பட்டு இவ்வுலகில் ஏதுமில்லை என்கிறது இவரது இந்திரிய அறிவு. பொம்மைகளே உண்மை என்று அதனை வைத்து விளையாடுகின்ற குழந்தைகளின் அறிவினை ஒத்தது இவ்வறிவு.

மேற்காணும் அதே பாடலை பாடியவர், மன அறிவுக்கொண்டும் அதனை பாடியிருக்கலாம் எனத்தோன்றுகிறது. அதாவது அந்த பொம்மையின் பெயர் மனித பொம்மை, அதன் வடிவம் மனித வடிவம், அதன் குணம் மனித குணம், அதன் குற்றம் மனித குற்றம் என்பதனை அறிந்து, மனிதனானவன் யாரோ ஒருவர் ஆட்டுவிக்க ஆடுகின்ற

.பொம்மையே என்பதனை புரிந்துக்கொண்டு அவ்வாறு பாடல் இயற்றியிருக்கலாம். அவ்வாறு அந்த பொம்மையின் குணத்தையும் குற்றத்தையும் வெளிப்படுத்துவதாக இப்பாடல் இருப்பதால், இப்பாடலாசிரியர் மன அறிவு உடையவர் என்று அறிந்துக்கொள்ளலாம். பொம்மைகளின் வடிவம் அறிந்து அது ஆணா, பெண்ணா, அதன் ரூபம் மனித ரூபமா? விலங்கு ரூபமா? என்றெல்லாம் ஆராய்ந்து அதற்கு தக்க விளையாடும் இளைஞனின் அறிவினை ஒத்தது இவ்வறிவு.

மேற்காணும் அதே பாடலை பாடியவர், ஜீவ அறிவைக்கொண்டும் அதனை பாடியிருக்கலாம் எனத்தோன்றுகிறது. மனிதனின் நிலையினை பாடுவதற்கு உவமையாக நாம் எதனை தேர்ந்தெடுக்கலாம்? என்று நினைக்கையில், அப்பாடலாசிரியருக்கு 'பொம்மை' என்கிற பொருள் தம் அறிவுக்கு தோன்றுகிறது. இப்படி அந்த பொம்மையின் உபயோகம் என்ன? அதன் இயல்பு என்ன? என்று தெரிந்துக்கொண்டு அப்பொம்மை போல் மனிதனும் உபயோகமற்றவன் என்கிறார். அதேசமயம் இறைவனும் பொம்மை என்ற வடிவிலே வழிபடப்படுகிறான். எனவே இவ்வுலகில் எல்லாம் பொம்மைதான், என்று பொம்மையின் உபயோகத்தை தெரிவிப்பதனால், அப்பாடலாசிரியர் ஜீவ அறிவை பெற்றிருக்கிறார். பொம்மையின் உபயோகம் தெரிந்துக்கொண்டு அதனை வழிபாட்டுக்கு கொண்டுவந்த கலைஞர்களின் அறிவை ஒத்தது இவ்வறிவு.

மேற்காணும் அதே பாடலை பாடியவர், ஆன்ம அறிவுக்கொண்டும் அதனை பாடியிருக்கலாம் எனத்தோன்றுகிறது. ஒரு பொம்மையின் உண்மை என்ன? அது வெறும் சடப் பொருளாக, வடிவமாக உள்ளது. அதன் உண்மைப் பொருள் உயிரோடு வேறு எங்கோ உள்ளது? அந்த உண்மைப் பொருளை தேடுங்கள். வெறும் பொம்மையோடு விளையாடுவதை நிறுத்துங்கள். நிறுத்தாவிடில் நாமெல்லாம் பொம்மைகளே! என்று எச்சரிக்கை விடுவதாகவும் இப்பாடல் பொருள் கொள்கிறது. அதாவது குரங்கு வடிவ பொம்மையை கண்டு அதனை மரத்தில் வைத்து விளையாடுவதைவிட, அதன் உண்மை என்கிற 'குரங்கு' என்ற உயிரினம் இவ்வுலகில் உயிருடன் உள்ளது. அது உண்மையிலேயே மரத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறது. அதனைக் காணவேண்டும் என்பதனை அப்பொம்மை நமக்கு உணர்த்துவதாக உள்ளது. பொம்மையின் உண்மை தெரிந்துக்கொண்டு அதன்

அதாவது குரங்கு வடிவ பொம்மையை கண்டு அதனை மரத்தில் வைத்து விளையாடுவதைவிட, அதன் உண்மை என்கிற 'குரங்கு' என்ற உயிரினம் இவ்வுலகில் உயிருடன் உள்ளது. அது உண்மையிலேயே மரத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறது. அதனைக் காணவேண்டும் என்பதனை அப்பொம்மை நமக்கு உணர்த்துவதாக உள்ளது. பொம்மையின் உண்மை தெரிந்துக்கொண்டு அதன் உண்மையினை, அந்த பொம்மையைவிட்டு வேறுஇடத்தில் தேடிகண்டுபிடிக்கும் சித்த அறிஞர்களின் அறிவை ஒத்தது இவ்வறிவு.

ஞானசபை யென்பது ஆன்மப் பிரகாசம். அந்தப் பிரகாசத்திற்குள் ளிருக்கும் பிரகாசம் கடவுள். அந்த உள்ளொளியின் அசைவே நடனம். இவற்றைத்தான் சித்சபை அல்லது ஞானசபை என்றும், நடராஜர் என்றும், நடனம் என்றும் சொல்லுகிறது.

இவ்வுலகில் ஞானசபை அல்லது சிற்சபை என்பது ஒரு பொம்மை. அதன் உண்மை ஆன்ம பிரகாசமாக நம்முள்ளே உள்ளது.

இவ்வுலகில் நடராஜர் மற்றும் நடனம் என்பது பொம்மைகள். அதன் உண்மை, நமக்குள் உள்ள ஆன்ம பிரகாசகத்திற்குள் உள் உள்ள பிரகாசமே நடராஜர் என்கிற கடவுள். அந்த உள் பிரகாசத்தின் அசைவே நடனம்.

நமக்குள்ளே உள் பிரகாசத்தையும், அதன் அசைவையும் காண்பவன் ஆன்ம அறிவு கொண்டவன். இந்த உண்மை தெரியாது புறத்தில் உள்ள நடராஜரையும் நடனத்தையும் கண்டு அதுவே உண்மை என சொல்பவன் மற்ற மூன்று அறிவுகளையும் ஒருங்கே கொண்டுள்ளார்கள் எனப்பொருள் கொள்கிறார் வள்ளற்பெருமான்.

இதனை படிக்கும் நாம், எந்த அறிவினை கொண்டுள்ளோம் என்பது இப்போது நமக்குத் தெரிந்திருக்கும்.

ஞானசபையும், சிற்சபையும் எங்கே உள்ளது?

வடலூர் மற்றும் சிதம்பரம் என்று சொன்னால், நீங்கள் இன்னும் பொம்மை வழிபாட்டை விட்டு உண்மையினை காணவில்லை எனப்பொருள்.

மாறாக, அவையிரண்டும் எனது ஆன்ம பிரகாசத்தில் உள்ளது என்று சொன்னால் நீங்கள் ஆன்ம அறிவினைக்கொண்டு உண்மை கண்டுள்ளீர்கள் எனப்பொருள்.


நடராஜரும், நடனமும் எங்கே உள்ளது?

சிதம்பரத்தில் உள்ளது என்று சொன்னால், நீங்கள் இன்னும் பொம்மை விழிபாட்டை விட்டு உண்மையினை காணவில்லை எனப்பொருள்.

மாறாக, அவையிரண்டும் எனது ஆன்மபிரகாசத்திற்குள் உள் பிரகாசமாகவும், அதன் அசைவாகவும் இருக்கிறது என்று சொன்னால், நீங்கள் ஆன்ம அறிவினைக் கொண்டு உண்மை கண்டுள்ளீர்கள் எனப்பொருள்.

'சிதம்பரம் இராமலிங்கம்' என்று வள்ளற்பெருமான் கையொப்பம் இடுவதையும் நாம் ஆன்ம அறிவினைக்கொண்டு நோக்கினால், அதன் உண்மை என்ன? என்பது புரியவரும்.

மக்கள் எல்லோரும் ஆன்ம அறிவினை பெறவேண்டும் என்பதே இந்த சன்மார்க்க விவேக விருத்தியின் குறிக்கோளாக உள்ளது.



மே தின வாழ்த்துக்கள்

1880 - ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் தொடங்கி, 1890 - ஆம் ஆண்டு பாரீசில் உருவானதுதான் மே தினம். அல்லது, உலகத் தொழிலாளர் தினம். பெரும் போராட்டங்கள்தான் மே முதல் நாளை, சர்வதேச தொழிலாளர் தினமாக, மே தினமாக அனுசரிப்பதற்கு வழிவகுத்தன. இன்றைக்கு உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமை தினமாக மே தினம் உலகம் முழுதும் கொண்டாடப்படுகிறது. "உலகத் தொழிலாளர்களே ஒன்றுசேருங்கள்!' என்பதுதான் மே தினம் நமக்கு அளிக்கும் முழக்கமாகும்.

ஆனால், இந்த எட்டு மணி நேர உழைப்பு நிர்ணயம் என்பது பெரும்பாலும் படித்தவர்களுக்குத்தான் உதவுகிறது. அமைப்பு சாராத் தொழிலாளர்கள் எனப்படும் கல்லுடைக்கும் கொத்தடிமைகள், தோட்டத் தொழிலாளர்கள், ஆலை ஊழியர்கள், நெசவுத் தொழிலாளர்கள், ஒப்பந்த ஊழியர்கள், தினக் கூலிகள் என கோடிக்கணக்கான மக்கள் இன்னமும் ஒரு வேளை உணவுக்காகவும், தங்கள் குடும்பத்திற்காகவும் பகலிரவாக உழைத்துக்கொண்டுதான் இருக்கின்றனர்.

எத்தனையோ குழந்தைகள், பள்ளிக்குச் சென்று படிப்பதற்கு வாய்ப்பில்லாத நிலையில் இருக்கிறார்கள். அவர்கள், டீ கடைப் பணியாளர்களாக, வீட்டு வேலை செய்பவர்களாக, ஹோட்டலில் மேசை துடைப்பவர்களாக, கட்டிட வேலைகளில் மண்ணும் கல்லும் சுமப்பவர்களாக எத்தனையோ கடுமையான வேலைகளைச் செய்துவருகிறார்கள். அவர்களது பெற்றோர்களுக்கு, அவர்களைப் படிக்க வைக்கக்கூடிய அளவு சம்பாத்தியம் இருப்பதில்லை. படிப்பு என்ன, தங்கள் பிள்ளைகளுக்குப் போதுமான உணவு கொடுப்பதற்குக்கூட முடியாத அளவில்தான் அவர்களது வருமானம் இருக்கிறது. அதனால்தான் அந்தச் சிறுவர்கள் வேலைக்கு வருகிறார்கள். சிறுவர்கள் வேலை செய்ய சட்டம் தடை செய்துள்ளதால் தற்போது அந்நிலை சற்று மாறுபட்டுள்ளது.

இது எல்லோருக்குமான உலகம். எல்லோருக்கும் நல்ல வாழ்க்கை கிடைக்க நாம் ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டும்? இந்த மே தினத்தில் நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டிய கேள்வி இது! நன்றி-தினமணி

தேர்தல் அவசரம்

என் இனிய அன்பர்களே! வந்தனம்!

வருகின்ற 16-ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. ஒருவிதமாக அனைத்துக் கட்சிகளும் தனியாகவோ அல்லது ஏதோ சில பிரதான கட்சிகளுடன் இணைந்தோ மக்களாகிய நம்மை நோக்கி ஓட்டு கேட்டு வந்தவண்ணம் உள்ளன. சென்ற தேர்தல் போல இந்தத் தேர்தலில் இலவசங்கள் என்கிற கவர்ச்சித் திட்டங்கள் எக்கட்சியிலும் காணப்படவில்லை. (நான் இப்பகுதியினை எழுதும்வரை ஒரு பிரதானக் கட்சி மட்டும் இன்னும் தன்னுடைய தேர்தல் அறிக்கையை வெளியிடவில்லை. அத்தேர்தல் அறிக்கை எப்படி இருக்கும் எனத்தெரியாது.)

அனைத்துக் கட்சிகளுமே மதுவினை ஏதோ ஒரு வகையில் ஒழிக்க முன்வந்துள்ளன என்பதும் வரவேற்கத்தக்கது. ஆனால் ஊழல் இலஞ்சங்களை ஒழிப்பதாகவும் அனைத்துக் கட்சிகளும் மக்களிடையே முழங்குகின்றன. முழக்கத்தின் இடையில் கோடி கோடியாக ஊழல் பணம் தேர்தல் ஆணையத்திடம் பிடிபட்டுக்கொண்டே உள்ளது. யாருடைய பேச்சிலும் வாய்மை என்பதில்லை. "வாய்மையே வெல்லும்" என்ற நமது அரசின் அதிகார வாசகம் பொய்த்துப்போய் பல ஆண்டுகள் ஓடிவிட்டன. இந்தத் தேர்தலிலும் வாய்மை வெல்வதற்கு இடமில்லை என்றே தோன்றுகிறது.

சாதி, மதங்களை ஒழிப்பதற்காக எண்ணத்தின் அளவில் கூட எந்த கட்சியும் நினைத்துப் பார்க்கவில்லை. சாதியும் மதமும் அரசு ஏட்டிலிருந்து முற்றிலுமாக நீக்கப்படவேண்டும் என்பது சுத்த சன்மார்க்கிகளின் கொள்கை. ஆண், பெண் என்று மட்டுமே மக்களை பிரிக்க வேண்டுமே தவிர சாதிகளாலும் மதங்களாலும் மக்களை பிரிப்பதை நம்மை ஆளும் அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும். இதற்கான சட்டத்தை இயற்றும் கட்சிகளை இதுவரை நம்மால் பார்க்க முடியவில்லை.

இருட்டறையில் உள்ளதடா உலகம்! சாதி
இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே! - பாண்டியன் பரிசு-56; 17-18

என்று பாரதியாரும் பாடிவிட்டு சென்றுவிட்டார். ஆனால் பல விஞ்ஞான வளர்ச்சிக்கு பின்பும் இன்னும் இந்த சாதி இருக்கின்றது என்பது, கேலிக்கு உரியவையாக தென்படவில்லை.

சாதி மதம் தமிழ் இல்லை - அந்தச்
சாதி மதத்தைத் தமிழ்கொள்வ தில்லை!
-பன்மணித்திரள்.

என்று பாரதிதாசனும் பாடிவிட்டு சென்றுவிட்டார். ஆனால் இன்றும் அந்த சாதி மதத்தை தமிழன் கொண்டுள்ளானே! இதனை அவன் அசிங்கமாகப் பார்க்கவில்லை.

சுத்த சன்மார்க்கிகள் என்று ஆட்சியை ஆளுகின்றனரோ... அன்றுதான் சட்ட புத்தகத்திலிருந்து சாதிகளும் மதங்களும் தூக்கி எரியப்படும். கருணையுள்ள ஆட்சி அன்றுதான் இவ்வுலகில் தொடங்கும். அதுவரை அன்பர்களே... யாருக்கு தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என்பதை நிர்ணயிப்பது நமக்கு சிக்கலாகவே இருக்கும். குறைந்த பட்சம் அக இனத்தாருக்கே நாம் வாக்களிக்க வேண்டும் என்று நினைத்தாலும், அவ்வாறு வேட்பாளர்கள் பெரும்பாலும் யாரும் இல்லை. புற இனத்தார்க்கு வாக்களிப்பதைவிட நாம் "நோட்டா"வுக்கு வாக்களிப்பது சிறந்தது என்று நினைக்கத் தோன்றுகிறது.

அன்பர்களே! உங்கள் மனசாட்சி என்ன சொல்கிறதோ அதனை செய்யுங்கள். நான் ஓட்டுக்கு பணம் வாங்க மாட்டேன் என்று உறுதி எடுத்துக்கொள்ளுங்கள். நான் ஓட்டு போடாமல் இருக்கமாட்டேன் என்றும் உறுதி எடுத்துக்கொள்ளுங்கள். எனக்கு எதிரியாக இருந்தாலும், இச்சமுதாயத்திற்காக நான் அந்த நல்ல வேட்பாளரையே தேர்ந்தெடுப்பேன் என்று உறுதி எடுத்துக்கொள்ளுங்கள். அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருளால் ஒரு நல்ல ஆட்சி இம்மாதத்தில் தமிழகம் உட்பட மற்றுமுள்ள மாநிலங்களில் அமையட்டும்.

தமிழகத்திலும் மற்றுமுள்ள மாநிலங்களிலும் புதிய ஆட்சியினை கொடுக்க இருக்கும் கட்சிகளுக்கு சன்மார்க்க விவேக விருத்தி தமது வாழ்த்துக்களை முன்கூட்டியே தெரிவித்துக்கொள்கிறது.

அதிர்ந்தது ஆலயம்



கேரளா - இறைவனின் சொந்த தேசம் என்றழைக்கப்படுகிறது. அதற்க்கேற்ப இந்தியாவிலேயே படித்தவர்கள் அதிகம் உள்ள மாநிலம் இது. இயற்கை என்னும் பேரழகி கொஞ்சி விளையாடும் மாநிலம் இது. தென்னை மரங்கள் சூழ்ந்த நீர் நிலைகள், நீர்நிலைகளைச் சூழ்ந்த பறவை இனங்கள், பறவை இனங்களைச் சூழ்ந்த பசுமை நிலங்கள், பசுமை நிலங்களைச் சூழ்ந்த நீல வான மேகங்கள், நீல வான மேகங்களுக்கிடையே இறைவனின் ஆலயங்கள் என்று இன்னும் வர்ணிக்க முடியாத பல கண்கொள்ளாக் காட்சியை கொண்டு விளங்குவது கேரளா.

சென்ற 10-04-2016 அன்று அதிகாலை 03.30 மணியளவில் ஒரு கோர விபத்தும் அங்கே நடந்தேறியது உலகையே உலுக்கியது.



கொல்லம் அருகே உள்ள பரவூர் புட்டிங்கல் தேவி கோயிலில் அன்றைய தினம் திருவிழா நடந்துக்கொண்டிருந்தது. அத்திருவிழாவில் பட்டாசுகள் வெடித்துக் கொண்டாடுவது வழக்கமாக இருந்து வந்துள்ளது. அதுவும் இரு வேறு பிரிவினர் போட்டியிட்டுக்கொண்டு பட்டாசுகளை வெடிக்க வைப்பதே இக்கோயிலின் சிறப்பு. இதனை அறிந்த அம்மாவட்ட ஆட்சித்தலைவர் அந்த நிகழ்ச்சிக்கு தடையும் விதித்திருந்தார்.

அதையும் மீறி பட்டாசு வெடி நிகழ்ச்சி அக்கோயிலில் இரவு 03.30 மணியளவில் நடைபெற்றது. அவ்வமயம் ஒரு தீப்பொறி அங்குள்ள பட்டாசு கிடங்கில் பட்டு அவ்விடமே ஒரு சில மணித்துளிகளில் வெடித்து சிதறியது. புட்டிங்கல் தேவி ஆலயம் அலங்கோலமானது. அப்போது அங்குள்ள மக்களின் மனநிலை எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப்பாருங்கள். நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இந்த விபத்தில் இறந்தனர். 350-க்கும் மேற்பட்டவர்கள் காயத்தால் பாதிப்படைந்தனர் என்கிறது செய்தி.



தீவிரவாதிகளால் மக்கள் அழிவதைவிட இப்படிப்பட்ட கோயில் விழாக்களினால் மக்கள் அழிவது பெருகிவிட்டதாகத் தோன்றுகிறது. எதற்காக கோயில் கட்டப்பட்டதோ அந்த நோக்கம் சிதைக்கப்பட்டு அங்கு ஆடம்பரங்களும், ஆணவப்போக்கும் அதிகரித்துவிட்டன. கோயில்களில் அமைதியான வழிபாடுகள் காணப்படுவதில்லை. திருவிழா என்றாலே ஒலி பெருக்கி மூலம் கண்ட பாடல்களைப் போட்டு உரக்க கத்த விடுகிறார்கள். இதனிடையில் பெரும் வெடி சத்தங்களும் காதை பிளக்கும். ஆராவாரமும் ஆர்ப்பாட்டமும் நிறைந்ததே கோயில் திருவிழா என்று ஆகிவிட்டது.

மனிதன் சம்பாதித்த பணம், முறைகேடான வழியில் இப்படிப்பட்ட கோயில் திருவிழாக்களில் செலவிடப்படுகிறது. இப்படிப்பட்ட கோயில் திருவிழாக்கள் ஒரு ஏழை மக்களின் பசியினைக்கூட தீர்க்க முன்வராது. சமுதய நலனுக்கு என்று எதையும் செய்யாது. கோயிலின் பொது சொத்தும் அதன்மூலம் வருகின்ற பணமும் இப்படிப்பட்ட ஆடம்பரத்திற்கும் அழிவிற்கும் பயன்படுத்தப்படுவது வருந்தத்தக்கது.



நாங்கள் செத்தாலும் பரவாயில்லை! வெடி நிகழ்ச்சிகளுக்கு தடை விதிக்க வேண்டாம்! என்கிறார்கள் மக்கள். ஏனெனில் அது பாரம்பரியமாக கொண்டாடப்படுவதாம்! மக்கள் நல அரசும் அவ்வாறே நடந்துக்கொள்கிறது. கோயில் திருவிழா என்ற பெயரில் நடைபெறும் அக்கிரமங்கள் தவறு என்று தெரிந்தும் அதன் பாரம்பரியத்திற்காக அதனை தொடர்ந்து அனுமதிப்பது கல்வியில் சிறந்த மக்களுக்கு அழகாகுமா? நீங்கள் கற்ற கல்வி தவறுகளை திருத்த சொல்லவில்லையா? மூட வழக்கங்களை மூடசொல்ல வில்லையா? கடவுள் வழிபாடு எது என்று சொல்லிக் கொடுக்கவில்லையா? ஒரு மனிதக் கருவை உருவாக்க அந்தக் கடவுள் எவ்வளவு சக்தியினை வெளிப்படுத்துகிறார் என்று தெரியவில்லையா?

எனதருமை மக்களே, கோயில் திருவிழாக்களை மிக அமைதியாகவும் மிக எளிமையாகவும் நடத்துவோம். பட்டாசு வெடிப்பதை முற்றிலுமாக தவிர்ப்போம். ஒலிப்பான்களை தேவைக்கு ஏற்ப மெதுஒலியாக வைத்து பயன்படுத்துவோம். கோயில் நிதி மிக அதிகம் இருப்பின், அதனை அன்னதானத்திற்கும் சமுதாய நலனுக்கும் செலவழிப்போம். ஆலயங்களில் அமைதி உண்டாகட்டும். மக்களின் மனதில் அன்பு நிறையட்டும்.

வாசகர் கடிதம்



திரு.பி.கல்யாணராமன், லாஸ்பேட்டை,
புதுச்சேரி.

ஆசிரியருக்கு வணக்கம்,

ஏப்ரல் மாதப் பூசம் 14-04-2016 அன்று வந்தது. ஆனால் நீங்கள் உங்கள் இதழில் 15-04-2016 -வெள்ளிக்கிழமை என்று தவறாக விளம்பரம் வெளியிட்டுள்ளீர்கள். (பக்கம்-40) இந்த இதழ் தேதியினையும் மற்றவர்களின் விளம்பரங்களையும் ஒப்பிட்டு எது உண்மையான தேதி என்பதை நிர்ணயப்பதில் சற்றே குழம்பிப்போனேன். ஆகையால் சரியான தேதிகளை இனிவரும் மாதங்களில் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பெயர்: இரா.பிரபு
படிப்பு: இளங்கலை பொறிஇயல்
பணியிடம்: கத்தார்
மாதசம்பளம்: ரூ.50,000
உயரம்: 5.2”
முகவரி: திரு.இராமலிங்கம், மாரியம்மன் கோயில் தெரு, கருங்குழி
தொடர்பு எண்: 8760023915, 9578688023





சன்மார்க்க மணமகள் தேவை

Wanted a bride for 30 years old person, hearing impaired, working as TYPIST in state governement office in Chennai. A beautiful, handsome, graduate with computer skill, he knows driving, owns a house in Chennai with rental income. Secured life with regular income.

We need a good looking normal girl or otherwise hearing impaired girl. Only VEGETRAIANS are needed. We belong to Seer Karuneegar community of Vellore Dist.

Contact Dr.Murugan, Chennai
8015413026 & 9444075266

காரணப்பட்டு
ச.மு.கந்தசாமி ஐயா
அருள் நிலையம்

வள்ளற்பெருமானின் அணுக்கத் தொண்டர் காரணப்பட்டு ச.மு.கந்தசாமி ஐயா அவரகளின் அருள் நிலையக் கட்டட பணிக்கு பொது மக்களிடமிருந்து நிதி உதவியினை எதிர்பார்க்கிறோம்.

அருள் நிலையத்தின் சிறப்புகள்



- 0 வள்ளலாரின் மாணவர் சித்தி அடைந்த இடம்.
- 0 திருமருதூரைப் போன்றே இயற்கை எழிலான இடம்.
- 0 அனையா தீபம் உள்ள அருள் நிலையம்.
- 0 அன்ன தானம் அளிக்கும் அருள் நிலையம்.
- 0 திருவருட்பா ஆறு திருமுறைகளும் பதிக்கப்பெற்ற இடம்.
- 0 வள்ளலாரின் சரித்திரம் முதன்முதலாக எழுதப்பட்ட இடம்.
- 0 பிரபந்தத்திரட்டு அருளப்பட்ட இடம்.
- 0 வள்ளலார் வருகை புரிந்த இடம்.
- 0 வள்ளலாரின் பொற்பாதுகைகள் உள்ள இடம்.
- 0 சன்மார்க்கர்கள் எந்நாளும் கூடுகின்ற இடம்.
- 0 வள்ளலாரின் நேர் பார்வையில் உள்ள இடம்.



காரணப்பட்டு - திருமதி.ஜெயந்தி ராமலிங்கம் அவர்கள் தலைமையில் பணி நடைபெறுகின்றது.

திரு.கே.வி.எஸ்.இராமலிங்கம்
நிலவள வங்கித் தலைவர் - கடலூர்.
9443090017 / 9943111045

பொருளுடைய அருளாளரகள் தங்கள் நிதியினை கீழ்காணும் பெயரில் காசோலை (Cheque) அல்லது வரைவோலை (DD) அனுப்பி வைக்குமாறு கேடுக்கொள்கிறோம்.

T.M.RAMALINGAM
No.73-B, Sankaranaidu Street,
Thirupathiripuliyur, Cuddalore - 607002.

அல்லது கீழ்காணும் வங்கியில் நேரடியாகவோ மின்மாற்றம் மூலமாகவோ உங்கள் தொகையினை செலுத்தலாம்.

Account Name: KARANAPPATTU SA.MU.KANDHASAMY PILLAI 5S TRUST
Account No.: 63201010000103
Bank Name & Branch: Syndicate Bank, Cuddalore Branch
IFSC Code: SYNB0006320
Further Contact: 9445545475 / vallalarlive@live.com


தாயின் பாதுகாப்பில் குழந்தை இருப்பது போல இறைவனின் தெய்வீக பாதுகாப்பில் பக்தன் இருக்கும் நிலையே சரணாகதி.

நன்கொடை வழங்கியமைக்கு நன்றி

ச.மு.க. அருள் நிலைய கட்டடப்பணிக்காக 05-04-2016 அன்று கருங்குழி திரு.இரா.பிரபு அவர்களிடமிருந்து ரூபாய் 500/- கிடைக்கப்பெற்றோம்.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி
சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை
வடலூர்
ஜோதி தரிசன திருநாள் அட்டவனை-2016-17

தேதி	கிழமை	பூசம்
14-04-2016	வியாழன்	மாதப்பூசம்
.12-05-2016	வியாழன்	மாதப்பூசம்
.08-06-2016	புதன்	மாதப்பூசம்
.05-07-2016	செவ்வாய்	மாதப்பூசம்
.02-08-2016	செவ்வாய்	மாதப்பூசம்
29-08-2016	திங்கள்	மாதப்பூசம்
25-09-2016	ஞாயிறு	மாதப்பூசம்
23-10-2016	ஞாயிறு	மாதப்பூசம்
19-11-2016	சனி	மாதப்பூசம்
16-12-2016	வெள்ளி	மாதப்பூசம்
13-01-2017	வெள்ளி	மாதப்பூசம்
.10-02-2017	வெள்ளி	தைப்பூசம்
.08-03-2017	புதன்	மாதப்பூசம்
.05-04-2017	புதன்	மாதப்பூசம்
24.05.2016	செவ்வாய்	தருமச்சாலை துவக்க நாள்
05.10.2016	புதன்	வள்ளலார் வருகை
23.10.2016	ஞாயிறு	கொடிகட்டுதல்-சித்திவளாகம்
12.02.2017	ஞாயிறு	திருவறை தரிசனம்



வாசகர் கவனத்திற்கு...



இந்த மின்னிதழ் பற்றி வாசகர்களின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் கருத்துக்கள் மின்னிதழில் வெளியிடப்படும். சன்மார்க்க அன்பர்களின் கட்டுரைகள், கவிதைகள் வரவேற்கப் படுகின்றன. வேலைவாய்ப்பு செய்திகள், சன்மார்க்க நிகழ்ச்சிகளின் செய்திகள், மணமகன்-மகள் தேவை விளம்பரங்கள் (சுத்த சைவ உணவாளர்கள் மட்டும்), மற்ற சேவை சார்ந்த விளம்பரங்கள் எதுவாக இருப்பினும் இந்த மின்னிதழில் வெளியிட திட்டமிட்டுள்ளோம். அனைத்து சேவையும் இலவசமாகவே வெளியிடப்படும். உங்கள் விளம்பரங்களை தட்டச்சு செய்து vallalarlive@live.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். உங்கள் ஆக்கங்கள் வெளியிடப்படும். நன்றி.

சுத்த சன்மார்க்க திருமுறைகளில் "ஏழாம் திருமுறை" ச.மு.க. அவர்களின் "பிரபந்தத்திரட்டு" வாங்கி விட்டீர்களா?

வள்ளலாரைப் புரிந்துக்கொள்ளுங்கள்



சுத்த சன்மார்க்கர் திரு.மு.பாலசுப்பிரமணியன்

— தொடர்ச்சி 6 —

20. வள்ளலார் எல்லா உடம்புகளிலும் புகுந்து கொண்டார் என்று சிலர் கூறுவது சரியா?

சரியல்ல. முன்பே கூறியது போல 1873 கார்த்திகை மாதம் பௌர்ணமியன்று, தான் வழிபட்டு வந்த திருவிளக்கை வெளியில் வைத்துக் கீழே தந்துள்ளவாறு உபதேசித்தார்கள்.

"இதைத் தடைபடாது ஆராதியுங்கள். இந்தக் கதவை சாத்திவிடப் போகிறேன். இனி கொஞ்சகாலம் எல்லோரும், ஆண்டவர் இப்போது தீப முன்னிலையில் விளங்குகிறபடியால் உங்களுடைய காலத்தை வீணில் கழிக்காமல் நினைந்து நினைந்து என்று தொடக்கமுடைய 28 பாசுரமடங்கிய பாடலிற் கண்டபடி தெய்வ பாவனையை இந்தத் தீபத்தில் செய்யுங்கள். நான் இப்போது இந்த உடம்பிலிருக்கின்றேன். இனி எல்லா உடம்புகளிலும் புகுந்து கொள்வேன்." இவ்வாறு கூறி அறைக்குள்ளே சென்ற வள்ளலார் யாது காரணம் பற்றியோ மீண்டும் வெளிவந்து மார்கழி மாதம் முழுவதும் பிரசங்கம் செய்தார். பின்னர் தை மாதம் மறுபடி அறைக்குள் நுழைந்து கொண்டார். கார்த்திகை மாதம் எல்லா உடம்புகளிலும் புகுந்து கொள்வேன் என்று கூறினாலும் அவர் வெளியே வந்து விட்டதால் அவ்வாறு செய்யவில்லை என்று உணர் வேண்டும். அவர் எல்லா உடம்புகளிலும் புகுந்து கொண்டிருந்தால் அவரால் வெளிவந்திருக்க முடியாது. அவர் தேகம் அணு அணுவாகச் சிதைந்து எல்லா உடம்புகளிலும் புகுந்து கொண்டால் அவர் மரணமிலாப்பெரு வாழ்வு பெற்றது பொய்யாகிவிடும். மரணமில்லாப் பெருவாழ்வு பெற்ற வள்ளலார் நமக்குத் துணையாய் ஞான தேகத்துடன் தன்னிச்சை போல் இயங்கி வருகிறார் என்பதே உண்மை.

21. அப்படி என்றால் எல்லா உடம்புகளிலும் வள்ளலார் புகுந்து கொண்டார் என்று இன்றும் சிலர் பேசி வருவது பற்றி...

கார்த்திகை மாதம் பௌர்ணமியன்று வள்ளலார் கூறிய வாசகத்தையும் தை மாதம் திருக்காப்பிட்டுக் கொண்ட போது வெளியிட்ட வாசகத்தையும் திருவருட்பா புத்தகத்தில் ஒரே பக்கத்தில் அச்சிட்டு விட்டதால் எந்த நாளில் எதைச் சொன்னார் என்று சரியாகக் கவனியாமல் இரண்டு வாசகங்களும் திருக்காப்பிட்டுக்கொண்ட அன்று வெளியிட்டவை என்ற தவறான எண்ணந்தான் இப்படிக் கூற வைக்கின்றன. நாளோடு ஒப்பிட்டுச் சரியாக ஆய்வு செய்தால் உண்மை விளங்கும்.



22. அப்பர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் போன்றோர் எப்படித் திரும்பவருவார்கள் என்ற பேச்சிற்கே இடமில்லையோ, அது போல் வள்ளலாரும் திரும்ப வருவார் என்ற பேச்சிற்கே இடமில்லையென்று திரு ஊரன் அடிகள் போன்ற சன்மார்க்கப் பெரியோர்களே! பேசியும், எழுதியும் வருகின்றார்களே அதுதான் உண்மையா?

அதில் ஒரு பாதி உண்மை, ஒரு பாதி சரியல்ல. அதாவது 'அப்பர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் போன்றோர் திரும்ப வரமாட்டார்கள் என்று அவர் கூறியது உண்மையே. ஏனெனில் அவர்கள் உண்மையில் மனிதரல்லர் என்றும் தத்துவங்களே என்றும் வள்ளலாரே கூறுகிறார். எனவே அவர்கள் வரமாட்டார்கள்.

05.10.1823-ஆம் ஆண்டு தவச்சீலன் இராமையபிள்ளைக்கும் தவத்திருமகள் சின்னமைக்கும் பிறந்த வள்ளலார் சரித்திர நாயகர், வரலாற்று மனிதர், எனவே அவர் வருவார்.

ஏற்கனவே விளக்கியுள்ளது போல வள்ளலார் பலமுறை மறைந்திருக்கிறார். ஒவ்வொரு முறையும் வெளிவந்திருக்கிறார். அப்போது அடிக்கடி வெளிவந்தார். இப்போது கொஞ்ச காலதாமதம் ஆகிறது. அதாவது மறைந்த நாள் முதல் - தோன்றிய நாள்வரை

உள்ள இடைவெளி அப்போதெல்லாம் குறைவாக இருந்தது. இப்போது கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. இதுவே உண்மை.

23. வள்ளலார் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

எதற்காக ஆண்டவர் அவரை நம்மை விட்டுவரச் சொன்னாரோ அந்தப் பணியைச் செய்து வருகிறார். நமக்காகப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார். அடுத்த வினாவின் விடையைக் கவனியுங்கள்.

24. தான் திரும்பி வருவதாக எங்காவது வள்ளலார் கூறியிருக்கிறாரா?

22.10.1873-ஆம் ஆண்டு புதன் கிழமை காலை 08 மணிக்கு மேட்டுக்குப்பத்தில் சன்மார்க்கக் கொடி கட்டி உபதேசம் செய்து ஆற்றிய பேருரையில் அவர் கூறிய வாசகம் இதுதான், "இப்போது நீங்கள் இது வரைக்கும் ஒழுக்கத்திற்கு வராமல் எவ்வளவு தாழ்ந்த மனுஷ்யர்களாயிருந்தாலும் சாலைக்குப் போகக் கொஞ்ச தினமிருக்கிறது. அதற்குள்ளாக நீங்கள், நீங்களும் நல்லொழுக்கத்திற்கு வருவதோடுகூட மற்றவர்களையும் நமது ஒழுக்கத்திற்கு வரும்படி எவ்விதத் தந்திரமாவது செய்து நம்மவர்களாக்கிக் கொள்ள வேண்டியது. நீங்கள் கொஞ்ச தினத்திற்கு அப்படிச் செய்து கொண்டிருங்கள். நானும் ஆண்டவரிடத்தில் இவ்வுலகத்திலுள்ள எல்லா ஜீவர்களும் நன்மையடையப் பிரார்த்தித்தும் ஆண்டவரிடத்தில் கேட்டுக் கொண்டும் வருகின்றேன். ஆதலால் நீங்கள் அப்படி செய்து கொண்டிருங்கள்."

எல்லாத் தெய்வங்களையும் அருட்பெருஞ்ஜோதிச் சாயலாக ஏன் வணங்கக்கூடாது?

தான் வருவதாக வள்ளலார் அளித்த வாக்குறுதியும் அதுவரை நாம் செய்ய வேண்டிய பணி இன்னதென்பதையும் மேற்குறித்த வாசகங்களிலிருந்து அறியலாம். அவர் அப்படிக் கூறியது 22.10.1873-ஆம் ஆண்டு புதன் கிழமை காலை 08 மணிக்கு மேல்.

25. வள்ளலாரின் ஞானதேகத்தை நம்மால் பார்க்க முடியுமா?

"காரணப் பிரகிருதி மகா காரணப் பிரகிருதி அங்கங்கள் மனதிற்கே விஷயமாகுமென்றும் இவை சாதாரண லட்சணம்

என்றும் அசாதாரண லட்சணத்தில் கண்ணறிவு பலமுறை சாதன லட்சியத்தால் நுட்பறிவாகி மனதிற்கு விஷயமாகின்ற காரண மகாகாரணப் பிரகிருதி அங்கங்களையும் அறியும் என்றும், இவ்வாறு அறிவது சாத்தியமே என்றும் இதனை யோக சாதன முதலிய வழிகளாலும் தத்துவ சாத்திரங்களாலும் அனுமான முதலிய பிரமாணங்களாலும் அறிந்து கொள்ளலாம்" என்றும் வள்ளற் பெருமானார் தம்மிடம் வாதிட்ட பிரம்ம சமாஜம் சம்பேடு ஸ்ரீதர நாயக்கர் அவர்களிடம் கூறியுள்ளார். சாதனா சகாயத்தால் கண் நுட்ப அறிவு பெறுமானால் காணலாம்.

26. எல்லாத் தெய்வங்களையும் உன் சாயையாகவே கண்டேன் என்று வள்ளலார் பாடுகின்றார். நாமும் அதே போல எல்லாத் தெய்வ உருவங்களையும் அருட்பெருஞ்ஜோதிச் சாயலாக ஏன் வணங்கக்கூடாது?

பல தெய்வ உருவங்கள் உள்ள வரையில் சமய மதங்கள் இருந்தே தீரும். சமரசம் ஏற்படவே முடியாது.

"ஒளி" ஒன்றே அண்ட பகிரண்டங்கள் எல்லாம் விளங்கி ஓங்குகின்றது என்று வேதாகமங்கள் கூறுவது சத்தியமான வார்த்தை - இதை மனதிலே கொண்டு மண் பாத்திரம் - மர வட்டில் - களைக்கற் சட்டி மற்ற சில கருவிகள், தெளிந்த தண்ணீர் மேலும் சில ஜீவர்கள் ஓர் இருட்டறையில் தனித்தனியாகச் சேர்த்தாலும் அந்த அறையில் இருள் நீங்கி ஒளி காண முடியுமா? அப்படி ஒளி காண முடியுமானால் அருட்பெருஞ்ஜோதி சாயையாக எல்லாத் தெய்வங்களையும் காண முடியும். உண்மையில் அந்த இருட்டறையில் மேற்குறித்த பொருள்களால் ஒளி காண முடியாது." இதுவே இந்த வினாவிற்கு வள்ளலாரின் பதிலாகும்.

ஏற்றிடுவே தாகமங்கள் ஒளிமயமே எல்லாம்
என்றமொழி தனைநினைத்தே இரவில்இருட் டறையில்
சாற்றிடுமண் பாத்திரத்தை மரவட்டில் களக்கல்
சட்டிகளை வேறுபல சார்ந்தகரு விகளைத்
தேற்றமிகு தண்ணீரைச் சீவர்கள்பற் பலரைச்
செப்பியஅவ் விருட்டறையில் தனித்தனிசேர்த் தாலும்
ஊற்றம்உறும் இருள்நீங்கி ஒளிகாண்ப துளதோ
உளதேல்நீ உரைத்தமொழி உளதாகும் தோழி.

-திருவருட்பா-5698

எனவே எந்தச் சாயையாகவும் சமயத் தெய்வங்களை வழிபாடு செய்தல் அவசியமல்ல.

27. அறிவு விளக்கம் பெற்றவர்கள் என்பதற்கு என்ன அடையாளம்?

தெய்வங்கள் பலப்பல உண்டென்று நம்புவோரும் - கைலாயம், வைகுண்டம், சாலோகம், சாமீபம், சாருபம், சாயுச்சியம் போன்ற பதவிகள் உண்டென்று நம்புவோரும் - புராணங்கள், இதிகாசங்கள் போன்று கற்பனையாக எழுதப்பட்ட நூல்களையே கூறி வருவோரும் - பல சமயங்களும் பொய்யென்றுணராமல் அவற்றை மெச்சிப் போற்றி வருவோரும் திருவருள் விளக்கமில்லாதவர்கள் என்றும் விளக்கம் கூறி அவர்க்கெல்லாம் அறிவு தர வேண்டும் என்று வள்ளலார் வேண்டுகின்றார்.

தெய்வங்கள் பலபல சிந்தைசெய் வாரும்
சேர்கதி பலபல செப்புகின் றாரும்
பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும்
பொய்ச்சம யாதியை மெச்சுகின் றாரும்
மெய்வந்த திருவருள் விளக்கம்ஒன் றில்லார்
மேல்விளை வறிகிலர் வீண்கழிக் கின்றார்
எய்வந்த துன்பொழித் தவர்க்கறி வருள்வீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே.
-திருவருட்பா-4726

சாகாத கல்வியே கல்வி. ஒன்றே சிவம் தான் என அறிந்த அறிவே தகுமறிவு என்று பாடுகிறார்.

ஒன்றே தெய்வம் என்று அறிந்தோரே அறிவு விளக்கம் பெற்றவர்கள்.

28. ஆடேடி பந்து ஆடேடி பந்து என்ற கீர்த்தனைப் பாடலில் ஈரமும் அன்புங் கொண்டு இன்னருள் பெற்றேன் என்று பாடுகிறார். ஈரம் என்பதற்கும் அன்பு என்பதற்கும் என்ன வேறுபாடு?

ஒரு ஜீவன் மற்றொரு ஜீவன் மீது காட்டும் பரிவைத்தான் வள்ளலார் தயவு, கருணை, ஈரம், பாசம், பரிவு என்றெல்லாம் குறிப்பிடுகின்றார். அன்பு என்பது நாம் எண்ணிக்கொண்டிருப்பது போல் ஒருவர் மற்றவர் மீது காட்டும் பாசம் என்று கூறாமல் இறைவன் மீது காட்டும் பக்தியே அன்பு என்று கூறுகிறார் வள்ளலார்.

ஒழிவிலொடுக்கம் என்ற கண்ணுடைய வள்ளலின் நூலின் சிறப்புப் பாயிரத்துக்கு விருத்தியுரை செய்து வெளியிட்ட போது 'அன்பர் என்ற சொல்லுக்குப் பொருள் - புகழாதியைக் குறித்துப் பயில்வோரை நீக்கிச் சிவானந்தம் எந்நாள் அடைதும் என்று இடைவிடாது அதனையே விரும்பிப் பயில்வோரைக் குறித்த தென்றுணர்க" என்று கூறுகிறார். சிவானந்தம் என்றைக்குக் கிடைக்கும் என்று அதனையடையச் சாதகம் செய்யும் தவமுடையோரைத்தான் அன்பர் என்று வள்ளலார் குறிப்பிடுகின்றார். தான் எழுதிய ஒவ்வொரு கடிதத்திலும் ஜீவர்களிடத்துத் தயவும் கடவுளிடத்து அன்பும் மாறாது இருக்க வேண்டும் என்று வள்ளலார் எழுதுகிறார். ஜீவர்களிடம் காட்டுவது தயவு கடவுளிடம் காட்டுவதே அன்பு. இனியாவது அருட்பாவில் அன்பு என்ற சொல்லுக்கு இறைவன் மீது கொள்ளும் பக்தி என்று பொருள் கொள்ள வேண்டும்.

அன்பு என்ற சொல்லுக்கு இறைவன் மீது கொள்ளும் பக்தி என்று பொருள்

ஈரம், இரக்கம், தயவு கருணை, பரிவு, பாசம் - ஒரு ஜீவன் மற்றொரு ஜீவன் மீது காட்டுவது.

அன்பு என்பது நாம் இறைவன் மீது கொள்வது.

அருள் என்பது இறைவன் நம்மீது காட்டுவது.

(தொடரும்)

2016- மே மாதம்-மாதப் பூச நாள்
12-05-2016 - வியாழக் கிழமை

சன்மார்க்கக் குரவர் நால்வர்

காரணப்பட்டு ஐயா

தவத்திரு.சீனி.சட்டையப்பர்

தொடர்ச்சி 6

பெருமான் நோக்கும் பிணியின் போக்கும்:-

அண்டகோடிகளெல்லாம் விரும்பி அருகில் சென்று வணங்கத் தக்க அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராம் வள்ளலைக் கண்டிட்டார். கந்தசாமியார் சிந்தை தெளிந்து கண்ணீர் சிந்திட்டார். கைகள் தலை மீது குவிய கால்கள் தள்ளாட அடியற்ற மரம்போல் வள்ளல் திருவடிகளில் விழுந்து வணங்கினார். அவ்வமயம் காரணப்பட்டாருக்கு வயது 21 ஆகும். வள்ளலாருக்கு வயது 36 ஆகும். அடிகளார் சென்னை வாழ்வை நீத்து கருங்குழியில் உறையத்துவங்கிய ஓராண்டில் அதாவது 1859 - ஆம் ஆண்டில் கருங்குழியில் தமது சற்குருநாதரின் முதல் தரிசனம் கிட்டியது.

காரணப்பட்டார் தாம் பாடிய "இயற்கையுண்மை ஆனந்தக் கண்ணி"யின் 9 1 -வது கண்ணியில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளதிலிருந்து இதனை நாம் அறியலாம். கோதல் என்றால் பழுது எனப்பொருள். நோயினால் பழுதடைந்த என்னை எழு மூன்று இருபத்தோறு வயதில் ஆண்டுக்கொண்ட இராமலிங்கரே! என வியக்கிறார்.

கோதிலெழு மூன்று வயதினி லெனையாட்
- கொண்டருள் ராமலிங்கம் (2084)

தனது உடல் குறையினை எடுத்துவிளம்பினார். நம்பெருமானாரும் திருநீறு தந்திட்டார். உடம்பெலாம் பூசப்பணித்திட்டார். அவ்வாறே கந்தசாமியார் திருநீற்றைப் பெற்று உடம்பெலாம் பூசினார். என்ன வியப்பு! அவருக்கு அல்லல் தந்து வந்த மயக்கம் மாய்ந்தது. உடல் நடுக்கமும் தலை சுற்றலும் ஓடியது.

இத்தகு அருஞ்செயல் புரிந்த பெருங்கருணை நிதியாகிய வள்ளற்பெருமானை வாயார வாழ்த்தி வணங்கிநின்றார் கந்தசாமி, நெஞ்சாரப் புகழ்ந்து விழி நீர் சிந்தியது. அவர் நிலை கண்டு அப்போது நம்பெருமான் 'உமக்குத் தக்க உத்தியோகம் தருவோம்' என்று உரைத்து, உடன் ஊர் திரும்பிச் செல்லவும் உத்தரவு தந்தார்.

திருவருட்பா நான்கு திருமுறைகள் படி ஒன்றினைத் தந்தருளினார்.

வள்ளலாரிடம் பாதரட்சை பெறுதல்:-

பெருமானாரின் பெருமைகள் தன்னளவிலும் உலகளவிலும் பரவுவதை உணர்ந்த காரணப்பட்டார், சித்திவளாகத்திற்குச் சென்று வள்ளற்பெருமானிடம், தாம் சந்தன மரத்தால் செய்து எடுத்துச்சென்ற பாதரட்சையை அணியச்செய்து அழகுபார்த்தார். சிலவருடங்கள் அதனை நம்பெருமானார் அணிந்திருந்தனர். பிறகு காரணப்பட்டார், அந்த பாதரட்சையை அடியேனுக்கு வழங்கவேண்டும் என வள்ளற்பெருமானிடம் பிரார்த்தனை செய்தார். அடிகளாரும் அவரது மனநிலை அறிந்து அதற்குச் சம்மதித்தார். மேலும் வெளியீடு கண்டிருந்த திருவருட்பா நான்கு திருமுறைகள் படி ஒன்றினைத் தந்தருளினார். அந்த பாதக்குறட்டினை காரணப்பட்டில் உள்ள தமது வீட்டிற்கு எடுத்துவந்து அதனை தினமும் பூசைசெய்து வழிபட்டுவந்தார். ச.மு.க. அவர்களின் நிழற்படத்தில், வலதுகையில் அருட்பிரகாசர் அளித்த திருவருட்பாவினை தனது மார்போடு அனைத்துக்கொண்டிப்பதைக் காணலாம்.

அருட்பிரகாசர் அற்புத அந்தாதியில் 58-ஆம் செய்யுளில் வள்ளலாரின் பாதரக்ஷையினைப் பற்றி இந்நூலாசிரியரின் விளக்கம் கீழ்வருமாறு உள்ளது,

மிதித்திடும் பாதரட் சைக்குட் பொதிந்த விதிமதிக்குட்
கதித்திடும் லிங்கம் புடமின்றித் தீயினிற் கட்டியதேல்
மதித்திடும் பேர்களெங் குள்ளார்நின் றேக மகத்துவத்தைத்
துதித்திடும் பேயேன் பிணிதீர்த் தருள்மிகு தூயவனே. (1613)

"வள்ளலார் அணிந்திருக்கும் பாதரக்ஷைகளை இரண்டு மாதத்திற்கு ஒருமுறை ஒவ்வொருவர் எடுத்துக்கொண்டு போய்ப் போற்றி அதில் லிங்கத்தை வைத்துக்கட்டி வைப்பார்கள். சிலநாள் கழித்து எடுத்துப்பார்த்தால் லிங்கம்கட்டி யிருக்கும்; எடுத்து நெருப்பிலிட்டால் உருகிப் புகைந்து போகாது. இதனால் சுத்ததேகம் பெற்றதன் இலக்கணம் புலனாகின்றது."

துறவும் உறவும்:-

கந்தசாமியார் உளம் மகிழ்ந்து ஊர் திரும்பினார். ஆனால் அங்கு சென்ற அவர் உளம் திரும்பவில்லை. திருவருட்பா சிந்தை கவர்ந்தது. ஓத ஓத உள்ளம் குழைந்தது. வள்ளற் பெருமான் முன் இருந்து பாடுவதை போல் உணர்வு இருந்தது. நாட்டமெல்லாம் மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகை முன் நின்றது. வள்ளல்பால் சென்றது. இவர் எண்ணமெல்லாம் பெருமானையே வலம் வந்து கொண்டிருந்தது.



எனவே இவர் துறவு பூண்டு குடும்பத்தை விட்டு நீங்கி மேட்டுக்குப்பத்திற்கு வரத்துணிந்தார். இதுப்பற்றி குடும்பத்தில் தெரிவித்தார். குடும்பத்தார் பெரிதும் கலங்கினர். இவர் செல்வதற்கு முன்னர் குடும்பத்தினர் மேட்டுக்குப்பம் சென்றனர். வள்ளற்பெருமானிடம் கந்தசாமியார் நிலை குறித்து முறையிட்டனர்.

பெருமான் 'உலகம் பிரமிக்கத் துறவு பூண வேணாங்காணும்; அருந்தல், பொருந்தல் முதலிய ஜீவகாருண்யமுள்ள சமுசாரிகளாகிய இல்லறத்தார் எல்லாம், அந்த அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் அருளுக்கு நூற்றுக்கு நூறு பங்கு முழுவதும் உரியவர் ஆவார்கள் இது பொய்யன்று,' என்று கூறியருளிக் குடும்பத்தில் சேர்ந்து வாழவழிகாட்டினார். பெருமான் வாக்கினைத்

தலைமேற்கொண்டு சென்றிட்டார் கந்தசாமியார். அவ்வாரே காரணப்பட்டுக்குச் சென்று குடும்பத்தோடு வாழ்ந்து வந்தார். பெருமான் நினைவாகவே இருந்து வந்தார். இவர் உள்ளமாகிய இரும்பு பெருமானாகிய காந்தத்தை நோக்கி நகர்ந்து கொண்டே இருந்தது. சில நாட்கள் சென்றன. இவரின் துணைவியார் தங்கம் உயிர் நீத்தார்.

வடலூரில் தங்கல்:-

அவர் மனம் எல்லாம் வல்ல வள்ளற் பெருமானுடன் சேர்ந்து வாழ்வதையே விரும்பியது. அதனால் வீட்டாரிடம் சொல்லிக் கொண்டு அவர் தம் ஒரே மகள் ஜானகியை உடன் அழைத்துக்கொண்டு வடலூர் வந்து சேர்ந்தார். ஒரு குடில் அமைத்து கொண்டு அதில் தங்கினார். சங்கப்பணிகளிலும், சாலைப்பணிகளிலும் அன்பர்களோடு சேர்ந்து ஈடுபட்டார். மேட்டுக்குப்பத்தில் பெருமானைக் கண்டு வணங்கி வழிபட்டு நியமங்களைக் கடைபிடித்தார்.

பெருமான் முன்னிலையில் கந்தசாமியார் இசையோடு திருவடிப்புகழ்ச்சியைப் பாடினார்.

திருவடிப் புகழ்ச்சி:-

அன்று சித்திவளாகத்தில் வழிபாடு நடந்தது. பெருமான் முன்னிலையில் அன்பர்கள் கூட்டு வழிபாடு செய்தனர். கந்தசாமியார் இசையோடு திருவடிப்புகழ்ச்சியைப் பாடினார். வள்ளற் பெருமானையே வழிபடு கடவுளாகக் கொண்டு ஒழுகியதால் நெகிழ்ச்சியோடு அப்பாடல் ஒலித்தது. இசையறிவு தனக்கு மிகுதியும் உள்ளது என்னும் கருத்தும் அவருள் பதிந்திருந்தது. அதனை உணர்ந்த வள்ளல் அத்திருவடிப் புகழ்ச்சியைப் பல இசைகளில் பாடிக்காட்டி மகிழ்வித்தார். அது கண்டு திகைத்தார் கந்தசாமி. இப்படியெல்லாம் பாடமுடியுமா என்று வியந்தார்.

சன்மார்க்கத்தில் இசைக்கருவிகள்:-

இசைஞானம் மற்றவர்களை விடக்கூடுதலாகவே கந்தசாமியாரிடம் இருந்தது. அருட்பாவைப் பாடப்பாட அது மிகுந்தது. பல இராகங்களில் பல உருப்படிகளில் அது வெளிப்பட்டது. பாட்டுக்கு ஏற்றபடி கருவிகள் கொண்டு பாடினால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்று நம்பினார். நண்பர்கள் துணை கொண்டு பலகருவிகளை இசைத்துக்கொண்டு பாடவும் முனைந்தார். அதுகண்டு வள்ளற்பெருமான் கந்தசாமியாரைத் தன் முன்னிலைக்கு அழைத்தார். 'மனங்கசிந்துருகவே பாடல் பாடவேண்டும். இசைக்கருவிகள் கொண்டு பாடுவதால் மனம் உருகாது, உணர்ச்சி பெருகாது, சன்மார்க்கத்திற்கு இசைக்கருவிகள் தேவையில்லை. இசைக்கருவிகள் இல்லாமலே மனம் உருகபாடி வழிபடுங்கள்' என்று விளக்கியருளினார். எவ்வெப்பாடல்களை எப்படி எப்படிப் பாடவேண்டும் என்றும் சொன்னார்.

இறைவனின் நிறைபுகழையும் நம்குறை இழிவினையும் வகைப்படுத்தித் தெளிவாக பாட வேண்டும் என்பதையும் உணர்த்திட்டார்.

சமரச பஜனை:-

சமய மதங்களுக்கிடையே சமரசம் காண்பதே சன்மார்க்கம். எனவே வழிபாடும் சமரசமாகவே இருக்க வேண்டும் அல்லவா? கந்தசாமியார் சமரச பஜனை பாடவே விரும்பினார். பொது நோக்கம் அப்பொழுதுதான் உண்டாகும். எல்லோரும் விரும்புகின்ற பாடலையே பாடினார். அதற்குச் “சமரச பஜனை” என்று பெயரிட்டார், அன்பர்கள் பலரையும் அச்சமரச பஜனை வழிபாட்டில் ஈடுபடுமாறு அழைத்தார். உணர்ச்சி பொங்கப்பாடிப் பரவினார். பாடுகையில் அவரும் உருகினார். பிறரையும் உருகச் செய்தார்.

வழிபாட்டுப் பொறுப்பு:-

பெருமான் திருக்காப்பிட்டுக் கொள்ளும் காலம் நெருங்கிக் கொண்டிருந்தது, அன்பர்களையெல்லாம் அழைத்தார். சாலைப் பொறுப்பை கல்பட்டு ஐயா பார்த்துக்கொள்ள வேண்டும். சங்கப்பொறுப்புகளைத் தொழுவூரார் பார்த்துக்கொள்ள வேண்டும், ஞானசபை, தருமச்சாலைகளில் நடைபெறும் வழிபாட்டுப் பொறுப்பைக் காரணப்பட்டார் பார்த்துக்கொள்ளவேண்டும், சித்திவளாகம் விளக்குப் பார்க்கும் பொறுப்பை சேலத்து ஞானாம்பாள் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டருளினார்.

காரணப்பட்டாருக்கு வழங்கிய பொறுப்பை மிகஒழுங்காக நடத்தி வந்தார். ஞானசபை வழிபாடு இவரது மேற்பார்வையில் நடைபெற்றாலும் சபாபதி குருக்களை கட்டுப்படுத்த முடியாமல் போனது, அங்கு விக்கிரக வழிபாடு நுழைந்தது. இதனையே தமது குருநாதரிடம் "சற்குரு வெண்பா அந்தாதி" யில் புலம்புகிறார்,

தமிழ்நாடு முழுவதும் சங்கங்கள் தோன்றின. வழிபாடுகள் தோன்றின. அன்னதான அமைப்புகள் தோன்றின.

சாற்றுங்கூ டாவொழுக்கஞ் சந்நிதியில் வந்துசெய்வோர்
போற்றும் பணியும் பொருந்துமோ - வேற்றூனைத்
தின்போருஞ் சிற்சபைக்குட் செல்லுவதோ சற்குருவே
யென்போருக் கென்சொல்லு வேன். (962)

சாலை வழிபட்டை வள்ளற்பெருமான் கட்டளையிட்டவாறு தொடர்ந்தார், சாலையில் செய்யும் வழிபாடு எப்படி செய்வது, வலம் வருங்கால் எங்கெங்கு நின்று என்னென்னப் பாடல்கள் பாடவேண்டும், என்றெல்லாம் வகுத்துக் கொண்டு அன்பர்களோடு சேர்ந்து சமரச பஜனையாக அவ்வழிபாட்டை நடத்தி வந்தார்.

தமிழகப் பயணம்:-

வள்ளற் பெருமான் சித்திவளாகத் திருமாளிகையில் திருக்காப்பிட்டுக் கொண்டு மறைந்து அருளினார். இவரோ தமிழகம் முழுவதும் சன்மார்க்க சங்கங்களை அன்பர்கள் மூலம் பல ஊர்களிலும் நிறுவினார். கொடியேற்றிவைத்து கொள்கைகளை விளக்கினார். ஒவ்வோர் ஊரிலும் சமரச பஜனை செய்தார். தன் மகள் ஜானகியையும் பஜனைக் குழுவில் இருந்து கொண்டு பாடச் செய்தார். இதனால் தமிழ்நாடு முழுவதும் சங்கங்கள் தோன்றின. வழிபாடுகள் தோன்றின. அன்னதான அமைப்புகள் தோன்றின. வடலூரோடு அனைவரும் தொடர்பு கொண்டுஇருக்கவும் செய்தனர். சாலைக்குப் பொருள்கள் கொண்டுவந்து தந்தனர். ஆன்மநேய ஒருமைப்பாடு ஏற்பட்டது.

(தொடரும்)

இந்து மதம் எங்கே போகிறது?



(அக்னிஹோத்தரம் ராமானுஜ தாத்தாச்சாரியார்)

-தொடர்ச்சி - 10

வேதத்தில் சிவன் தான் மையப்படுத்தப்பட்டிருக்கிறார் என்பதை நிறுவ அப்பய்ய தீட்சிதர் நீலகண்ட விஜயம் எனும் நூல் உட்பட பல புஸ்தகங்களை எழுதினார்.

தீட்சிதரும் பிராமணர்தான். ஆனாலும் சிவனே வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற கடவுள் என அப்பய்ய தீட்சிதர் வரையறுத்ததற்கு ஏகப்பட்ட எதிர்ப்புகள் எழுந்தன.

வேதாந்த தேசிகன் உள்ளிட்ட வைஷ்ணவ வித்வான்கள் இதனை கடுமையாக எதிர்த்தனர்.

வேதத்தில் கர்மகாண்டம், ஞான காண்டம் என இரண்டு பிரிவுகள் உண்டு. கர்மாக்களை எப்படிச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றியது கர்ம காண்டம். கர்மாக்களை செய்தால் மட்டும் மோட்சம் கிடைத்துவிடாது. அதற்கு பகவான் நாராயணனை வழிபட வேண்டும். அப்போதுதான் மோட்சம் கிடைக்கும் என சொல்வது வேதத்தில் ஞான காண்டம் என அழைக்கப்படுகின்ற உபநிஷது.

இந்த உபநிஷத்திலுள்ள ஸ்லோகங்களை அடிப்படையாக எடுத்து வைத்துக்கொண்டு வேதத்தில் நாயகன் நாராயணனே என வைஷ்ணவ பிராமணர்கள் வாதிட்டனர்.

'நாராயணம் மகாக்நயம் விஸ்வாத்மானாம் பராயணம்
நாராயண பரம்ப்ரம்ஹா தத்வம் நாராயணா பரஹா...'

என்கிறது தைத்ரிய உபநிஷது. அதாவது உலகத்தை உய்விக்க ஒரே சக்தி நாராயணன்தான். அவன்தான் அனைத்துலகுக்கும் பரம்பொருள். 'அதனால் நாராயண தத்துவத்தை நாடிச்சென்று வழிபட்டு வழிபட்டு மோட்சத்தைப் பெறுங்கள்' என்கிறது தைத்ரிய உபநிஷத்தின் இந்த ஸ்லோகம்.

'மோட்ச மிச்சேது ஜனார்த்தனாது..." என்ற இன்னொரு ஸ்லோகமும் இதற்கு கட்டியம் கூறுகிறது.

சைவ சம்பிரதாயத்தினர் லிங்க வழிபாட்டை ஏற்றுக்கொள்ள...

வைஷ்ணவ சம்பிரதாயத்தினர் நாராயணனை மட்டும் வழிபடவேண்டும் என வாதிட...

சைவ வைணவ வாத பிரதிவாதங்களால் பிராமணர்களே பிளவுபட்டனர்.

விஷ்ணுவே முழு முதற்கடவுள் என வைணவர்களும், சிவனே முழு முதற்கடவுள் என சைவர்களும் சர்ச்சைகளை ஏற்படுத்தினர். அவைகள் ஒருபக்கம் இருக்கட்டும்.

இப்போது நாம் ஒரு புதியவரை தரிசிப்போம். இன்றுவரை இவரை மையமாக வைத்து ஒரு பக்தி உலகமே சுழன்று வருகிறது. இவர் எழுதியது என்ன?... செய்தது என்ன?... உபதேசித்தது என்ன?... இதெல்லாம் தெரிந்தோ... தெரியாமலோ இவரையே தெய்வமாக வழிபடும் ஓர் ஆன்மிக உலகம்தான் அது.

இவரைப் பின்பற்றும் சீடர்களும் இன்று இருக்கிறார்கள். அவர்களுக்கும் சீடர்கள் இருக்கிறார்கள். ஆன்மீக உலகில் இவரை மையமாக வைத்து ஸ்தோத்ரங்கள் மட்டுமல்ல கோஷங்களும்கூட எழுந்து கொண்டிருக்கின்றன.

யார் இவர்?...

கேரள மாநிலம் திருச்சூரிலிருந்து சில தொலைவு போனால் ஆல்வே... அங்கிருந்து கொஞ்சம் திரும்ப வந்தால் அங்கமாலி என்கிற ஊர். அங்கெ மாலியிலிருந்து சில பல காலடிகள் எடுத்து வைத்து நடந்தால் வருவதுதான் காலடி. தற்போது தமிழ்நாட்டுக்கும் கேராளாவுக்கும் இடையே பிரச்சனைகள் எழும்பியிருக்கும் 'பெரியாறு' நதி அழகாக காலடி வழியாக ஓடிக் கொண்டிருக்கிறது. இயற்கை செழிப்பான இந்த காலடியில் சிவகுரு எனும் பிராமணர் இவருக்கு ஆரியாம்பாள் எனும் பத்தினி. இவர்களுக்கு மகனாக பிறந்து செழுமை பூமியில் தன் மழலை காலடிகளை பதித்தான் சங்கரன். காலடியே இவனைக் கண்டு துள்ளிக் குதித்தது. 'அழகான குழந்தை... கண்ணைப் பாருங்கள் ஞானம் சிரிக்கிறது. காதுகள்

பாருங்கள் உலகத்தையே கேட்பது மாதிரி விரிந்திருக்கிறது...' என பார்த்த ஊர்ப்பெரியவர்கள் எல்லாம் சங்கரனுக்கு திருஷ்டி வைத்தார்கள்.

அப்பாவும், அம்மாவும் சங்கரனைப் பெற்ற மகிழ்ச்சியில் ஆனந்தமாயிருக்க... ஆனந்தம் அக்குடும்பத்துக்கு நிரந்தரமாய் நீடிக்கவில்லை. சங்கரன் சிறு குழந்தையாய் இருக்கும் போதே அவனது அப்பா இறந்து போய்விட்டார்.

அதுவரை அக்குடும்பத்தை கொஞ்சிக் கொண்டிருந்தவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் விலகத் தொடங்கினர். விதவையாய் போன சங்கரனின் அம்மாவை பார்த்தாலே பாபம் என சாஸ்திர சாலையில் நடந்து போனார்கள். சங்கரனின் குடும்பம் ஏழ்மையில் விழுந்தது.



ஆனாலும்... சங்கரனின் ஞானத் தேடலுக்கு ஒரு குறையும் வைக்க வில்லை அவனது அம்மா.

அவனது வயிற்றுப் பசியையும் போக்கி... அறிவுப்பசிக்கும் பல்வேறு சாஸ்திர பண்டிதர்களிடம் சேர்த்து படிக்க வைத்தாள். உள்ளூர் பண்டிதர்களிடம் படித்துக் கொண்டிருக்கும் போதே எட்டு வயதில் சங்கரனுக்கு உபநயன சடங்கை செவ்வனே செய்து வைத்தாள் தாயார்.

இதன்பிறகு சங்கரனின் சாஸ்திர தேடல் வீரியம் கொண்டது. அம்மாவிடம் ஒருநாள் சங்கரன் சொன்னான்.

'அம்மா... உள்ளூர் பண்டிதர்களிடம் படித்தது போதும் அம்மா... நர்மதா நதிக்கரையில் சில பண்டிதர்கள் இருப்பதாக கேள்விப்பட்டேன். அவர்களிடம் பயில்கிறேன்...' அம்மாவிடம் சொல்லிவிட்டு...

பெரியாறு நதிக்கரையிலிருந்து நர்மதா நதிக்கரைக்கு பயணம் செய்தான் சங்கரன். அறிவு நதியில் குளிப்பதற்காக, மூழ்குவதற்காக நர்மதா நதிக்கரையில் கோவிந்தபாதர், பத்மபாதர், கௌடபாதர்

போன்ற வித்வான்களிடம் அங்கேயே வாசம் செய்து கற்ற சங்கரர்... அங்கே பல விஷயங்களை தெரிந்து கொண்டார்.

அவர்கள் உபதேசித்த விஷயங்களை உள்வாங்கிக் கொண்டு யோசிக்க ஆரம்பித்தார். கற்ற வேதம், பகவத் கீதை, பிரம்மசூத்ரம் போன்ற வற்றுக்கெல்லாம் பாஷ்யம் அதாவது உரை எழுதிய சங்கரர்... அப்போது புத்தரையும் வாசிக்க ஆரம்பித்தார்.

புத்தன் சொன்ன ஞானத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். இவ்வுலகில் உள்ள அனைத்தும் பொய்.

அதுவரை அவர் படித்த வேதம், பிரம்ம சூத்ரம், ஆகியவற்றை பற்றியெல்லாம் சங்கரரை மறுபரிசீலனை செய்ய வைத்தது புத்தம்.

புத்தர் சங்கரருக்குள் வெளிச்ச விழுதுகளை இறக்க ஆரம்பித்தார்.

மறுபடியும் மற்ற சாஸ்திரங்களையும் வாசிக்க தொடங்கிய சங்கரர்... இறுதியில் ஒரு தெளிவிற்கு வந்தார்.

புத்தன் சொன்ன ஞானத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். இவ்வுலகில் உள்ள அனைத்தும் பொய். அதுதான் எனக்கு கிடைத்த ஞானம்.

நம் பிறப்பு பொய். வாழ்வு பொய். இவ்வுலகத்தில் ஞானம், அஞ்ஞானம் ஆகிய இரண்டுதான் உண்டு. மற்ற எதுவுமே கிடையாது.

பாம்பு என நினைத்து பழுதை மிதித்து பயப்படுவது போலத்தான், உலக வாழ்க்கையை எண்ணி நாம் பயப்பட்டுக்கொண்டிருக்கிறோம். பழுது என்ற பொய்யான பாம்பு போலத்தான் உலகமும் பொய்யானது. நமது பயமும் பொய்யானது.

'சாப்பிடுகிற சாப்பாடும் பொய்' என தனக்கு கிடைத்த ஞானத்தை ஊருக்கெல்லாம் சொல்ல ஆரம்பித்தார் சங்கரர்.

'வேதம் அது சொன்ன கர்மாக்கள் எல்லாம் பொய் கடவுளைத் தவிர...' என சங்கரர் மேலும் உபதேசம் செய்யச் செய்ய வைதீகர்கள் சங்கரரை எதிர்க்க ஆரம்பித்தனர்.

இதெல்லாம் சங்கரரின் இளமைகாலம். ஆண் பொய், பெண் பொய், அனைவரும் பொய் என்ற சங்கரர் கல்யாணம் பண்ணிக்கொள்ளவும் மறுத்தார். அம்மா எவ்வளவோ சொல்லியும் ஏற்றுக்கொள்ளவில்லை.

இளமை பொங்கும் வயதில் சந்யாசம் போனார். தான் சொன்னவற்றை ஏற்றுக் கொண்ட... உலகையே மாயம் என ஒப்புக்கொள்கிற இளைஞர்களை திரட்டினார் சங்கரர்.

தன் அம்மாவுக்கான கடைசிக் காரியங்களை தான் இதுவரை உபதேசித்து வந்த கருத்துக்களுக்கு மாறாக இருந்தபோதும் செய்து முடித்தார் சங்கரர்.

அவருக்கு முதன்முதலில் கிடைத்தவர்கள் நான்குபேர். ஆனந்தகிரி, சுரேஷ்வரன், பத்மநாபர், ஹஸ்தாமலகர். இவர்கள் தன்னை பின் தொடர ஒவ்வொரு ஊராய் சென்றார். உலகே மாயம் எதுவுமே உண்மையில்லை. எதற்கும் கலங்காதே.

தனது அத்வைதத்தை ஊர் முழுக்க பரப்பினார் ஆதிசங்கரர்.

'எல்லாமே பொய். எதுவும் மெய்யில்லை' என அழுத்திச் சொல்லிக் கொண்டிருந்த ஆதிசங்கரரை அந்த சம்பவம் அழுத்தமாக உலுக்கியது.

"வேதம், கர்மாக்கள் பொய்" என்று சொல்லி பிரச்சாரம் உபந்யாசம் என அருளிக்கொண்டிருந்த ஆதிசங்கரரை அழுத்தமாகப் பாதித்த சம்பவம்.

இளைமைப் பருவத்திலேயே... அவரது தாயாரும் இறந்ததுதான், அனைத்தையும் பொய் என்றபோதும் அன்னையின் இறப்பு சங்கரரை ரொம்பவே பாதித்தது.

வைதீகர்கள் வந்தார்கள். 'பார்ப்பா உன் அம்மாவுக்குரிய இறுதிச் சடங்குகளை நீதான் செய்யவேண்டும். வழக்கம்போல

அதுபொய், இதுபொய் என உளறாதே...' என அவர்கள் பலவந்தப்படுத்தியதையடுத்து தன் அம்மாவுக்கான கடைசிக் காரியங்களை தான் இதுவரை உபதேசித்து வந்த கருத்துக்களுக்கு மாறாக இருந்தபோதும் செய்துமுடித்தார் சங்கரர்.

'இனி நமக்காக, நம்மை நம்பி யாருமில்லை...' என்ற நிலைமை அன்னையின் மறைவிற்குப் பிறகு ஏற்பட்டதால் சந்யாசத்தில் தீவிரமானார் ஆதிசங்கரர். மறுபடியும் ஒவ்வொரு ஊராகச் சுற்றினார்.

சந்யாசம் வாங்க வேண்டியதன் அவசியத்தை ஒவ்வொரு இளைஞனுக்கும் சூடான ஸ்லோகங்கள் மூலம் மூலம் பரப்பினார்.

பிற்பாடு... கேரளாவைத் தாண்டியும் சங்கரர் பயணம் மேற்கொண்டு அத்வைதத்தையும் சந்நியாசத்தையும் உபதேசித்தார் என்றும் சங்கரரின் வாழ்க்கை வரலாற்றில் தகவல்கள் வழிகின்றன.

சங்கரர், சந்யாசிகள் எப்படி வாழவேண்டும் என கடும் நிபந்தனைகளை தனக்கும் விதித்துக்கொண்டு... தன்னைப் பின்பற்றும் அதாவது சந்யாசத்தைப் பின்பற்றும் சீடர்களுக்கும் அதை உபதேசித்தார்.

சந்நியாசியானவன் தனக்கென எதுவும் வைத்திருக்கக்கூடாது. தனக்கு உணவு தேவையென்றால்கூட பொருட்களை வாங்கி அவன் சமைக்கக்கூடாது. நமக்கென்று உலகில் எதுவும் இல்லை என்பதோடு... மற்றவர்களிடம் பிச்சை வாங்கி உண்பதுதான் சந்யாச பண்பாடு.

சந்யாசி அக்னியைக்கூட தேவைக்காக நெருங்கக்கூடாது. ஒவ்வொரு வீடாய் போய் பிச்சையெடுக்க வேண்டும். அதில் கிடைப்பனவற்றை சாப்பிட்டுக்கொள்ள வேண்டும்.

என்ற சங்கரர்... சந்நியாச ஸ்மிருதி வகுத்த விதிகளை கடுமையாக பின்பற்றினார்.

சந்நியாச ஸ்மிருதியா? அது என்ன சொல்கிறது?...

(தொடரும்...)



சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்புகள்

காரணப்பட்டு ச.மு.கந்தசாமிபிள்ளை

தொடர்ச்சி — 10

மஞ்சக்குப்பத்திலிருந்து ராமகிருஷ்ணப்பிள்ளை இரவில் தினமும் கூடலூர்க்கு வந்து வள்ளலாரது பிரசங்கம் கேட்டுத் திரும்புங் காலையில் இருள்மிகுதி கண்டு அஞ்சும்போது வழித்துணையாக ஒருமனிதன் அவர்க்கு முன்பே ஊர்ப்புறம் வரையிலும் சென்று மறைந்துவிடுவன். இடையே, உற்றுநோக்கில் அம்மனிதன் உருத்தோன்றாது.

கூடலூர் அப்பாசாமிச் செட்டியார் கிடங்கில் விசேஷமாய்ப் பேயன்வாழை உண்டு. அங்கு பிள்ளைப் பெருமான் சென்றபோது இலையில் உள்ள பாம்பு வள்ளலாரை உச்சியில் தீண்டவே சிறிது இரத்தம் தோன்றியது. விபூதி அப்பினதைச் சிலர் கேட்க, வள்ளலார், "சர்ப்பம் தான் மரணமடையச் சிறிது தீண்டிற்று" என்றனர். அங்ஙனமே போய்ப்பார்த்ததில் சர்ப்பம் இலைமீது மடிந்து வெளுத்துக் கிடந்தது.

பங்குனி உத்திரத்தில் கிண்ணித்தேர் உற்சவத்தில் தேரடிக்கருகில் நாலாவது வீடாகிய அப்பாசாமிச் செட்டியார் வீட்டில் வள்ளலார் உள்ளே ஓர் நாளிரவு இருக்க, புறத்தே திண்ணைமீது பலர் இருக்க வள்ளலாரைப்போலவே சித்தர் ஒருவர் உள்நுழைந்து வள்ளலாரிடம் லட்டு வைத்துச் சிறிது நேரம் வார்த்தையாடிப் போயினர். அந்த சஷணமே புதுவை உறையூர் - துரைசாமிப்பிள்ளை சித்தரைப் பின்தொடர, அச்சித்தர் மறைந்தனர். உடனே உட்சென்று பார்க்க லட்டு வைத்திருந்தது. கடலை அளவு பிள்ளைப் பெருமான் வாயில் போட்டுக்கொண்டு "பிட்டு வாணிச்சி கொடுத்தது இப்படித் தானிருந்ததோ" என வியந்து பலர்க்கும் பங்கிட்டனர். வந்தவர் காணோம் எனத் துரைசாமி பிள்ளை கூறியபோது, வள்ளலார் "அவர் இந்நேரம் காசியிலிருப்பர்" என்று சித்தர் நிலை அறிவித்தனர்.

திருப்பாதிரிபுலியூரில் இன்றைக்கு 57 ஆண்டுகளுக்கு முன் அசஷயவருஷத்தில் தைமாதம் 5-ஆம் தேதி நடந்த ஆற்றுத்திருவிழாவில் பிரம்மசமாஜத்தார் விக்கிரக ஆராதனையைக் கண்டித்துப் பிரசங்கித்தனர். சிலர் வேண்டவே, பிள்ளைப் பெருமான் "உண்மையில் விரும்பா விருப்பம் வைத்த மகாகனம் பொருந்திய பிரம்ம சமாஜத்தார் அவர்களுக்கு... விக்கிரக ஆராதனை மறுப்பது தகுதியல்ல" என்று பத்திரிகை எழுதித்தந்தனர். விரும்பா விருப்பம் என்பதற்குத் துர்விருப்பம் எனப் பொருள்கொண்டு சீதரநாய்க்கர் பதில் பத்திரிகை யெழுதினர். (விரும்பா விருப்பம் என்பது 'தூங்காமல் தூங்கி', 'சொல்லாமற் சொல்லி' என்பன போன்று நிறைந்த விருப்பம் அல்லது அறிவோடு விருப்பம் எனப் பொருள்படும்.) பிறகு 'நடந்தவண்ணம் உரைத்தல்' என்னும் நூலில் குறித்தபடி சீதரநாய்க்கருக்கு வள்ளலார் உண்மை தெளிவித்தனுப்பினர்.

நடந்தவண்ணம் உரைத்தல்:

கல்வி கேள்விகளால் சிறந்த அறிவுடையவர்களுக்கு வந்தனஞ்செய்து வெளிப்படுத்தகை.

அசஷய வருடம் தை மாதம் 5-ம் தேதியில் கூடலூரைச் சார்ந்த கூடலூரைச் சார்ந்த திருப்பாதிரிப் புலியூர்க் கடுத்த பெண்ணை நதித் தென்கரையில் உண்ணாமுலை செட்டிச் சாவடிக்குச் சமீபத்தில், ஓர் நைமித்தியத் திருவிழாவைப்பற்றி யறிவுடையோரனேகர் கூடினர். அவ்விடத்தில், சிதம்பரம்-இராமலிங்க சுவாமிகளு மிருந்தனர். அப்போது பிரம சமாஜம் சம்பேடு-ஸ்ரீதர ஸ்வாமி நாயக்கர் சிலருடன் வந்திருந்தனர்.

அதற்குமுன் திருப்பாதிரிப்புலியூரில், ஸ்ரீதரஸ்வாமி நாயக்கர் செய்த பிரசங்கத்தினாற் சந்தேகத்திலழுந்திய சிலர், தமது சந்தேகத்தை நீக்கிக் கொள்வதற் கி.ிதோர் தருணமென்று கருதி, அக்கூட்டத்தில், சிதம்பரம்-இராமலிங்க சுவாமிகளை நோக்கி, "ஐயா! பிரம்மத்தை நினைப்பது தகுதியென்றும், விக்கிரக ஆராதனை செய்வது தகுதியல்லவென்றும், இங்கே வந்திருக்கின்ற ஸ்ரீதரஸ்வாமி நாயக்க ரவர்கள் எங்கள் முன்பாகப் பலமுறை பிரசங்கித்தார். அதனால் எங்களுக்குச் சந்தேக முண்டாகி யிருக்கின்றது; அந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்விக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

அப்போது, சிதம்பரம்-இராமலிங்கசுவாமிகள், "பிரம்மத்தை யறியத் தொடங்கினோர் அறிதல் வேண்டும்; விக்கிரக ஆராதனை செய்யத் தொடங்கினோர் செய்தல் வேண்டும்; இவ்விருவகையும் அதற்குரிய பக்குவர்களுக்கு அடுத்த வகைகளென் றறிய வேண்டும்" என்று சொல்லினர்.

அப்போது அங்கிருந்தவரிற் சிலர், நாயக்கரைப் பார்த்து, "இது விஷயத்தில் தங்கள் கோட்பாட்டை வெளிப்படுத்தி நிறுத்தல் வேண்டும்" என்றார்கள். நாயக்கர், லிகித மூலமாய் (எழுத்து மூலமாய்) வெளிப்படுத்துவேனென்றார்.

அதுகேட்டு, "ஓர் சபையில் மாறுபட்ட இருவர், தங்கள் தங்கள் கோட்பாடுகளை அந்தச் சபையி லறிஞரறிய எடுத்துரைத்து அதற்குத் தக்க காட்சி, அநுமானம், உவமானம், சத்தம் முதலிய பிரமாணங்களும், உடன்படல், மறுத்தல், ஒருசாருடன்பட்டு மற்றொருசா ருடன்படாமை, முற்றுமுடன்படல் போன்றுடன்படாமை முதலிய கோட்பாடுகளுக்கமைந்த பலவகை யுத்திகளும், அநுபவத்தோடு தர்க்க, வுபதர்க்க, லசஷண, வுபலசஷணங்களுக்குப் பொருந்த விரித்து விவகரித்து அந்த விவகாரத்திற் சந்தேகவிபரீத மயக்கத்திற்கு இடங்கொடாமல், முடிந்த நிச்சயத்தை, பின்னர் லிகிதமூலமாய்ப் பிறரறிய வெளிப்படுத்தல் மரபேயல்லாது, மாறுபட்டோர் இருவரும் வேறு வேறிடங்களிலிருந்து அறிஞர் சபாதிபத்திய மின்றித் தங்கள் தங்கள் மனஞ்சென்றவழி அளவை யெல்லையைக் கடந் தெழுதிக் கொள்வதில் ஞாயந் தோன்றாது என்றும், ஒழியாத லிகிதச் சண்டையாக முடியுமென்றும், அது தர்க்க மரபல்லவென்றும்" சுவாமிகள் சொல்லினர்.

அங்கிருந்தவரிற் சிலர், நாயக்கரைப் பார்த்து, "ஐயா! தங்கள் கோட்பாட்டை வெளியிட்டுப் பிரமாணத்தால் நிலைபெறச் செய்து, எங்களையும் அவ்வழியில் நடத்துவிப்பதற்கு அடுத்த தருண மிதுவாக விருக்க, இத்தருணத்திலிப்படிச் சொல்வது தங்கள் கோட்பாட்டிற்கு அழகல்ல" என்றார்கள்.

உடனே நாயக்கர் "நித்திய நிரஞ்சன நிர்ம்மல நிராமய நிராலம்ப சொரூபமும் அவாங் மனோகோசரமுமான பிரமத்தை நினைப்பது தக்கதென்பதும், விக்கிரகாராதனை செய்வது தகாதென்பதும் எங்கள் பிரமசமாஜ வேதசமாஜ கோட்பாடு" என்று வெளியிட்டார்.

"அவாங் மனோகோசரமான பிரமம், மனதினாலெப்படி நினைக்கப்படும்? ஆகாயம் அடியாலும் படியாலும் அளக்கப்படும், காற்று கையாற் பிடிக்கப்படும், என்பவைபோல், வார்த்தை மாத்திரத்தாலன்றி அர்த்த லசஷ்யானுபவங்களுக்கு இடம்பெற வில்லையே" என்று சுவாமிகள் வினவினர்.

"மிதக்கியானமுள்ள நம்மிட மனத்திற்குப் பரிமித வஸ்துவைப் போலடங்காததென்று சொன்னதே யல்லது, ஏகதேசம் மனத்திற்கு விளங்காததென்று சொன்னதல்ல" என்று நாயக்கர் உத்தரித்தனர்.

"மனத்திற்கு அகோசர மென்பது, மனத்திற்கு விஷயப்படாததென்று பொருள்படுமே யல்லது, சிறிது விஷயமாகிப் பெரிதுவிஷயமாகாதென்று பொருள்படா தென்றும், அவ்வாறு பொருள்கொள்வது லசஷண வுபலசஷண விதியல்லவென்றும், ஒருகாலத்தில் ஒருபொருள் சிறிது விஷயமானால், மற்றொரு காலத்திற் சிறிது விஷயமாகும், பிறிதொரு காலத்திற் சிறிது விஷயமாகும். இவ்வாறு முழுவதும் விஷயமாகுமென்றும், அவாங் மனோகோசர மென்றதில், மனத்திற்குச் சிறிது விஷயமானபடி வாக்குக்குஞ் சிறிது விஷயமாதல் வேண்டுமென்றும், இங்ஙனம் மனவாக்குகளுக்குச் சிறிது விஷய மாகுமென்று கொண்டபோது கண், காது, மூக்கு, மெய், வாய், கை முதலிய மற்ற இந்திரியங்களுக்கும் விஷயமாகுமென்பது தானே விளங்குதலால், பிரம்ம லக்ஷணத்தோடு விரோதப்படுமென்றும், மனமுதலான அந்தக்கரணங்களுக்கும், கண் முதலான இந்திரியங்களுக்கும், நாமரூபக் கிரியைகள் விஷயமாகுமல்லது, தத்துவா தீதமாகிய பிரமம்விஷயமாகுமென்பது விபரீத வுணர்ச்சி யென்றும், மனோலயங் கிடைத்த பின்னர் பிரம்மாநுபவங் கிடைக்குமென்றும், மனஞ் சிறிது தோன்றினும் ஆத்ம ஞானம் விளங்காதென்றும், **மனம்** - அசத்து, சடம், அநித்தியம், துக்கம், அசுத்தம் உடையது. **பிரமம்** - சத்து, அறிவு, நித்தியம், இன்பம், சுத்தம் உடையது. ஆகலின், மனத்திற்குப் **பிரமம்** எவ்வகையினும் விஷயமாகாதென்றும், இவ்வாறே வேத முதலிய கலைகளினும், ஆப்த வாக்கியங்களினும், ஆணையிட் டிருப்பதென்றும், பிரமம் மனத்திற்கு விஷயப்படாதென்பது, அநுபவத்திற்கும், மற்ற ஹேதுக்களுக்கும், யூகங்களுக்கும் பொருந்துகின்ற பசஷமென்றும்" சுவாமிகள் சொல்லினர்.

பின்னர் சிலபொழுது நாயக்கர் சும்மாவிருந்தனர். அங்கிருந்தவரிற் சிலர், நாயக்கரைப் பார்த்து "சும்மாவிருக்கப்படாது, உத்தரிக்க வேண்டும்" என்றார்கள். நாயக்கர் - சற்றுநேரஞ் சென்று மீளவும் "மனத்தினால் பிரம்மத்தை நினைக்கக்கூடும்" என்று முன்சொல்லியதையே சொல்லினர்.

"தங்களிஷ்டப்படி விதியைக் கடந்த விவகாரமுந் தடைபடுகின்றது. பிரமம், மனத்திற்கு விஷயமாகுமானால், கண்ணுக்கும் விஷயமாகும்; இவைகளுக்கு விஷயமாகுமானால், மற்ற இந்திரியங்களுக்கும் விஷயமாகும் என்று நான் முன்சொல்லியதைத் தாங்கள் சிறிது உய்த்துணர வேண்டும்" என்று சுவாமிகள் சொல்லினர்.

நாயக்கர் சற்று நேரஞ் சென்று "மனத்திற்கு விஷயமாவதெல்லாங் கண்ணுக்கு விஷயமாகுமோ? என்றார். சுவாமிகள் ஆகுமென்றார்.

நாயக்கர் "மற்ற இந்திரியங்களுக்கு விஷயமாகாமல் மனத்திற்கே விஷயமாகத் தக்கது ஒன்றுமில்லையோ! ஒன்று மில்லையோ!!" என்று பலமுறை வியந்து வினாவினார்.

"மனத்திற்கே விஷயமாகத் தக்கது யாது? அதனைத் தாங்களே வெளிப்படுத்தல் வேண்டும்" என்று சுவாமிகள் சொல்லினர்.

"**ஆனந்தம்** மனத்திற்கே விஷயமாவ" தென்று நாயக்கர் சொல்லினர்.

"ஒரு ரூபவிஷயத்தைக் கண்கள் கண்டு, அந்த ரூபவிசேஷத்தால் ஆனந்த விருத்தியை யடைந்து, பின்னர் அதன்வழியாக மனத்திற்கும், அவ்வானந்தத்தை யடைவிக்குமென்றும், கண்கள், முன்னர் ஆனந்தத்தை யடைந்ததற்கு அடையாளம், அக்கண்களிலிருந்து சிந்துகின்ற பாஷ்பங்களே யென்றும், அதை யானந்த பாஷ்பமென்று வழங்குவதே போதுமான பிரமாணமென்றும், இ்தன்றி, நேத்திரானந்தம் சிரவணானந்தம் என்று அறிவுடையோர் பிரயோகிப்பதை யூகிக்கவேண்டுமென்றும், இங்ஙனம் கண்முதலிய இந்திரியங்களும் மனமுதலிய கரணங்களும் ஆன்மாவுக்கு உபகாரக் கருவிகளாதலால், அவைகள் ஆனந்தமடைந்தனவென்பது உபசரிப்பென்றும், ஆனந்தம், பிரத்தியேக

ஆன்மஞான விஷயமென்பது உண்மையென்றும்" சுவாமிகள் சொல்லினர்.

பின்னர், சற்றுநேரஞ் சென்று, "ஓரிந்திரியத்திற்கு விஷயமாவது வேறோ ரிந்திரியத்திற்கும் விஷயமாகுமென்றது எப்படி! காதுக்குப் புலப்படுவது மூக்குக்குப் புலப்படாது, கருத்துக்குப் புலப்படுவது கண்ணுக்குப் புலப்படாது" என்று நாயக்கர் சொல்லினர்.

"முன்னர் அவாங் மனோகோசரமென்றதற்கு, தாங்கள் கொண்ட கருத்தின்படி வாக்குக்கும் மனத்திற்கும் பிரமஞ்சிறிது விஷயமாகுமானால், கண்களுக்குங் கைகளுக்குஞ் சிறிது விஷயமாகுமென்று தாங்களே யூகித்தறியலா மென்றும், ஒருபொருள் மனத்தினால் நினைக்கப்படுமானால் காதினாலுங் கேட்கப்படும், காதினாற் கேட்கப்பட்டது கண்ணினாலுங் காணப்படும், கைகளாலும் பிடிக்கப்படுமென்பது உபதர்க்க உபலக்கணமென்றும், ஸ்தூல சூக்கும காரண பூதங்களால் உருவாகித் தோன்றுகின்ற பொருளினிடத்து, மனமுதலான கரணங்களுக்கும் கண் முதலான இந்திரியங்களுக்கும் விஷயங்களாகத் தக்க பண்புகள் உண்டாயிருக்கு மென்று அறிந்த பசஷத்தில், ஒருபொருள் ஒரு பண்பினால் ஓரிந்திரியத்திற்கு விஷயமாகுமானால், அந்தப் பொருள் மற்றொரு பண்பினால் மற்றோரிந்திரியத்திற்கும் விஷயமாகுமென்று சாதாரண ஜனங்களாலும் அறியப்படுமென்றும், அசஷியோக ஞாயத்தாலும், இந்திரியங்களின் சொரூப ரூப சுபாவ வியாபக வியத்தி விசேஷ சாமாநிய முதலியவைகளையும், மனமுதலான கரணங்களின் சொரூப ரூப சுபாவ வியாபக வியத்தி விசேஷ சாமாநிய முதலானவைகளையும் வெளிப்படுத்துகின்ற தத்துவ சாத்திரங்களாலும், பிரகிருதி சாத்திரங்களாலும், உய்த்துணர்ந்து தெளியப்படுமென்றும், கண்களும் மனமும் அதி கரணோ பாதான சம்பந்தமுடையதென்றும், மத்திய பூத தூல சூக்கும் காரியமென்றும், இதனால் மனத்திற்கு விஷயமாவது கண்களுக்கும் விஷயமாகுமென்றும், கண்களுக்கு விஷயமாவது மனத்திற்கும் விஷயமாகுமென்றும்" சுவாமிகள் சொல்லினர்.

(தொடரும்...)

மனுமுறைகண்ட வாசகம்

நற்சிந்தனை

(முனைவர் பா.மஞ்சுளா)
தமிழ்த்துறைத் தலைவர்
S.S.M. Arts & Science college - Kumarapalayam
Namakkal District

தொடர்ச்சி — 2

4. வரவு போக்கு ஒழிய வழி அடைத்தேனோ .....

வள்ளலார் மனுமுறையில் முதலில் மனிதனின் வாழ்வுக்கு தேவையான மனம், குணம், நீதி, கூறிய பிறகு அடுத்தது பணத்தை முன் வைக்கிறார். இவ்வுலக வாழ்வுக்கு மிகவும் தேவையானது பொருள் இதை வள்ளுவர்,

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு. _247

என்றுரைக்கிறார். இந்த உலகத்தை ஆட்டிவைக்கும் ஒரே சொல் 'பணம்'. ஆண்டி முதல் ஆரசன் வரை அனைவரும் விரும்புவது 'பணம்'. பணம் பத்தும் செய்யும், பணம் பாதளம் வரை பாயும் என பல்வேறு பழமொழிகளை அடுக்கி கூறிகொண்டு போகலாம். அத்தகைய பணத்தை பெறும் வழி முறைகள் ஏராளமாக இருக்கிறது. நாம் சம்பாதிக்கும் ஒவ்வொரு காசுக்கு பின் உண்மையான உழைப்பு இருக்க வேண்டும். நெற்றியில் வியர்வை நிலத்தில் சிந்திடும் போது, இந்த பணம் எனது உழைப்பால் வந்தது என்ற எண்ணம் நமது மனதில் வரும்போது மனம் மிகவும் சந்தோசம் அடையும், அதை விடுத்து, தன்னிடம் இருக்கும் பொருளை விடுத்து அடுத்தவர் பொருள் கண்டு ஆசைப்படும்போது, அங்கு போரசை தலை விரித்தாடி அனைத்து விதமாக தீய எண்ணமும் உட்புகுந்து மற்றவரைக் கெடுக்கும் எண்ணமும், அவரின் பொருள் வரும் வழியை அடைக்கும் எண்ணமும் மனதில் வரும், இது உலகியல் நடைப்பெறும் நடைமுறைவாழ்வு முறை. ஆனால் வள்ளலார் கூறிய,

'வரவு போக்கு ஒழிய வழி அடைத்தேனோ'

என்ற வரிக்கு மேற்படி பொருள் கொள்ளலாம், ஆனால் வள்ளலார் ஒரு தீர்க்கதரிசி அவரது பாடலில் இருக்கும் பொருளுக்கு ஆயிரம்

அர்த்தம் எப்போதும் உண்டு. இந்த உலகத்தில் மனிதன் பிறந்தது முதல் அவன் இறக்கும்வரை அவன் சேர்க்கும் பொருள் அவனது புண்ணியம் மட்டுமே, அதுவே இவ்வுலகில் அவனது 'வரவு' கணக்கு ஆகும். நமது பாவ கணக்கு சேர்ந்தால் நமக்கு இவ்வுலகம் மட்டுமல்லாமல் மேல் உலகிலும் இடம் இல்லை என்பார்கள் சான்றோர்கள். ஆனால் வள்ளலார் கூறுவது அதற்கும் மேல் உள்ள இறவாமை என்னும் மரணமில்லா பெருவாழ்வு. அதை அடைய வேண்டும் என்றால் பசித்திரு, தனித்திரு, விழித்திரு, என்னும் வழியில் நின்று நமது உடலுக்கும், உள்ளத்துக்கும் வேண்டிய நல்ல வரவுகளை சேர்த்துக்கொண்டு தீய வரவுகளை தடுக்க வேண்டும். நமது புலன்களை தனது ஆட்சியின் கீழ் கொண்டு வரும்போது நமக்கு எல்லாம் சாத்தியமாகும். நாமே நமக்கு எதிரியாக நின்று வரவுக்கு வேண்டிய வழிகளை அடைக்க கூடாது. நமது புண்ணிய. கணக்குகள் என்னும் வழிமுறைகளையும் அவற்றை செயல்படுத்தும் நெறிமுறைகளையும் நாம் பட்டியலில் இட்டு அதன் படி நாம் வாழ்ந்தால் நமது வரவு கணக்கு உயரும்.

நாமே நமக்கு எதிரியாக நின்று வரவுக்கு வேண்டிய வழிகளை அடைக்க கூடாது.

5. தானம் கொடுப்போரைத் தடுத்து நின்றேனோ ....

இன்று நாம் தானம் தர்மம் பற்றி பேசும் போது உடனே நமக்கு நினைவுக்கு வருவது கர்ணன். அவனது கொடை தன்மை பற்றி இப்போதும் உலகம் பேசும்.

எது தானம்?, எது தர்மம்?.....

தானம் என்பது பிறருக்குத் தேவையானவற்றை அவர் கேட்டோ, அடுத்தவர் அவர் நிலை கூறி அறிந்தபின்னோ தருவது தானம். இது புண்ணியக் கணக்கில் சேராது. ஏனெனில் இல்லாதவர் மற்றும் இயலாதவர் கேட்டபின் கொடையளிப்பது ஒரு மன்னனின் கடமை. ஒவ்வொரு மனிதனின் கடமையும் கூட....

ஆனால், தர்மம் என்பது எவரும் கேட்காமல் அவரே அறியாமல் அவர் நிலை அறிந்து கொடுப்பது. இதுதான் புண்ணியம் தரும். பசித்திருக்கும் ஒருவர் கேட்டபின் ஏதாவது தருவது தானம்.

அவர் கேட்காமலேயே அவர் பசியாற்றுவது தர்மம். என்று கூறுவது அனைவரும் அறிந்தது.

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் கனைக ளியற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிர நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்.

-சரஸ்வதி தேவியின் புகழ்-09

என்றார் பாரதி. நாம் தெரிந்தும் தெரியாதும் பல பாவ புண்ணியங்களை செய்கிறோம். பிறருக்கு நன்மை செய்ய முடியவில்லை என்றாலும் பரவாயில்லை அவருக்கு தீமை செய்யாது இருப்பது பெரிய அறம் ஆகும்.

ஈஎன்று நான்ஒருவர் இடம்நின்று கேளாத
இயல்பும்என் னிடம்ஒருவர்ஈ
திடுஎன்ற போதவர்க் கிலைஎன்று சொல்லாமல்
இடுகின்ற திறமும்இறையாம்...

-திருவருட்பா-09

என்கிறார் வள்ளலார். எனக்கு யாரிடமும் எந்த உதவியும் எதிர்பார்க்கும் குணம் வேண்டாம் ஆனால் என்னிடம் ஒருவர் உதவி என்று வரும்போது அவருக்கு கொடுக்கும் குணத்தை இறைவன் எனக்கு தர வேண்டும் என்கிறார். மேற்கண்ட புண்ணிய செயல்களை செய்பவர்கள் இவ்வுலகில் வாழும் தெய்வங்கள் ஆவார்கள் .அவர்கள் செய்யும் செயலை நாம் தடுத்து நிறுத்தினால் அதை விட பாவம் வேறு இல்லை உதவி செய்யா விட்டாலும் பரவாயில்லை தானம் தருபவர்களை தடுக்க கூடாது. தான தர்மம் தான் நமது சொத்து.



6. தருமம் பாராது தண்டம் செய்தேனோ...

தருமம் பாராது தண்டம் செய்தேனோ என்ற சொல்லில் வரும் 'தண்டம்' என்றால் தவறுசெய்பவர்களை தண்டிக்கும் கடவுள் என்று அபிதான சிந்தாமணி பொருள் தருகிறது. இதற்கு சரியான உதாரணம் சிலம்பில் வரும், 'அரசியல் பிழைத்தருக்கு அறம் கூற்றாகும்' என்ற விதிமுறையைக் கூறலாம். உலகத்தில் உள்ள ஒவ்வொரு ஜீவராசிகளும் தங்களது கடமைகளை சரியாக ஆற்றுகிறது. அதன் படைப்பின் பெருமை உணர்ந்து, அதன் பணியை சரியான முறையில் செய்யுமாறு இறைவன் படைத்து உள்ளான். திருவள்ளுவர் மன்னர் ஆற்றும் கடமை குறித்து விரிவாக பேசுகிறார். உலகத்தில் உள்ள மன்னர்கள் பலர் தனது மக்களின் நலம் கருதி ஆட்சி செய்து அதன் மூலம் புகழ் பெற்ற வரலாறுகள் நிறைய உண்டு. அவர்களின் நல்லாட்சி மற்றும், தீயவர்களின் கொடுங்கோல் ஆட்சி பற்றிய வரலாறும் உண்டு. உலகத்தை தனது குடையின் கீழ் கொண்டு வர கருதிய மாவீரன் நெப்போலியன், கொடுங்கோல் ஆட்சி புரிந்த ஹிட்லர் ஆகியோரின் வரலாறுகள் காலம் உள்ள வரை அழியாது.

ஆணவமும் அகங்காரமும் இல்லாமல், அன்பால் அனை-வரையும் கட்டுப்படுத்துவதே சிறந்த தலைமை.

இந்த உலகத்தின் உண்மையான சாதனைகள் என்பது ஆயிரக்கணக்கான வீரர்களை கொன்று குவித்து நாட்டை கைப்பற்றி பெருமை பேசுகின்ற வரலாறு இல்லை, சண்டையிடாமல் வெற்றி பெறுவது தான் சிறந்த போர் முறை, ஆதிக்கம் செலுத்தாமல் நடத்திக்காட்டுவதே சிறந்த நிர்வாகம், ஆணவமும் அகங்காரமும் இல்லாமல், அன்பால் அனைவரையும் கட்டுப்படுத்துவதே சிறந்த தலைமை. உண்மையான சாதனையாளர்கள் தங்கள் பலத்தையும் வீரத்தையும் எல்லா நேரமும் வெளிப்படுத்திக் கொண்டேயிருப்பதில்லை. தேவைப்படும் நேரத்தில் மட்டுமே புயலாகவும், சூழல் வரும் போது சூறாவளியாகவும், குளிர்ச்சியைத் தருவதில் தென்றலாகவும் பல்வேறு பரிணாமம் செய்யும் பக்குவம் அவர்களுக்கு உண்டு. போர் முலமாக தான் ஒன்றை கைப்பற்ற கருதும் மூர்க்கமான குணம் கொண்ட அரசன் ஆளும் நாட்டை விட,

அமைதியான முறையில் நாட்டை ஆளும் மன்னரை தான் அனைவரும் விரும்புவர்கள். அகிம்சை நெறியே உலகை வென்றது. உலகத்தின் வரலாற்றை புரட்டி போடும் சாதனை அதுக்கு உண்டு. ஆன்ம நேய ஒருமைப்பாடு கொண்டு இந்த உலகத்தையே நேசிக்கும், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சொற்றொடர் (புறநானூறு-192) நமது முன்னோரான கணியன் பூங்குன்றனாரின் தெய்வ வாக்கு. ஒவ்வொரு மனிதனும் இதை உணர்ந்தால் இந்த உலகம் சொர்க்கத்தின் வாசலாக மாறும் இதைத்தான் வள்ளலார், தரும நெறியில் நிற்பவருக்கு நாம் உதவ வேண்டும். தவிர, அவர்களுக்கு தண்டனை வழங்கக் கூடாது என்று வேண்டி கூறுகிறார். நமது ஆட்சி முறை சரியாக இருக்கும்போது அங்கு நீதியும் சரியாக இருக்கும் அது தவறும்போது எல்லாம் தவறும். தர்மம் எப்போதும் தலை காக்கும்.

7. கலந்த சிநேகரைக் கலகம் செய்தேனோ ...

இந்த உலகத்தில் மிகவும் உயர்வான உணர்வுகளில் ஒன்று நட்பு. நமக்கென்று சில நம்பிக்கை இருக்கின்றன. சில வகையான அனுபவ அறிவும் உண்டு. அதை வைத்து நாம் நட்பு வட்டாரம் உருவாக்கிக்கொள்கிறோம். 'உன் நண்பன் யாரென்று சொல், நீ யாரென்று சொல்கிறேன்' என்ற பழமொழி உண்டு. நமது நண்பரை வைத்து நம்மை தீர்மானம் செய்யும் அளவுக்கு நமது குணநலன்கள் நமது நட்பை பொறுத்தே அமைகிறது. நட்பில் பலவகையான வேறுபாடு உண்டு ஒரு கூட்டமாக இருப்பது, அதையும் மீறி ஒருவருடன் அளவுக்கு அதிகமாக நட்புடன் இருக்கும் உயிர்தோழமை என்ற நிலை .நம்முடன் பழக, பழக, நட்பு வளர வேண்டும். அது தேய்பிறை போல இருக்க கூடாது என்பார் வள்ளுவர். நண்பர்கள் அமைவதில்லை, பிறக்கிறார்கள் என்ற ஒரு கூற்றும் உண்டு. வள்ளலார் நட்பை இவ்வுலகில் இவ்வளவு அழுத்தமாக கூற காரணம் நோக்கில், அவரது அகவலில்,

அயர்வற வெனக்கே யருட்டுணை யாகியென்
னுயிரினுஞ் சிறந்த வொருமையென் னட்பே (1177)
அன்பினிற் கலந்தென தறிவினிற் பயின்றே
இன்பினி லளைந்தவென் னின்னுயிர் நட்பே (1179)

என்று நட்பின் உயர்வை பேசி, அவரது அருட்பெரும்சோதியை தனது நட்பாக கூறுகிறார். இறைவனிடம் நாம் வணங்கும் முறையை நான்கு வகையாக பிரிக்கலாம் அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகும். கடவுளை தாய் தந்தையாக, அடிப்பணிந்து தொண்டனாக, பின்பு நண்பனாக, கடைசியாக அருட்பெரும்சோதியே தான் என்றாதல். மேற்கண்ட இந்த நான்கு முறையில், அவரவர்களுக்கு உள்ள தகுதியின் அடிப்படையில் இறைவனை வணங்குவார்கள் மக்கள்.

'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும்...'
-திருவெம்பாவை-01

என்று மாணிக்கவாசகர் பாடுகிறார். வள்ளலார் தனது ஆண்டவனை தனது தோழனாக பார்க்கிறார். அதனால் தான் தனது தோழனாக இருக்கும் கடவுளை நம்பத்தகுந்த வார்த்தையில் இருந்து தவறி, தவறான வார்த்தைகள் கூறி அவருக்கு கலக்கம் விளைவித்து தவறாக பேசினேன் என்று புலம்புகிறார். பாரதியும் தனது கண்ணன் பாட்டில், கண்ணனை - தனது தோழன், தாய், தந்தை, சேவகன், அரசன், சீடன், சற்குரு என்று பல்வேறு வடிவத்தில் படைத்து பாடுகிறார்.

சோதி அறிவில் விளங்கவும் - உயர்
சூழ்ச்சி மதியில் விளங்கவும்...
-கண்ணன் எனது சற்குரு-10

புலவர்கள் குழந்தை போன்றவர்கள். அவர்களுக்கு தங்கள் எண்ணத்தை வெளியீடு செய்ய கடவுளை தங்களுக்கு பிடித்த மாதிரி கற்பனை செய்து பாடும் மரபு தொன்றுதொட்டு உள்ளது. இதற்கு ஒரு கதையை கூறலாம். அல் ஹில்லாஜ் மன்சூர் என்ற முகமதிய ஞானி ஒருவர் இருந்தார் அவர் தன்னை தான் உணர்ந்து நானும் கடவுள், என்னை பார்க்கும் நீங்களும் கடவுள் என்றார். உடனை அப்போது இருந்த அரசாங்கம் அவரை சிறையில் அடைத்து, அவருக்கு மரண தண்டனையும் வழங்கியது. அவரது மரண தண்டனை நிறைவேற்றும் நேரத்தில் அரசங்கம் கண்டிப்பாக அனைவரும் அவர் மீது கல்லெறிய வேண்டும் யாரும் இதை மீற கூடாது, மீறினால் அவர்களுக்கும் தண்டனை உண்டு என்று உத்தரவிட்டது. அனைவரும் அவர் மீது கல்லெறியும் போது, அவர் மகிழ்சியுடன் இருந்தார். ஆனால் அவரது குரு சட்டத்துக்கு பயந்து, அவர் மீது இரக்கம் கொண்டு ஒரு ரோஜா பூவை தூக்கி போட்டார். உடனை மன்சூர் கண்ணீர் வர, வேறு யாரும் என்னைப் புரிந்து கொள்ளாவிட்டால் கூடப் பரவாயில்லை ஆனால் என்னுடைய குரு என்னை நன்றாக அறிந்தவர், எனது நண்பருமாகிய அவரே என்னை புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கும்போது எனக்கு இந்த உலகத்தில் வாழ விருப்பம் இல்லை என்றார். *(தொடரும்...)*

தி.ம.இராமலிங்கம்

இராமலிங்க அகவல்

-தொடர்ச்சி-10

பொய்யன் எனினுமுனை பாடிய எனை
அய்யன் அடி ஆழவைக்கும் இராமலிங்கம்

கரும்பாய் கனியாய் கற்கண்டாய் அகத்தில்
அரும்பி உள்ளே இனிக்கும் இராமலிங்கம்

அருட் பெருஞ்ஜோதி அகவல் அருளியிங்கு
இருள் நிலை அகற்றும் இராமலிங்கம்

அருட் பெருஞ்ஜோதி அட்டகம் அருளியிங்கு
கருப் பொருள் காட்டும் இராமலிங்கம்

தனிப் பெருங்கருணை தனித்தலைமை பதியை
கனிந் துருகிக் கூட்டும் இராமலிங்கம்

அருட் பெருஞ்ஜோதி அடைவு அருளியிங்கு
மருள் நீங்கி மகிழும் இராமலிங்கம்

அருட்பெருஞ் ஜோதி யாகியஇறை தாம்
ஒருவனே என்ற அருட்பெருஞ் ஜோதி

இருள்சூழ் உலகம் ஒளிபெற இராமலிங்கரை
உருசெய் தளித்த அருட்பெருஞ் ஜோதி

சுத்த சன்மார்க்கச் சித்தியினைக் கொடுத்தே
உத்த மனாக்கும் அருட்பெருஞ் ஜோதி

உயர்நெறிக் காட்டி உணர்ச்சியில் ஓங்கும்
இயற்கை உண்மையாம் அருட்பெருஞ் ஜோதி

கன்ம வினை கெடுத்து இயற்கை
இன்ப மளிக்கும் அருட்பெருஞ் ஜோதி

தருமச் சாலை தருமங்களில் இறை
யருளைத் தருகின்ற அருட்பெருஞ் ஜோதி

தூக்கமும் ஏக்கமும் தவிர்த்து நீடுவாழும்
ஆக்கையை அளிக்கும் அருட்பெருஞ் ஜோதி

சுகங் கொடுத்து சதகோடி பொருள்கொடுத்து
அகஇனங் காக்கும் அருட்பெருஞ் ஜோதி

புலை தவிர்த்தோர்க்கே பரிந்து அமுத
அலை எழுப்பும் அருட்பெருஞ் ஜோதி

அன்பான உயிரெலாம் என்னுயிர் என்போர்க்கு
இன்னுயிர் ஆகும் அருட்பெருஞ் ஜோதி

நலமெலாம் அடைய நமக்குள் தத்துவ
உலகெலாம் அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பூரண அறிவைப் பெற்றார்க்கு என்றும்
ஆரண மாகிய அருட்பெருஞ் ஜோதி

கள்ள மனைத்தும் கடந்தோர்க்கு என்றும்
உள்ளிருந் தருளும் அருட்பெருஞ் ஜோதி

மூப்பைத் தடுக்க முயன்றோர்க்கு நல்லதோர்
ஆப்பை கொடுக்கும் அருட்பெருஞ் ஜோதி

நரைதிரை கெடுதிகள் நாடாது உடலுக்கோர்
இரையான மருந்தாம் அருட்பெருஞ் ஜோதி

அழுக்கில்லா மனதில் ஆடுகின்ற அப்பனாம்
இழுக்கில்லா இறையாம் அருட்பெருஞ் ஜோதி

கண்ணொளிப் பார்வையாய் காதுறு ஒலியாய்
எண்ணொடு எழுத்தாம் அருட்பெருஞ் ஜோதி

தமிழெனும் மொழியில் தவழ்ந்து வந்தருளும்
அமிழ்தினும் அமிழ்தாம் அருட்பெருஞ் ஜோதி

மதமான இருளை மதியாது அருட்பெருஞ்சுடர்
உதயத்தைக் காட்டும் அருட்பெருஞ் ஜோதி

தட்டும் தாளமும் தாலாட்டும் இராகமும்
எட்டும் இரண்டுமான அருட்பெருஞ் ஜோதி

இன்பங்கள் இசைந்து இமயமென உயரும்
அன்பெனும் சுகமாம் அருட்பெருஞ் ஜோதி

கணுவாக இணைத்து கதிராக ஒளிரும்
அணுவான அருவாம் அருட்பெருஞ் ஜோதி

மண்வகை கல்வகையால் முயங்கிக் கோள்கள்
எண்ணற்று அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பயிர்விளை மண்ணில் பிறவி எடுக்கும்வரை
உயிர்களை மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

காற்றாகி கனலாகி கதிராகி மாயாக்கால
ஊற்றாகி உழலும் அருட்பெருஞ் ஜோதி

ஏகாந்த இடமாம் ஆதியற்ற பரமாகாச
ஆகாய நிலையாம் அருட்பெருஞ் ஜோதி

புருவ நடுவில் பொலிந்து நடமிடும்
அருவச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

சம்பூரண மயமாய் சன்மார்க்க நிலையாய்
அம்பலத் தாடும் அருட்பெருஞ் ஜோதி

கண்ணிமை நேரமும் கருணையால் நமக்கு
உண்மை உரைக்கும் அருட்பெருஞ் ஜோதி

நிரந்தர ஆட்சியில் நலந்தரு அற்புத
அரசியல் நடத்தும் அருட்பெருஞ் ஜோதி

பயிரெலாம் செழிக்க பார்தனில் பிறக்கும்
உயிரெலாம் வணங்கும் அருட்பெருஞ் ஜோதி

தளர்வடையா மனதில் துளிர்விட் டோர்
உளவு சொல்லும் அருட்பெருஞ் ஜோதி

குறிவைத்து வாழ்வார்க்கு குருவாக வந்து
அறிவுறுத்து மப்பனாம் அருட்பெருஞ் ஜோதி

மலமகற்றி நீடுவாழ மக்களுடன் கூடி
உலகம் சுற்றும் அருட்பெருஞ் ஜோதி

குருட்டாட்டம் நீங்கி குவலயம் ஓங்கத்திரு
அருட்பாவை அளித்த அருட்பெருஞ் ஜோதி

தாழா நிலையருளைத் தரும் பிரபந்தத்திரட்டை
ஏழாம் திருமுறையெனும் அருட்பெருஞ் ஜோதி

கானகப் பாதையைக் கடந்து வயோதிக
ஊனம் தவிர்க்கும் அருட்பெருஞ் ஜோதி

கூடுவிட்டு போகுமுன் கூட்டுவித்து சிரத்தில்
ஆடுகின்ற சிற்றம்பல அருட்பெருஞ் ஜோதி

கூவிப்பிறக்கும் முன்எம் கூட்டினைக் காத்த
ஆவி உருவான அருட்பெருஞ் ஜோதி

பழுதான மேனியைப் புதைக்கச் செத்தாரை
எழுப்பிடும் அருளான அருட்பெருஞ் ஜோதி

எந்நிலை விரும்பினும் அன்பர்க்கு விரைந்து
அந்நிலை அருளும் அருட்பெருஞ் ஜோதி

புலை கொலை பாதகர்கட்கு பேரருள்
இலை என்னும் அருட்பெருஞ் ஜோதி

வெறுத்துப் பசியால் வாடியோர்க்கு சாலையில்
அறுசுவை அளிக்கும் அருட்பெருஞ் ஜோதி

காட்சி கொடுத்து கருணை ஞானசபையில்
ஆட்சி செய்யும் அருட்பெருஞ் ஜோதி

சித்தி வளாகத்தில் சித்தனோடு கலந்திங்கு
எத்திக்கும் தித்திக்கும் அருட்பெருஞ் ஜோதி

சங்கமதை நாடியோரை சத்தியனாக்கி அவர்
அங்கமதை தங்கமாக்கும் அருட்பெருஞ் ஜோதி

முத்தேகம் அடைவதே முத்தி என்றே
இத்தேகம் நீடுசெயும் அருட்பெருஞ் ஜோதி

சாதிமத குலமும் சாடியே பொய்யென்று
ஓதி உணர்த்திய அருட்பெருஞ் ஜோதி

கற்பம் ஒன்றிற்கு கருப்பை ஒன்றீனும்
அற்புதம் செய்யும் அருட்பெருஞ் ஜோதி

மாண்டவன் தாண்டவன் மதச் சாமிக்கெலாம்
ஆண்டவன் நானெனும் அருட்பெருஞ் ஜோதி

கூற்று ஒழியும் காற்றை அளித்தே
ஆற்று படுத்திய அருட்பெருஞ் ஜோதி

மருந்தான தயவை மலர்ந்தவர் நமக்கு
அருந்தவப் பயனாம் அருட்பெருஞ் ஜோதி

கடல்சூழ் உலகிற்குக் கதிரவன்போல் நமது
உடல்சூழ் ஒளியாம் அருட்பெருஞ் ஜோதி

வாழத் தெரியாது வன்பொருள் ஈட்டும்
ஊழல் ஒழிக்கும் அருட்பெருஞ் ஜோதி

காதல் மலர்ந்து கருத்தொ ருமையினால்
ஈதல் செய்யும் அருட்பெருஞ் ஜோதி

இருமை ஒழிந்து உத்தமன் உறவளிக்கும்
ஒருமை நினைவாம் அருட்பெருஞ் ஜோதி

சிந்தனை ஒன்றி சிந்திக்க பெருவாழ்வில்
எந்தனை ஏற்றும் அருட்பெருஞ் ஜோதி

காம மகற்றி காதலுறச் செய்து
ஏம சித்தருளும் அருட்பெருஞ் ஜோதி

பசித்திருந்து உள் பார்க்கச் சொல்
அசிகை தவிர்க்கும் அருட்பெருஞ் ஜோதி

தனித்தே இருந்து தவம் செய்வார்க்கு
இனிக்கும் இன்பமாம் அருட்பெருஞ் ஜோதி

விழித் திருக்கும் வழிச் செல்வோரை
அழித்தல் கூடுமோ அருட்பெருஞ் ஜோதி

வானத்தின் காட்சிகளை வியந்து நோக்கின்
ஆனந்தம் ஆனந்தம் அருட்பெருஞ் ஜோதி

வல்லானைக் காண விரும்பிஅழக் கடல்
எல்லாம் கண்ணீரோ அருட்பெருஞ் ஜோதி

சித்திப் பெற சித்தனைப் பாடும் எனக்கீன்ற
உத்தியோகம் இதுவோ அருட்பெருஞ் ஜோதி

தூமையில் பிறக்கவைத்து தூய்மை யாக்கி
ஊமைஎனை பேசவைத்த அருட்பெருஞ் ஜோதி

காண்பன யாவும்நடுக் கண்ணால் காணும்
ஆண்மை எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி

ஜீவகாருண்ய பணிசெய்து ஜீவித்திருக்க ஆசை
ஆவதெல்லாம் உன்னருளே அருட்பெருஞ் ஜோதி

கண்ணொளி யாகக் காட்சித் தந்தாட
எண்கோனம் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அறியாம லிருக்க அருவமாகும் சித்தை
அறிவியல் ஆக்கும் அருட்பெருஞ் ஜோதி

பாழுமுலக வாசனை பாழ்பட விட்டால்
ஏழுத்திரையும் தடையோ அருட்பெருஞ் ஜோதி

சாதாரணன் என்னை சாகாதவன் என்றே
ஆதார மாக்கும் அருட்பெருஞ் ஜோதி

இம்மையும் மறுமையும் இன்றி எடுத்துஎன்
ஐம்புலன் களாகிய அருட்பெருஞ் ஜோதி

நரக உலகிடை நாய்யெனக் குரைத்தேன்
இரவும் பகலுமாய் அருட்பெருஞ் ஜோதி

கதைசொல் பக்தியில் களிப்பவர் கோடி
இதென்ன மாயை அருட்பெருஞ் ஜோதி

(தொடரும்...)

சிவ பெருமானும் வள்ளற் பெருமானும்

தி.ம.இராமலிங்கம்

தொடர்ச்சி -- 3

"சைவர் என்னும் நின்னடியார்" என்பதை மேலோட்டமாக பார்த்தால் அது சிவபெருமானை வழிபடும் சைவ சமயத்தார்களைக் குறிக்கும். ஆனால் மேற்காணும் தத்துவ முரணால் இவ்விடத்தில் "சைவர்" என்பது ஊன் உண்ணாமல் இருக்கும் அக இனத்தாரையே குறிக்கும். அக இனத்தார்களே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அடியார்கள் ஆவர் என்பது வள்ளற்பெருமானின் வாக்கு. எனவே இந்த "சைவம்" என்ற ஒரு சொல் இரு பொருள் தருவதால், நாம் அச்சொல்லினை இடத்திற்குத் தக்கவே பயன்படுத்த வேண்டும். கண்ணை மூடிக்கொண்டு எல்லாம் சிவபெருமான்தான் என்று கருதினால், அது சைவ சமயத் தத்துவத்தையே தகர்க்கும். வள்ளற்பெருமான் வெளிப்பட தோன்றிய காலத்தில், அன்றைய சைவர்களும் சைவ மடங்களும் வள்ளற்பெருமானை எதிர்த்ததின் மர்மம் இதுதான். வள்ளற்பெருமான் ஆறாந் திருமுறையினை வெளியிட வேண்டாம் என்று சொன்னதிற்கும் காரணம் இதுதான். நாம் சமரசமாகப் போகவேண்டி, மற்ற சிவனடியார்கள் போல் வள்ளற்பெருமானையும் கருதுவதால் வருகின்ற பிழையால் இப்படிப்பட்ட உரைகள் திருவருட்பா பாடல்களுக்கு எழுதப்படுகின்றன. உண்மையை எழுதினால், எழுதப்படுபவர்களுக்கு உலகியர்களால் பாதிப்பு வரும் என்று கருதியே இப்படிப்பட்ட உண்மை கருத்துக்களை வள்ளற்பெருமான் உரைக்கும்போது, அக்கருத்தினை சைவ சமயச் சொற்களை பயன்படுத்தியே பெரும்பாலும் பாடல்களாக வடித்திருப்பார். அதனை சற்று கூர்ந்து நோக்கினால் அதன் பொருள் வேறாக இருப்பதைக் காணலாம். நாம் சமய மத சடங்குகளைக் கடந்து திருவருட்பாவினை பார்க்கும்போது அதன் சத்தியமானது நம்மையும் சத்தியமாக்கும் வல்லமை

உடையதாய் இருப்பதை உணரலாம். அதுவல்லாது மேலோட்டமாக பார்த்தால், நம்மால் சமய மதக்குழியினை விட்டு பெருவெளியினை தரிசிப்பது என்பது நடவாத காரியம்.

முடிவாக, மேற்படியான ஆய்வின் மூலம் ஐந்தொழில் செய்வதில் சிவபெருமானும் வள்ளற்பெருமானும் சமநிலையில் இருந்தாலும், அந்த ஐந்தொழில் செய்வதில் ஒரு நொக்கத்தை வள்ளற் பெருமானுக்கு அந்த அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வழங்கியதால், வள்ளற்பெருமான் செய்யும் ஐந்தொழில், சிவபெருமான் செய்யும் ஐந்தொழிலைக்காட்டிலும் பல படிகள் முன்னிற்கின்றன. எனவே பணி செய்வதில், சிவபெருமானைவிட வள்ளற்பெருமானே மோலோங்கி இருப்பதையும் நம்மால் இதன்மூலம் அறிய முடிகிறது.

> இதுவரை இந்தியாவில் யாரும் புதிய அடிப்படை தத்துவங்களை உருவாக்கிடவில்லை.

ஐரோப்பிய தத்துவ ஞானிகள் எல்லாம் ஒருவரின் கருத்தினை மற்றவர்கள் மறுத்து அவரவர்களும் ஒவ்வொரு புதிய கருத்தினை வெளிப்படுத்தினர். ஆனால் இந்திய தத்துவ ஞானிகள் அவ்வாறு அல்ல. இங்கே பல்வேறு மாறுபட்ட கருத்துகள் தோன்றினாலும் அவையாவும் முந்தைய மரபை ஒட்டியே தங்களது வேர்களை அமைத்துக்கொண்டன. பழையனவற்றின் தொடர்ச்சியாகவே நாம் புதிய தத்துவங்களை காண இயலும். இதுவரை இந்தியாவில் யாரும் புதிய அடிப்படை தத்துவங்களை உருவாக்கிவிடவில்லை. வள்ளற்பெருமானும் இதற்கு விதிவிலக்கு அல்ல.

இவரது சுத்த சன்மார்க்க தத்துவங்கள், சைவசமயத் தத்துவத்தையே வேர்களாக கொண்டுள்ளன. வேர் சைவசமயமாக இருந்தாலும் அதிலிருந்து வளர்ந்த மரம் வேறாகவும், இவ்வுலகில் புதியதாகவும் இருப்பதுதான் சுத்த சன்மார்க்கத்தின் சிறப்பு. 'சுத்த சன்மார்க்கம்' என்பது 'சன்மார்க்கம்' என்ற சைவசமயத்தின் வேர் ஆகும். சுத்த சன்மார்க்கத்தில் 'சிவம்' என்பது சைவசமயத்தின் 'சிவன்' என்கிற வேர் ஆகும். சுத்த சன்மார்க்கத்தில் 'மரணமிலா பெருவாழ்வு' என்பது சைவசமயத்தின் 'சிவசாயுச்சியம்' என்கிற வேர் ஆகும். சுத்த

சுத்த சன்மார்க்கத்தில் 'அக இனம்' என்பது சைவசமயத்தின் 'தீட்சை' என்கிற வேர் ஆகும். சுத்த சன்மார்க்கத்தில் 'ஐந்தொழில்' என்பது சைவசமயத்தின் 'ஐந்தொழில்' என்கிற வேர் ஆகும். சுத்த சன்மார்க்கத்தில் 'சிற்சபை' என்பது சைவசமயத்தின் சிதம்பரம் 'பொன்னம்பலம்' என்கிற வேர் ஆகும். சுத்த சன்மார்க்கத்தில் 'சிற்சத்தி' என்பது சைவசமயத்தில் 'சிவகாமி' என்கிற வேர் ஆகும்.

வேர் என்பது மரத்தின் ஒரு முக்கிய பாகமாக இருப்பினும், நாம் வெளியில் தெரிகின்ற மரமான சுத்த சன்மார்க்கத்தை மட்டுமே காண வேண்டும் என்பது வள்ளற்பெருமானின் அவா ஆகும். அதாவது வேர் இல்லாத மரமாக காண்பவர்கள் சுத்த சன்மார்க்கிகள். மாறாக, சுத்த சன்மார்க்க மரத்தில் மண் மூடியுள்ள வேரினை தோண்டி தோண்டி பார்ப்பவர்கள் சைவ சன்மார்க்கிகள் ஆவர். இவர்களால் சுத்த சன்மார்க்கம் என்கிற மரமும் சேதமாகும். சுத்த சன்மார்க்க காலம் வரும்வரை முரண்பாடுகளுக்கிடையேதான் இந்த புதிய மார்க்கம் வளர்ச்சிகாண வேண்டும் என்பதும் வள்ளலாரின் விருப்பம். முரண்பாடுகளை நாமே நீக்குவதைவிட அவரவர்கள் உண்மை கண்டு நீக்கிக்கொண்டு வெளி வரவேண்டும் என்பதே வள்ளலாரின் சூட்சுமம்.

'வள்ளலார்' என்ற சொல் ஒன்றுதான். ஆனால் சைவ சமயத்தவர்கள் அச்சொல்லை எவ்வாறு பார்க்கிறார்களோ, அதனினும் முற்றிலும் வேறு பொருள் கொண்டு பார்ப்பவர்கள் சுத்த சன்மார்க்கிகள்.

சுத்த சன்மார்க்க மரத்தில் காய்த்து பழுத்ததுதான் 'அருட்பெருஞ்ஜோதி' அல்லது 'சிவம்' என்கிற ஆண்டவர். இவருக்கென்று புதியதாக இவ்வுலகில் ஞானசபை எழுந்துள்ளது. இவருக்கென்று புதியதாக இவ்வுலகில் அருட்பாடல்கள் எழுந்துள்ளது. இவருக்கென்று புதியதாக இவ்வுலகில் திருமுறைகள் எழுந்துள்ளன. இவருக்கென்று புதியதாக இவ்வுலகில் அனையாதீபம் எழுந்துள்ளன. இவருக்கென்று புதியதாக இவ்வுலகில் அனையாஅடுப்பு எழுந்துள்ளன. இவருக்கென்று புதியதாக இவ்வுலகில் கொடி எழுந்துள்ளது. இவருக்கென்று புதியதாக இவ்வுலகில் வழிபாட்டுமுறை எழுந்துள்ளது. இவருக்கென்று இவ்வுலகில் புதியதாக வெள்ளாடை சாதுக்கள் எழுந்துள்ளார்கள். இவருக்கென்று இவ்வுலகில் புதியதாக அகஇனம் எழுந்துள்ளது. இவருக்கென்று இவ்வுலகில் புதியதாக ஒழுக்கங்கள் எழுந்துள்ளது. இவருக்கென்று இவ்வுலகில் புதியதாக பெருவாழ்வு எழுந்துள்ளது. இவருக்கென்று இவ்வுலகில் புதியதாக சங்கம் எழுந்துள்ளது. இவருக்கென்று இவ்வுலகில் புதியதாக சாலை எழுந்துள்ளது. இவருக்கென்று இவ்வுலகில் புதியதாக மகாமந்திரம் எழுந்துள்ளது. இவருக்கென்று இவ்வுலகில் புதியதாக சாகாக்கல்வி விளக்கமாக எழுந்துள்ளது. இதற்கெல்லாம் வேர் சைவசமயத்தில் உள்ளதாகவும், மற்ற மதங்களில் உள்ளதாகவும் நாம் அந்த வேரினைத் தேடிச்சென்றால், நாமும் அந்த வேர் போல மண்மூடிப்போக வேண்டியதுதான். அதற்காகத்தான் அந்த வேர்களை எல்லாம் 'பொய்' என்று சாடுகிறார். இதன்மூலம் நம்மை மேல்நோக்கிய பார்வையால், மரத்தினைக் கண்டு அதில் உள்ள பழத்தினை உண்ண வலியுறுத்துகிறார். அந்த பழத்தினை உண்ணும் வழிமுறையாக சுத்த சன்மார்க்கத்தை படைக்கிறார்.

அவ்வாறு படைக்கும்போது, சைவசமய வேர் சொற்களில் சிலவற்றை மட்டும் அப்படியே எடுத்து கையாள்கிறார். உதாரணமாக 'ஐந்தொழில்' என்பது சைவசமய கடவுளான சிவபெருமான் மட்டுமே செய்யக்கூடிய ஒரு செய்கையாகும். இந்த 'ஐந்தொழில்' என்கிற செய்கையினை சுத்த சன்மார்க்கம் மூலம், அதனை நானும் செய்கிறேன் என்கிறார் வள்ளற்பெருமான். ஏன்.... அதனை ஒரு தும்புகூட செய்ய முடியும் என்கிறார் வள்ளற்பெருமான். சுத்த சன்மார்க்கத்தை பொறுத்தவரை சிவபெருமான் என்பவர் ஒரு தும்பு என்று சொல்லாமல் சொல்லுகிறார் வள்ளற்பெருமான். இதைப்போலவே 'திருச்சிற்றம்பலம்', 'சிவகாமி', 'நடராஜர்', 'சிதம்பரம்', 'சன்மார்க்கம்' போன்ற சைவசமய வேர் சொற்களை அப்படியே சுத்த சன்மார்க்கத்தில் பயன்படுதியிருப்பினும் அதற்கு உள்ளார்ந்த பொருள் வேறு. இதற்கெல்லாம் சைவ சமய வேர் சொற்களின் பொருளைக்கொண்டு நாம் நோக்குதல் கூடாது. 'வள்ளலார்' என்ற சொல் ஒன்றுதான். ஆனால் சைவசமயத்தவர்கள் அச்சொல்லை எவ்வாறு பார்க்கிறார்களோ, அதனினும் முற்றிலும் வேறு பொருள் கொண்டு பார்ப்பார்கள் சுத்த சன்மார்க்கிகள்.

இதுவரை நாம் "பணிகள்" என்ற தலைப்பில் சிவபெருமானையும் வள்ளற்பெருமானையும் ஒப்பிட்டுப் பார்த்தோம். இனி இரண்டாவதாக அவர்களது பிறப்பும் இறப்பும் பற்றி சற்று ஆராய்வோம்.

பிறப்பும் இறப்பும்:

சிவபெருமான்:

சைவ சமயக்கடவுளான சிவபெருமான் பிறப்பும் இறப்பும் இல்லாதவன். அதனால் அவனுக்கு ஆதியும் இல்லை, அந்தமும் இல்லை என்கிறது சைவ சமயம்.

"பிறப்பிலான் முடிவிலான் தாணுமுக் கண்களுடையான்"
(திருவருட்பா - 1960)

என்று சிவபெருமானின் பிறப்பு இறப்புகளை பற்றி வள்ளற்பெருமான் தமது திருவருட்பாவில் பதிவு செய்துள்ளார்.

"பரவெளியன் முக்கண்ணன் பரவிந்தி னொளியன்
பரப்பிரமன் முடிவிலான் பரமுத்த வெளியன்"
(பிரபந்தத்திரட்டு - 2960)

என்று சிவபெருமானின் முடிவில்லாத் தன்மையினை வள்ளலாரின் அணுக்கத்தொண்டர் காரணப்பட்டு ச.மு.கந்தசாமிபிள்ளை அவர்களும் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே சைவ சமய தத்துவப்படி சிவபெருமான் ஆதியும் அந்தமும் இல்லாதவன் அதாவது பிறப்பும் இறப்பும் இல்லாதவன் என்று தெளிவாகிறது. எனினும்,

"தாய்வயிற்றில் பிறவாது தானே முளைத்தவர்..."
(திருவருட்பா - 2985)

என்று ஓரிடத்தில் சிவபெருமானின் பிறப்பை பற்றி முரணாக ஒரு திருவருட்பா பாடல் வருகிறது. தாய்வயிற்றில் பிறக்காமல் தானே பிறந்தவர் என்றால், அங்கே காலம் குறிக்கிடுகிறது. ஏதோ ஒரு காலத்தில் அவர் எப்படியோ பிறந்திருக்கிறார் என்றே பொருள்கொள்ள நேரிடுகிறது. இருப்பினும் பெரும்பாலும் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதனையே நாம் எடுத்துக்கொண்டு சிவபெருமானுக்கு பிறப்பும் இறப்பும் இல்லை என்பதே சைவசமய தத்துவம் என கருதுவோம்.

வள்ளற்பெருமான்:

சுத்த சன்மார்க்கத்தை ஏற்படுத்திய வள்ளற்பெருமான் என்பவர் ஒரு சாதாரண மனிதர். ஒரு தாயின் வயிற்றில் பத்து மாதம் உருபெற்று இப்பூமியில் பிறந்தவர். இந்திய நாட்டில் தமிழ்நாடு மாநிலத்தில் கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் வட்டத்தில் உள்ள திருமருதூர் என்னும் கிராமத்தில் வசித்த சைவ சமயத்தை பின்பற்றும் கருணீகர் குலத்தோனான இராமையபிள்ளைக்கும் அவருடைய ஆறாவது மனைவியான சின்னம்மாள் என்பவருக்கும் ஐந்தாவது மகனாக 1823-ஆம் ஆண்டு அக்டோபர் ஐந்தாம் நாள் வள்ளற்பெருமான் பிறந்தார். இவருடைய இயற்பெயர் இராமலிங்கம். பிற்காலத்தில் வள்ளற்பெருமான் தாம் இடுகின்ற கையொப்பத்தில் முதலில் "இராமலிங்கம் பிள்ளை" என்றும் இறுதியாக "சிதம்பரம் இராமலிங்கம்" என்றும் தம்மை வெளிபடுத்திக்கொண்டார். எனினும் "திருவருட்பிரகாச வள்ளலார்" என்று மக்கள் இவரை அழைக்கின்றனர். இவருடைய சீடர் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள்தான் முதன் முதலில் இந்த சிறப்புப் பெயரை சூட்டினார். அதிலிருந்து "வள்ளலார்" என்கிற பெயர் நிலைத்துவிட்டது.

"வாழையடி வாழைஎன வந்ததிருக் கூட்ட
மரபில்யான் ஒருவன் அன்றோ..."
(திருவருட்பா - 3803)

இதுவரையில் இந்த பூமியில் வந்து உதித்த திருக்கூட்ட மரபில் நானும் ஒருவன், என்று தம்மை "திருக்கூட்ட மரபினன்" என்று அறிமுகம் செய்துகொள்கிறார் வள்ளற்பெருமான்.

"எனை இந்த உகத்தே இறைவன்
வருவிக்க உற்றேன் அருளைப் பெற்றேனே."
(திருவருட்பா - 5485)

இறைவனின் ஆணைப்படி இந்த பூமி தம்மை வருக... வருக... என வரவேற்றதால் நான் இங்கு வருவிக்க வந்தேன், என்று கூறுவதன் மூலம் இவர் நம்மைப் போல தம்முடைய வினை அழியவோ அல்லது வினை கூடவோ இந்த பூமியில் பிறப்பெய்தவில்லை. இறைவனின் கட்டளையை நிறைவேற்ற அந்த இறைவனால் அனுப்பப்பட்டவர் என்பது தெரியவருகிறது. *(தொடரும்...)*

கண்மூடி வழக்கம்

குலதெய்வ வழிபாடு

இந்து மதத்தை பின்பற்றும் தமிழ்நாட்டில், சைவ மற்றும் வைணவ சமயத்தார்களுக்கு என்று ஒரு தலையாய தெய்வங்களாக சிவன் மற்றும் விஷ்ணு என்ற தெய்வங்கள் இருந்தும் அவர்கள் அத்தெய்வங்களை வணங்கிக்கொண்டே, தங்கள் குடும்பக் குழுக்களுக்கு என தனியாக ஒரு தெய்வத்தையும் தொன்றுதொட்டு வணங்கி வருவார்கள். இத்தெய்வத்தை குலதெய்வம் என்பர். இத்தெய்வங்கள் பெரும்பாலும் கிராம தேவதைகள், கிராம காவலர்கள் என்ற வகையில் தமிழகம் முழுதும் மக்கள் வழிபாட்டில் இருந்து வருகிறது. இந்த குலதெய்வங்களின் பட்டியலை எடுத்தால் ஆயிரங்கணக்கில் அப்பட்டியல் நீண்டு கொண்டே இருக்கும். தங்கள் குடும்பங்களில் நடக்கும் சுப நிகழ்ச்சிகளின்போது முதலில் குலதெய்வ வழிபாடு செய்துவிட்டுதான் மற்ற நடவடிக்கையில் மக்கள் ஈடுபடுவர்.



குழந்தைகளுக்கு காது குத்தல், மொட்டை அடித்தல், பெயர் சூட்டுதல், வருடாந்திர வழிபாடுகள், உயிர்பலி இடுதல் மற்றும் சிறப்பு வேண்டுதல்கள் போன்றவைகள் இந்த குலதெய்வ கோவிலில் நடந்தேறுகின்றன. குடும்ப விழா அழைப்பிதழ்களில், முதலில் குலதெய்வத்தை துணையாக நிறுத்தி, அந்த தெய்வத்தின் பெயரையே முதலில் அச்சடிப்பர். தந்தை வழி சமூகத்தினர்களால் பரம்பரையாக சங்கிலித் தொடர் போன்று இந்தப் பழக்கம் ஒரு குடும்பத்தை வந்தடைகிறது. யாரேனும் குலதெய்வ வழிபாடு செய்யவில்லை எனில் அக்குடும்பத்தில் சோதனைகள் நேரிடும் என்ற பயமுறுத்தலுடன் இப்படிப்பட்ட வழிபாடுகள் இன்றும் நம்சமூகத்தினரிடையே காணப்படுகிறது.

குலதெய்வ வழிபாடு மிகவும் அவசியமானது என்று மக்களிடையே சொல்லக்கூடிய பெரியவர்கள் மற்றும் பழமை விரும்பிகளால் மக்கள் பயமுறுத்தப்படுகிறார்கள். சென்ற ஆண்டு (ஜூலை-2015 என நினைக்கிறேன்) புதுச்சேரியில் புதிய பேருந்து நிலையத்திற்கு பக்கத்தில் உள்ள ஒரு ஹோட்டலில் குலதெய்வ வழிபாடு பற்றின கூட்டம் நடைபெற்றது. அதில் எனது தாய், தந்தை, சகோதரியுடன் நானும் கலந்துக்கொண்டேன். இப்படிப்பட்ட கூட்டத்திற்கு நான் செல்லமாட்டேன். இதைத்தெரிந்து எனது வீட்டில் எங்கு செல்கிறோம் என்றே என்னிடம் கூறாமல் கடலூரிலிருந்து புதுச்சேரிக்கு அழைத்துச் சென்றனர். மகிழுந்தை (Car) நான்தான் ஓட்டிச்செல்ல வேண்டும் என்பதால் அவர்கள் சொன்ன இடத்திற்கு அவர்களை அழைத்துச் சென்றேன். அக்கூட்டத்தில் கலந்துக்கொள்ள நான் கட்டாயப்படுத்தப் பட்டேன்.

அந்நிகழ்ச்சியை நடத்தியவர் திரு.ஏ.பி.முகன் (Mr.A.B.Mughan-Film Director/Writer-Mobile No.8680896275) என்பவராவார். இவர் கும்பகோணம் வள்ளலார் பள்ளியில் படித்தவர். சென்னையில் வாழ்பவர். முதலில் திராவிட கழகத்தில் இணைந்து கடவுள் மறுப்பு கொள்கையை கடைபிடித்தவர். பிறகு தெய்வ வழிபாட்டில் ஈர்க்கப்பட்டவர். சினிமா துறையில் இயக்குனாராகவும் பல நூல்களை எழுதியவராகவும் திகழ்கிறவர். இவரது நிகழ்ச்சியில் 'குலதெய்வம் உண்டு' என்பதையும் 'இறந்தவர்களின் ஆவிகள் நடமாட்டமும் உண்டு' என்பதனையும் மக்களிடம் நிரூபிப்பதே தலையாய நிகழ்வு. அதனை ஒட்டி காசு பார்க்கும் வேலையும் உண்டு. இந்நிகழ்ச்சிகள் சங்கரா தொலைக்காட்சியில் இடம்பெறும். திங்கள் கிழமை மதியம் மூன்று மணிக்கு ஒளிபரப்பாகும். தற்போது ஒளிபரப்பு ஆகிறதா எனத் தெரியவில்லை.

அன்றைய கூட்டத்தில் பங்குபெற்றவர்களின் பெயர்களை குலுக்கல் முறையில் ஒருவரைத் தேர்ந்தெடுப்பார்கள். அவர்களை மேடைக்கு அழைத்து மக்களின் முன் நிற்க வைத்து, சில நொடிகள் தியானித்து அவரின் குலதெய்வம் எது? என்பதனை சரியாக சொல்லிவிடுவார் அவர்.

அப்படித்தான் அன்றைய கூட்டத்தில் குலுக்கலில் எனது பெயர்

இடம்பெற்றுவிட்டது. நானும் ஒருவித தயக்கத்துடன் மேடைமீது ஏறி அவரது முன்னிலையில் நின்றேன். உடனே என் முகத்தில் கொஞ்சம் நீரை தெளித்துவிட்டு, கண்ணை மூடி தியானித்தார். ஒரு நிமிடம்கூட ஆகியிருக்காது. சட்டென கண்களைத்திறந்து, உங்கள் குலதெய்வம் என்னுள் வந்தார்கள். இவர்கள்தான் உங்கள் குலதெய்வம் என்று கூறினார். அது இன்றைக்கும் எனக்கு ஆச்சரியமாகவே உள்ளது. அவர் சொன்னது மிகச்சரியாக இருந்தது. எங்களுக்கு இரண்டு குலதெய்வங்கள் உண்டு. அந்த இரண்டையும் மிகச்சரியாக சொன்னதால் நாங்கள் அவரிடம் கட்டுண்டோம். எங்கள் குடும்பத்தில்



உள்ள சில சிக்கல்கள் தீர அவரிடம் ரூபாய் முப்பதாயிரம் இழந்தோம். ஆனால் இதுவரை அச்சிக்கல்கள் தீரவில்லை. தீர்ந்திருந்தாலும் நம்புவதற்கில்லை.

இதே கூட்டத்தில் புதுச்சேரிக்கு அருகில் உள்ள மடுகரை கிராமத்திலிருந்து ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு வள்ளலார் பக்தர், தனது மனைவியின் வற்புறுத்தலால் அக்கூட்டத்திற்கு வந்திருந்தார். கூட்டம் முடிந்து, அக இனத்தார்கள் என்ற முறையில் அவர்களே வந்து எங்களிடம் பேசினார்கள். அவர் வாழப்பட்டு சுவாமிகளால் மெருகூட்டப்பட்டவர். எனவே வள்ளற்பெருமானைத் தவிர நான் யாரையும் வணங்குவதில்லை. நான் குலதெய்வ வழிபாடெல்லாம் விட்டு வருடக்கணக்கில் ஆகிறது. அவ்வழிபாடு நமக்குத் தேவையில்லை. நீங்கள் அவரிடம் ஏமாந்துவிடாதீர்கள். என்று எங்களை எச்சரித்தார். (எச்சரிக்கையையும் மீறி ஏமாந்தோம்) இருப்பினும் அவருடைய மனைவி, எங்களிடம் 'குலதெய்வ வழிபாடு செய்துவிட்டு வந்தால் எங்கள் பிரச்சனை தீரும், என நினைக்கிறேன். ஆனால் இவர் வர மறுக்கிறார்' என்று அவரின் கொள்கையை பற்றி, அவர் முன்னிலையிலேயே எங்களிடம் கொட்டித் தீர்த்தார். உங்கள் மனைவியின் வேண்டுதலை ஏற்று நீங்கள் ஒருமுறை உங்கள் குலதெய்வத்திற்கு சென்றுவிட்டு வாருங்கள், என்று நானும் அவருக்கு எடுத்துரைத்தேன். சென்றார்களா எனத் தெரியவில்லை.

சென்றிருக்க மாட்டார்கள் என்றே நினைக்கிறேன். ஏனெனில் அவர் 'எங்கள் குடும்பத்தில் எது நேரிடினும் அது வள்ளற்பெருமானின் ஆசியால்தான்!' என்ற நம்பிக்கையில் உறுதியோடு மிகத்தெளிவாக இருந்தார். அவர் பெயர் தவத்திரு.வீரப்பன் என்பவராவார்.

இதை எல்லாம் ஏன் எழுதுகிறேன் என்றால், இந்த குலதெய்வ வழிபாடு சுத்த சன்மார்க்கிகளுக்கு தேவையில்லை என்பதை எடுத்துக்காட்டவே எழுதுகிறேன். குலதெய்வம் உண்மையில் உண்டா? என்றால் உண்டு. அது பொய்யில்லை. ஆனால் அவைகளால் நமக்கு ஆவது ஒன்றுமில்லை. இவ்வழிபாட்டால் பல தீமைகள் ஏற்பட்டு, அதனால் நமக்கும், நம்மால் பிறர்க்கும் பாவங்கள்தான் பற்றுகின்றன.

"எனக்கு பெண்களின் குறிகள்தான் இன்பத்தை வாரி வழங்குகின்றன. இவ்வுலகில் மற்ற எதனாலும் எனக்கு இன்பம் ஏற்படுவதில்லை. எனவே கடவுள் என்பது பொய். பெண்கள் குறிதான் நான் கண்ட கடவுள். அதுதான் எனக்கு குலதெய்வம்" என்ற கொள்கையுடையோர்களும் இப்பூமியில் மறைமுகமாக வாழ்கின்றனர். இவர்களை திருத்தவே முடியாது. நமக்கு எளிதில் இன்பம் தருகிறது என்பதற்காக, நாம் அதனை தெய்வமாகக் கருதுவது எவ்வளவு முட்டாள்தனமோ, அதுபோன்றதே குலதெய்வ வழிபாடும். இவ்வழிபாட்டால் சில பிரச்சனைகள் தீர்வதுபோல தோன்றினாலும், உண்மையில் அது நமது ஆன்மீக இலக்கை அடைய தடையாய் இருக்கின்றது. இவ்வழிபாட்டை வள்ளலார் 'சிறுநெறி' என்று கூறுகிறார்.

"இல்லையொரு தெய்வம்வே றில்லைஎம் பால்இன்பம்
ஈகின்ற பெண்கள்குறியே
எங்கள்குல தெய்வம்எனும் மூடரைத் தேற்றஎனில்
எத்துணையும் அரிதரிதுகாண்..." 2421

வள்ளர்பெருமான் தனது குலதெய்வத்தை வணங்கினாரா? என்றால். இல்லை. வள்ளற்பெருமானுக்கு ஏற்படாத இன்னல்களா நமக்கு ஏற்பட்டுவிட்டது? எவ்வகையிலும் (பெருவாழ்வைத் தவிர) நாம் அவரைவிட இவ்வுலகில் சுகமாகத்தான் வாழ்கிறோம். ஆனால் நாம் இன்னும் சுகமாய் வாழவேண்டும் என்ற அவாவினால், நமக்கு இயல்பாய் ஏற்படக்கூடிய துன்பங்களுக்காக வருந்தி, துக்கம் என்னும்

மாயையால் குலதெய்வங்களை நாடிச் செல்கிறோம். நம்முடன் பிறந்த உயிர்களை பலியிடுகிறோம். இன்னும் பல சடங்குகளை செய்கிறோம். ஆனால் மாயை என்னும் வினைகளால் கலக்கம் ஏற்பட்டபோது, வள்ளற்பெருமான் நம்மைப் போன்று குலதெய்வ வழிபாட்டில் (சிறுநெறி) ஈடுபடவில்லை என்பதை,

"இருள்நெறி மாயை வினைகளால் கலக்கம்
எய்திய தென்செய்வேன் எந்தாய்
தெருள்நிலை இன்றிக் கலங்கினேன் எனினும்
சிறுநெறி பிடித்ததொன் றிலையே." - 3503

"சிறுநெறிக் கெனைத்தான் இழுத்ததோர் கொடிய
தீமன மாயையைக் கணத்தே
வெறுவிய தாக்கித் தடுத்தெனை ஆண்ட... - 5422

"செம்மாந்த சிறியேனைச் சிறுநெறியில் சிறிதும்
செலுத்தாமல் பெருநெறியில் செலுத்திய..." - 4165

"சிறுநெறிகள் அடையாது என்னைத்
தடுத்தானைப் பெருநெறிக்குத் தடைதீர்த் தானை..." - 3944

"சிறுநெறி செல்லாத் திறனளித் தழியா
துறுநெறி யுணர்ச்சிதந் தொளியுறப் புரிந்து..." அ.அகவல்-1565

என்றெல்லாம் பாடுகிறார். 'ஒன்றுதான் தெய்வம்' என்று உணர்ந்த அறிவுடைய நமக்கு 'குலதெய்வம்' என்பது எப்படி உருவாகமுடியும்? நாம் செய்யும் குற்றத்தை தன்மேல் சாற்றி பாடுவதையும் பாருங்கள்,

"செற்றமே விழையும் சிறுநெறி பிடித்தேன்
தெய்வம் ஒன் றெனும்அறி வறியேன்..." - 3284

"சிவநெறி பிடியேன் சிறுநெறிச் சழக்கையே
சிலுகுக் குரங்கெனப் பிடித்தேன்..." - 3288

இவ்வாறு குரங்குப்பிடியாக சிறுநெறி என்னும் குலதெய்வ வழிபாட்டைப் பிடித்தொழிகினால், ஒரே இறைவனான அருட்பெருஞ்ஜோதியாண்டவர் நம்மை கைவிட்டு சென்றுவிடுவார் என்பதனையும் வள்ளற்பெருமான் இங்கே குறிப்பிடத் தவறவில்லை,

"சிறுநெறியில் சென்றார் தம்மைப் பிறிந்தானை..." - 3934

எனினும் வள்ளற்பெருமான், சிறுதெய்வங்களை வணங்காது பெருந்தெய்வங்களான சிவனையும், விஷ்ணுவின் அவதாரமான ராமனையும் தனது குலதெய்வமாக கொண்டாடுகிறார்.

"என்குருவெ னும்பதமெ னிட்டதெய் வப்பத
மெனதுகுல தெய்வப்பதம்"
-- திருவடிப் புகழ்ச்சி

"எச்சமயத் தெய்வமுந்தான் எனநிறைந்த தெய்வம்
எல்லாஞ்செய் வல்லதெய்வம் எனதுகுல தெய்வம்... - 3909

"புறம்புணர்ந்தார் அகம்புணர்ந்தார் புறத்தகத்தும் புணர்ந்தார்
அன்னியர்அல் லடிஅவரே எனதுகுல தெய்வம்... - 5738

"தெவ்வினையார் அரக்கர்குலம் செற்ற வெற்றிச்
சிங்கமே எங்கள்குல தெய்வ மேயோ
வெவ்வினைதீர்த் தருள்கின்ற ராம நாம..." - 1942

என்று சிவபெருமானையும் ராமனையும் தனது குலதெய்வமாகக் காண்கிறார். முதலில் நாம் 'குலதெய்வம்' என்றாலே அது 'சிறிநெறி', "சிறிய தெய்வங்கள்" என்று கண்டோம். ஆனால் சிவன், விஷ்ணு ஆகிய பெரிய தெய்வங்களை மட்டும் நாம் நமது குலதெய்வமாக வழிபடலாமா? என்றால், அதுவும் கூடாது. வள்ளற்பெருமான் அவ்வாறுதானே வழிபடுகிறார்! என்று கேட்கலாம்.

வள்ளற்பெருமான் இவற்றையெல்லாம் பாடிவிட்டு, ஒரு பொதுமையை நோக்கி முன்னேறுகிறார். மதங்கள், சமயங்கள் என்ற வட்டத்தைவிட்டு வெளிப்படுகிறார். அப்பொழுது அவருக்காகவே, இதுவரை இவ்வுலகில் எழுந்தருளாத தனித்தந்தை வருகின்றார். அவரது வருகையாலே, சிறிய தெய்வங்களை குலதெய்வமாகக் கொள்ளும் தாழ்குலமும், பெருந்தெய்வங்களை குலதெய்வமாகக் கொள்ளும் உயர்குலமும் - அதாவது அந்த சிறுதெய்வமும், பெருந்தெய்வமும் ஒன்றெனவே காட்சியளிக்கின்றன. இந்த இரண்டுவகை தெய்வங்களும் மரணமுறுவதை உணர்கிறார். இவர்களை வணங்கும் இருகுலமும் மரணம் உறுவதைக் காண்கிறார்.

இந்த இரண்டுவகை தெய்வங்களுமே, மனிதர்களைப் போன்றே தத்தம் கைகளால் 96 அங்குலமே (எட்டு சாண்) என்பதை அறிகிறார்.

இப்படிப்பட்ட மண்ணில் நான் ஏன் பிறந்தேன்? சாவதற்காகவா பிறந்தேன்? என்று தன்னுள் குலாவுகின்ற தனித்தந்தையிடம் முறையிடுகிறார். அப்போது அவருக்கு கிடைக்கிறது சாகாவரம். ஆகவே இனிமேல் மனிதர்களுக்கு குலதெய்வம் என்பது எவ்வகையிலும் தேவையில்லை. 'குலவு' தெய்வம் வேண்டும் என்கிறார். நம்முடன் குலவுகின்ற தெய்வத்தால்தான் நமது மரணத்தை நாம் வெல்லமுடியும் என்கிற உண்மையினை புரட்சியினை வெளிப்படுத்துகிறார்.

'குலவு' என்றால் ஒருமையுடன் கூடுதல். இப்படி நம்மிடம் ஒருமையுடன் கூடும் அருட்பெருஞ்ஜோதி தெய்வமே உலக ('உலகு' - திருப்பிப் படித்தால் 'குலவு') உயிர்களுக்கெல்லாம் தனித்தந்தை ஆகும். இப்படிப்பட்ட தெய்வமே / குலவு தெய்வமே நமது வழிபாட்டில் இருக்க வேண்டும் என்பதை வள்ளற்பெருமான், எச்சமயத்தார்க்கும், எம்மதத்தார்க்கும் பொதுமையாகக் கண்டார். கடவுள் ஒருவரே, அவரே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்று முழங்கினார். எச்சமயத்தார்களும் எம்மதத்தார்களும் வணங்கும் தெய்வங்களில் எல்லாம் தனித்தந்தை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் லேசங்கள் உள்ளன என்ற உண்மையினை கண்டறிந்து அதனை உலகிற்கு வெளியிட்டார்.

"நரைமரண மூப்பறியா நல்லஉடம் பினரே
நற்குலத்தார் எனஅறியீர் நானிலத்தீர் நீவிர்
வரையில்உயர் குலம்என்றும் தாழ்ந்தகுலம் என்றும்
வகுக்கின்றீர் இருகுலமும் மாண்டிடக்காண் கின்றீர்
புரையுறுநும் குலங்கள்எலாம் புழுக்குலம்என் றறிந்தே
புத்தமுதம் உண்டோங்கும் புனிதகுலம் பெறவே
உரைபெறும்என் தனித்தந்தை வருகின்ற தருணம்
உற்றதிவண் உற்றிடுவீர் உண்மைஉரைத் தேனே." - 5572

"எங்குல மெம்மின மென்பதொண் ணூற்றா
றங்குல மென்றரு ளருட்பெருஞ் ஜோதி" -அ.அகவர்-219

"கூட்டுகின்ற உலகிடைநான் ஏன்பிறந்தேன் நினது
குறிப்பறியேன் மன்றில்நடங் குலவுகுல மணியே." - 3302

"ஆடுறு சித்திக ளறுபத்து நான்கெழு
கோடியும் விளங்கக் குலவுமெய்ப் பொருளே" - அ.அகவல்-911

"கணநிலை யவற்றின் கருநிலை யனைத்துங்
குணமுறத் தெரித்துட் குலவுசற் குருவே" - அ.அகவல்-1043

சுத்த சன்மார்க்க ஒழுக்கத்திற்கு குலதெய்வ வழிபாடு தடையாக இருப்பதால் அதனை நாம் விடுத்து, ஓர் இறைவனாம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரையே வணங்கி அவனுடன் குலாவுவோம். ஓர் இறைவனை வணங்க ஓர் குறையும் இல்லை. மூட நம்பிக்கையாம் குலதெய்வ வழிபாட்டை மூடுவோம். கண்மூடி வழக்கம் எல்லாம் மண்மூடிப்போக ஆடுவோம். இனி நம் குலதெய்வம் அருள். இனி நம் இனதெய்வம் அருள். இனி நாம் அறியும்தெய்வம் அருள். இனி நமக்கு அருளும்தெய்வம் அருள்.

"அருளே நம்குலம் அருளே நம்இனம்
அருளே நாமறி வாயென்ற சிவமே" - அ.அகவல்-1011

குறுக்கெழுத்துப் போட்டி–06

ஏப்ரல்-2016 **மாதத்திற்கான சன்மார்க்க குறுக்கெழுத்துப் போட்டி விடை.** இம்மாதப் போட்டியில் வெற்றி பெற்றவர், திரு.க.பழனி அவர்கள், தேவக்கோட்டை, மதுரை. இவருக்கு பரிசாக பிரபந்தத்திரட்டு நூல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ம்	க1	க்	டு	லொ	வி	ழி	ஒ 2		த3
	ல	ட	ண்	ம	ட	ண்	தொ4	ன	மி
	ப்	ப5	உ6	ண்	மை			ன்	ழ்
கு	பு	இ 7	ர	ண்	ட	ரை		அ8	
ன்		ரா9	ஜா		ர்	தி	க10	ரு	ணை
நா11	ம்	ம12	ல	ர்		த்	ட	ள்	ண்
யு	மு	லி		ரூ		நி13	வு	ஜோ	க
ரு	த	ங்	தை	வா	து		ள்	தி	க்
வி14	வே15	க	வி	ரு	த்	தி			டு
		ம்	க16	தி17	ப18		மை	ன்	ந19

சாது தரிசனம்

எனது தாயார் திருமதி.மல்லிகா திருநாவுக்கரசு அவர்களின் கட்டளைக்கிணங்க இன்று நாங்கள் (24.04.2016) சென்னை நகருக்கு அருகில் உள்ள காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருப்போரூர் சென்றோம். அங்குள்ள ஒரு சிறிய மலைக்குன்றின் மேல் வசித்துவருகின்ற மூத்த சன்மார்க்க அன்பரை சந்தித்து ஆசிபெறுவதே எங்களது நோக்கம். அந்த நோக்கமும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் கருணையால் இன்று நிறைவேறியது. அந்த அன்பரின் பெயர் திரு.சி.கே.பி. என்கிற திரு.சி.கே.பாலசுப்ரமணி என்பவராவார். "திருப்போரூர் ஐயா" என்றே இவரை சன்மார்க்கிகள் அழைப்பர்.

வள்ளலார் போன்றே உருவத்தில் வெள்ளை முக்காடு போட்டுக்கொண்ட சாது இவர். இவருக்கு குடும்பம் உண்டு. எனினும் தற்போது திருப்போரூரில் தனிமையில் சன்மார்க்கத் தொண்டு புரிந்து வருகிறார். இவரின் பூர்வீகம் வள்ளலாரின் அன்னை பிறந்த சின்னகாவனம் கிராமம். நாங்கள் அவர் இருக்கும் குடிலுக்கு செல்லுகையில், அவர் அங்குள்ள உள்ளூர்வாசிகள் இருவரிடம் உரையாற்றிக்கொண்டிருந்தார். எங்களைக் கண்டதும் அன்புடன் வரவேற்று குடிலுக்கு உள்ளே அழைத்துச் சென்று பேசினார். தனது 72-ஆவது வயதில் இங்கே ஒரு குடிலை அமைத்துக்கொண்டு அங்கே ஒரு அனையா தீபமும் அமைத்துக்கொண்டு தினமும் அன்னதானமும் வழங்கி வருகிறார். இவருக்கு அவ்வூரில் உள்ள இரண்டு ரிக்க்ஷா காரர்களான திரு.செல்வராஜ் மற்றும் திரு.முருகன் ஆகியோர்கள் சேர்ந்து மாதாமாதம் 12 மூட்டை அரிசி தானமாக வழங்குவதாகவும், அதனைக்கொண்டு இங்கே வருபவர்களுக்கு சிறிய அளவில் அன்னதானமும் மற்றதை திருப்போரூரில் உள்ள மகப்பேறு மருத்துவமனையில் அன்னதானம் செய்து வருவதாகவும் கூறினார். இதனால் அங்கு பிறக்கும் குழந்தைகள் சன்மார்க்க குழந்தைகளாக வளரும் என்பது இவரது நம்பிக்கை. அதுபோலவே இதுவரை அந்த மகப்பேறு மருத்துவமனையில் குறை பிரசவம் ஏதும் நடக்கமால் எல்லாம் சுகப்பிரசவமாகவே நடப்பதாகவும் எங்களிடம் சொல்லி வியந்தார்.

இதுவல்லாமல் லதா என்ற பெயரையுடைய மூன்று பெண்கள் தங்களுடைய வருமானத்தில் ஒருபகுதியினை எனது சன்மார்க்க பணிக்காக, எனது வங்கிக்கணக்கில் மாதாமாதம் வரவு வைத்துவிடுவர். அந்தப் பணத்தைக்கொண்டும் அன்னதானம் நடத்திவருவதாகச் சொல்லி மகிழ்ந்தார்.

இவர் தண்ணீரைத் தவிர எதுவும் சாப்பிடுவதில்லை. இவர் தியானித்து கொடுக்கும் தீர்த்தம் பல்வேறு நோய்களை தீர்க்கும் சக்தியுடையது என்கிறார் இவர். அந்தத் தீர்த்தத்தினை இலவசமாகவே வழங்குவதாகக் கூறினார். பணம் வாங்கிக்கொண்டு கொடுத்தால் அந்த தீர்த்தத்திற்கு பலன் இல்லை என்றும் கூறினார். மருத்துவரால் கைவிடப்பட்ட யாரேனும் என்னிடம் தொலைப்பேசியில் தொடர்புகொண்டு அவர்களது நோயினைப் பற்றி என்னிடம் தெரிவித்தால், நான் இங்கிருந்தே தியானித்து அந்நோயை அகற்றுவேன் என்றும் சொல்லி எங்களை வியப்பில் ஆழ்த்தினார்.



இறுதியாக நாங்கள் வெளியிட்ட "பிரபந்தத்திரட்டு" நூலினை எங்களிடம் கேட்டு பெற்றார். எனது தந்தையார் திரு.அ.திருநாவுக்கரசு அவர்கள் அந்நூலினை பரிசாக அவருக்கு அளித்தார். எங்கள் அழைப்பு இன்றியே "பிரபந்தத்திரட்டு" நூல் வெளியீட்டு விழாவிற்கு வடலூர் வந்து வாழ்த்து தெரிவித்துவிட்டு சென்றவர் இவர். இவரது சன்மார்க்க தொண்டுகள் சிறக்கவும், மரணமிலா பெருவாழ்வு அடையவும் வள்ளற்பெருமான் இவரை வழிநடத்துவார் என்கிற நம்பிக்கையில் அவரின் அடி வணங்கி நாங்கள் விடைபெற்றோம்.

சன்மார்க்க சாதுக்களின் தரிசனம் கிட்டுவது அரிது. எனவே அன்பர்கள் திருப்போரூர் சென்று இவரது தரிசனம் காண்பது புண்ணியம். இவரை அன்பர்கள் தங்களது இல்லத்திலிருந்தே தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு, தங்களது குறைகளை பற்றி பேசலாம். இவரின் தொடர்பு எண்: 9940346522 மற்றும் 9710463300.

மாதம் ஒரு மகான்

தாயுமானவர்

தஞ்சை மாவட்டத்தின் வேதாரண்யத்தில் கேடிலியப்ப பிள்ளை என்னும் சைவ வேளாளர் வாழ்ந்து வந்தார். வேளாண்மை குலத்தொழில் என்றாலும் எல்லையற்ற சிவபக்தியால் அவ்வூரின் சிவஸ்தலத்தின் நிர்வாகத்தையும் கவனித்துக்கொண்டிருந்தார். ஆலயம் புதிய ஒழுங்குக்கு வந்தது. அப்போது நாயக்கர் ஆட்சிக் காலம். திருச்சியில் விஜயரங்க சொக்கநாத நாயக்கர் ஆட்சி புரிந்து வந்தார். அவர் கடல் நீராடி வேதாரண்யேஸ்வரரை தரிசிக்க எண்ணி அங்கே வருகை புரிந்தார். கேடிலியப்ப பிள்ளை மன்னரை முறைப்படி வரவேற்று மரியாதைகள் எல்லாம் செய்து தரிசனமும் செய்து வைத்தார். கோவில் வழிபாட்டில் இருந்த நியமங்களையும், கோயிலின் சுத்தத்தையும், ஒழுங்கான முறையான நிர்வாகத்தையும் கவனித்த அரசர் நிர்வாகியான கேடிலியப்ப பிள்ளையின் கல்வித்தேர்ச்சியையும் கவனித்துக்கொண்டார். இத்தனை திறமை வாய்ந்த அவர் இருக்குமிடம் இதுவல்ல என முடிவு செய்த அரசர் அவரைத் திருச்சி அழைத்தார்.



கேடிலியப்ப பிள்ளையைத் திருச்சிக்கு வந்து அரசாங்கத்தின் அமைச்சுப் பதவிகளில் பெருங்கணக்கர் பணியை ஏற்றுக்கொள்ள ஆணையிட்டார். கோயிலின் நிர்வாகத்தைத் தக்க நபரிடம் ஒப்படைத்துவிட்டுத் திருச்சிக்கு வரும்படி கேட்டுக் கொண்டார். கேடிலியப்ப பிள்ளைக்கு வேறு வழியில்லாமல் போயிற்று. கோயிலைத் தக்க மனிதர்களிடம் ஒப்படைத்துவிட்டுத் திருச்சிக்குச் செல்லத் தீர்மானித்தார். கேடிலியப்ப பிள்ளைக்கும் அவர் மனைவியான கெஜவல்லி அம்மைக்கும் ஒரு மகன் பிறந்திருந்தான்.

ஆனால் கேடிலியப்ப பிள்ளையவர்களின் அண்ணாவான வேதாரண்யம் பிள்ளைக்கு மகப்பேறு வாய்க்காததால் சிவசிதம்பரம் என்னும் பெயர் கொண்ட தம் மகனைத் தம் அண்ணனுக்கே முழு மனதோடு சுவீகாரம் செய்து கொடுத்திருந்தார் கேடிலியப்ப பிள்ளை. பின்னரே திருச்சிக்கு மனைவியோடு வந்தார்.

அங்கே மலைக்கோட்டையில் வீற்றிருந்த தாயுமானவரைத் தினம் தினம் தரிசனம் செய்து வந்தார். அவர் மனைவியும் அவருடன் செல்வார். ஈசன் தாயுமானவராகச் செட்டிப் பெண்ணுக்குப் பிரசவம் பார்த்துத் தாயும் ஆன கதையை நினைந்து நினைந்து மனம் நெகிழ்வார். ஏற்கெனவே பிறந்த பிள்ளையை அண்ணனுக்குக்கொடுத்துவிட்டதால் தனக்கு இன்னொரு மகன் பிறக்க வேண்டும் என ஈசனிடம் முழு மனதோடு வேண்டினார். சிறிது காலத்தில் அவர்களுக்கு ஓர் ஆண் மகன் பிறந்தான். தாயுமானவர் அருளால் பிறந்த அந்தப்பிள்ளைக்குத் தாயுமானவர் என்ற பெயரையே பெற்றோர் சூட்டினார்கள். குழந்தை பிறந்த உடனேயே அதன் அங்க அடையாளங்களில் நிறைநிலைகள் பல தென்பட்டன. அதோடு குழந்தை ஒரு ஞானியாக, யோகியாக பர நாட்டத்தில் மேன்மை அடைவான் என ஜோதிடரும் கணித்துச் சொல்லவே பெற்றோர் மனம் மகிழ்ந்தனர். குழந்தைக்கு வயது ஐந்து ஆயிற்று. பெற்றோர்கள் குழந்தைக்கு வித்யாரம்பம் பண்ணி வைத்தார்கள்.

திருச்சியில் சிறப்பான பாடசாலை ஒன்றில் கல்வி கற்றார் தாயுமானவர். தமிழ், வடமொழி, கணிதம், ஜோதிடம் போன்றவற்றில் தாயுமானவர் நிபுணராக விளங்கினார். சைவத்தில் அதிகம் ஈடுபாடுடன் தேவாரம், திருவாசகம், சைவ ஆகமங்கள், அருணகிரியாருடைய திருப்புகழ் போன்றவற்றையும் நன்கு கற்று வந்தார். தினம் மலைக்கோட்டையில் மலை ஏறித் தாயுமானவன் ஆன சிவனைத் தரிசனம் செய்துவிட்டுப் பின்னர் திருவானைக்கா சென்று அகிலாண்ட நாயகியை வழிபடுவதைத் தன் நித்திய கர்மமாக வைத்திருந்தார் தாயுமானவர். ஒருநாள் மலைக்கோட்டை தரிசனம் முடிந்து கீழே இறங்கிக் கொண்டிருந்தவரை வழியில் ஒரு முனிவர் கண்டார். அவரைப் பார்த்ததுமே உடலும், உள்ளமும் அவர் பால் ஈர்த்தது தாயுமானவருக்கு. அவருடைய கால்களில் விழுந்து வணங்கினார். அதிகம் பேசாமல் மௌனமாக இருந்ததால் மௌன

குரு என அழைக்கப்பட்டு வந்தார் அந்த முனிவர். அவருடைய வாயினின்று எப்போதேனும் அபூர்வமாகவே சொற்கள் வெளிவரும். மேலும் அவர் திருமூலர் மரபில் வந்தவராகவும் கூறுகின்றனர். அதை ஒட்டியே தாயுமானவர் தம் பாடல்களில் "மூலன் மரபில் வரு மௌனகுருவே" என்று போற்றி இருப்பதாகவும் தெரிய வருகிறது. தாயுமானவர் அவரைத் தம் குருவாக ஏற்றுக்கொண்டு அவருக்கு ஆட்பட்டார்.

குருவால் ஆட்கொள்ளப்பட்ட தாயுமானவர் ஆன்ம சாதனங்களில் வெகு விரைவில் முன்னேற்றம் அடைந்தார். ஆச்சாரியருக்கு பக்திபூர்வமாகப் பணிவிடைகள் புரிந்தார். குருவிடம் மாறாத பக்தியும், பாசமும் வைத்திருந்த தாயுமானவருக்குச் சில காலம் குருவைப் பிரிய நேரிட்டது. பிரிந்திருக்கும் காலத்தில் மனம்குழம்பித் தவித்தார் தாயுமானவர். குருவோ இதற்கெனக்கவலைப்பட வேண்டாம் எனவும், சீடன் தனது கர்மாக்களின் பெரும்பகுதியைப் பூர்த்தி பண்ண வேண்டியே இப்பிரிவு எனவும், அதன் பின்னர் அமையப்போகும் குரு-சீடன் உறவு மிக மிகச் சிறப்பாக அமையும் எனவும் உறுதிமொழி கூறியதோடு அல்லாமல் சீடனுக்குப் பிரியும் வேளையி, "சும்மா இரு" எனும் மந்திர உபதேசம் செய்துவிட்டுச் சென்றார். அன்றிலிருந்து அதையே பீஜ மந்திரமாய்க் கொண்ட தாயுமானவ சுவாமிகள் தன் அனைத்துப் பாடல்களிலும் இந்த உபதேச மொழியை முக்கியக் கருத்தாக அமைத்திருப்பது தாயுமானவரின் பாடல்களைப் பொருளுணர்ந்து பாடுவோர்க்கு நன்கு விளங்கும்.

இவ்வுலகத்தின் பந்த பாசங்களில் அகப்பாடமல் இருக்க வேண்டி எந்நாளும் இறைவனைப் பிரார்த்தித்துப் பற்றற்ற வாழ்க்கை வாழ விரும்பிய தாயுமானவரை அவரின் பெற்றோர்கள் திருமணக் கோலத்தில் காண விரும்பினார்கள். தாய், தந்தையரின் விருப்பத்தைத் தட்ட முடியாத தாயுமானவர் மட்டுவார் குழலில் என்னும் பெயருடைய பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். இல்லறம் மேற்கொண்ட பிறகு அதற்குரிய கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதே தர்மம் எனப் புரிந்த தாயுமானவர் மனைவியோடு அறவழியில் இல்லறத்தை நடத்தி கனகசபாபதி என்னும் பெயருடைய ஆண் மகவு ஒன்றையும் பெற்றெடுத்தார். ஆனால் குழந்தை பிறந்த சில காலத்திலேயே தாயுமானவரின் மனைவி

மட்டுவார் குழலி அம்மை காலமானார். தாயுமானவர் வேறொரு திருமணம் செய்து கொள்ளாத நிலையில் அவரின் மகனை வளர்க்கும் பொறுப்பைத் தாயுமானவரின் தமையனார் சிவசிதம்பரமும், அவரின் மனைவியும் ஏற்றுக் கொண்டனர். அத்தோடு ஆத்மசாதனைக்குத் தடை என நினைத்த தாயுமானவரின் இல்லற வாழ்க்கையும் ஒரு முடிவுக்கு வந்தது.

இதனிடையே தாயுமானவரின் தந்தையார் கேடிலியப்ப பிள்ளையும் மரணமடையவே திருச்சி அரசு மீகாமன் இல்லாத கப்பல் போலத் திண்டாடியது. அரசர் தாயுமானவரே இந்த மாபெரும் பொறுப்பை ஏற்க வல்லவர் என்றுணர்ந்து அவரை அழைத்துத் தகப்பனாரின் பதவியில் தாயுமானவர் அமர்ந்து அரசருக்கும், அரசாட்சிக்கும் உதவும்படி கேட்டுக்கொண்டார். தந்தை மூலம் இந்த விஷயங்களில் ஓரளவு பயிற்சியும் பெற்றிருந்த தாயுமானவர் அரசரின் சொல்லைத் தட்ட முடியாமல் பொறுப்பை ஏற்றார். வெகு விரைவில் இதில் திறமை பெற்றவராகித் தன் கடமையைத் திறம்பட நிறைவேற்ற ஆரம்பித்தார். நாளடைவில் மன்னனும் மடிய அவன் மனைவியான ராணி மீனாக்ஷி பட்டத்தை ஏற்றாள். ராணி மீனாக்ஷிக்குத் தாயுமானவரின் இளமையும், தேஜஸும் கண்டு மனம் பேதலித்தது. ஆனாலும் வெளிப்படையாகச் சொல்லாமல் தக்க தருணத்திற்குக் காத்திருந்தாள். ஒருநாள் அரசாங்க வேலைகளைப் பனை ஓலைகளில் குறிப்பெடுத்து வைத்துச் சரிபார்த்துக்கொண்டிருந்த தாயுமானவர் திடீரென முக்கியமான குறிப்புகளுள்ள ஒரு ஓலையைக் கையில் வைத்திருந்தவர் அதைக் கசக்கித் தூர எறிந்தார். இதைக் கவனித்த ராணி மீனாக்ஷி காரணம் கேட்க, அப்போதே தான் செய்த தவறைப் புரிந்து கொண்ட தாயுமானவர் , திருவானைக்காவில் அகிலாண்டேஸ்வரியின் சேலையில் தீப்பற்றிக் கொண்டதாகவும், அதைத் தாம் அணைத்ததாகவும் கூறினார். இதை நம்பாத ராணி மீனாக்ஷி கோயிலுக்குச் சென்று உண்மையை அறிந்துவரச் செய்தாள்.

உண்மையில் அப்படி ஒரு நிகழ்ச்சி நடந்திருப்பது குறித்துத் தெரிந்ததும் ராணிக்கு இவர் எவ்வளவு பெரிய மஹான் என்பது புரிந்தது. தாயுமானவருக்கும் அரசல் புரசலாக ராணியின் தகாத ஆசை தெரிந்திருந்ததால் தான் பதவியை விட்டு விலகுவதே சரி என்றும், தீர்மானித்து விட்டார். உடனே அரசியிடம் தன் மனம்

இவ்வுலக வாழ்வை நாடவில்லை என்றும், தன் போக்கில் செல்லத் தன்னை அனுமதிக்குமாறும் கூறி அரசுப் பதவியை விட்டு விலகிவிட்டார். வெளியேறி வந்த தாயுமானவருக்கு மீண்டும் தம் குருவின் தரிசனமும் கிட்டி அவர் மூலம் சந்நியாச ஆசிரமமும், உபதேசமும் கிடைக்கப் பெற்றது. அன்று முதல் கோவணாண்டியாகவே இருந்து கொண்டு அதே திருச்சியில் வசித்து வந்தார். அவர் இருந்த உத்தியோகத்தின் மேன்மையையும் செல்வாக்கையும், செல்வநிலைமையையும், இப்போது இருக்கும் நிலையையும் பார்த்த அன்பர் ஒருவர் அவருக்குக் குளிர்காலத்திற்குப் போர்த்திக்கொள்ளவென ஒரு அழகான காஷ்மீரப் பட்டுச் சால்வையைப் பரிசளிக்க அவரோ அதை உடுத்த உடை இல்லாதிருந்த ஒரு பிச்சைக்காரிக்குக் கொடுத்துவிட்டார். தாம் கொடுத்த சால்வை எங்கே எனக் கேட்ட அன்பரிடம், அகிலாண்டேஸ்வரிக்கே கொடுத்துவிட்டதாய்ப் பதிலளித்தார். இப்படிப் பார்க்கும் பெண்களிடத்தில் எல்லாம் இறையைப் பார்த்த தாயுமானவர், யாத்திரையாகக் கிளம்பி ராமேஸ்வரம் சென்று திரும்பி வரும் காலையில் ராமநாதபுரத்திற்கு வெளியே லக்ஷ்மிபுரம் என்னும் ஊரில் சமாதி அடைந்தார். இவரின் காலம் பதினெட்டாம் நூற்றாண்டாகும். இவர் 56 தலைப்புகளில் 1452 பாடல்களை பாடியுள்ளார். திருவருட்பிரகாச வள்ளலார் இவரை, ஒரு மத சன்மார்க்கி என புகழ்வார். இவரின் பாடல்களே வள்ளற்பெருமானின் பாடல்களுக்கு முன்னோடியாக இருக்கிறது. (நன்றி - திருமதி. கீதா சாம்பசிவம்)

இலண்டனில் இருந்து வந்த செய்தி

17-04-2016 ஞாயிற்று கிழமை, மாலை 06.15 மணியளவில் எனது கைப்பேசிக்கு 0442083611915 என்ற எண்ணிலிருந்து அழைப்பு வந்தது. பேசியவர் ஒரு அம்மணி. தமிழும் ஆங்கிலமும் கலந்த நடையில் பேசினார். நான் இலண்டனிலிருந்து பேசுகிறேன். உங்கள் கைப்பேசி எண்ணினை இணையத்தளத்திலிருந்து எடுத்து பேசுகிறேன். அங்கே திருவருட்பா பாடல்களை பாடுவாரே அவரது பெயர் என்ன? என்று என்னிடம் கேட்க, மழையூர் சதாசிவம் ஐயாவை கேட்கிறீர்களா? என்றேன். அதன் பிறகு ஆமாம். பெயர் மறந்துவிட்டது. அவரின் மகன் இறந்துவிட்டாரா? அவரின் தொடர்பு எண் இருந்தால் கொடுக்கவும். என்று என்னிடம் கேட்டார்.

எனக்கு சற்று குழப்பமாக இருந்தது. அவரது மகன் சிகிச்சை பெற்று வருவதாக கேள்வியுற்றேன். ஆனால் அவரது மகன் இறந்தால் நமக்குத் தெரியாமல் இருக்காதே! என்ற குழப்பத்துடன் மழையூராரின் கைப்பேசி எண்ணினை (9442272717) அந்த அம்மணிக்கு சொல்லிவிட்டு, அவரது மகன் பற்றி எனக்கு இதுவரை எதுவும் தெரியாது மேடம், என்று சொல்லிவிட்டு இருவரும் இணைப்பை துண்டித்தோம்.


உடனே நான் எனது தாயாரிடம் இச்செய்தியை கூறினேன். எனது தாயார் உடனே மேட்டுக்குப்பம் திரு.சீனிவாசன் ஐயாவை தொடர்பு கொண்டு மழையூராரின் மகனைப் பற்றி விசாரிக்க, அவரும் எனக்கு தெரியவில்லை என கூறிவிட்டு, சித்ரா பௌர்ணமிக்கு சித்திவளாகம் வாருங்கள் என அழைப்பு விடுத்துவிட்டு இணைப்பை துண்டித்தார்.

இந்தச் செய்தியினை எப்படி மழையூராரிடம் நேரடியாக கேட்பது, என்று தயங்கிக்கொண்டே, எனது தாயார் திருமதி மல்லிகா திருநாவுக்கரசு அவர்கள் மழையூராரிடம் கைப்பேசியில் தொடர்புகொண்டார். அப்போதுதான் எங்களுக்கு தெரியவந்தது, அவரது மகன் இம்மாதம் 02-04-2016 அன்று காலமாகிவிட்டார் என்று! இன்றுதான் காரியம் முடிந்து, இப்போதுதான் வந்து அமர்கிறேன் என்று அவர் எனது தாயாரிடம், இராமலிங்கம்... இராமலிங்கம்... இராமலிங்கம்... என்று அழுதுக்கொண்டே கூறியுள்ளார்.

திருவருட்பாவினை உலகமெங்கும் தமது தெய்வீகக் குரலால் பாடிவரும் அந்த அன்பரின் குடும்பத்தில் இப்படி ஒரு சோதனையை வள்ளற்பெருமான் ஏன் கொடுத்தார்? கண்கள் கலங்குகிறது... நீர் வடிகிறது... தொண்டை அடைக்கிறது... அதுதான் இக்கேள்விக்குண்டான பதில்.

மழையூராரின் குடும்பம் வள்ளற்பெருமானின் கையில் பத்திராமாகவே உள்ளது. சோதனைகள் எல்லாம் சாதனைக்காகத்தான் என்று அவருக்கும் அவரது குடும்பத்திற்கும் இந்த சன்மார்க்க விவேக விருத்தி ஆறுதலை கூறிக்கொள்ள கடமைபட்டுள்ளது.

சன்மார்க்க குறுக்கெழுத்துப் போட்டி –எண்: 07



இடமிருந்து வலம்:

6. ஆண் யானைக்கு ------- இருக்கும். (4)
7. சுத்த சன்மார்க்க சாதனங்களில் ஒன்று ---------- (6)
9. வள்ளற்பெருமான் இலக்கணப் பத்திரிக்கை எழுத காரணமானவர் தேவிபட்டினம் --------- பிள்ளை ஆவர். (5)
12. சுத்த சன்மார்க்கிகளுக்கு கனவிலும் ---------- கூடாது. (4)
14. வடிவுடைஅம்மை வள்ளலாருக்கு தாமரை இலையில் கொடுத்த உணவு, வெண்-------- (4)
16. தக்க உத்தியோகம் தருவோம் என்று வள்ளலார் -----சாமிபிள்ளை யிடம் கூறினார். (3)
20. இந்த தேகத்தில் ------- இருக்கின்ற ஸ்தானம் ஐந்து. (3)

வலமிருந்து இடம்:

2. சுக்கில சுரோணிதத்தின் மேல் கடவுள் ----------ய் இருப்பர். (5)
4. ---------- என்ற பெருவெளியாய் விளங்குவது சிதம்பரம். (5)
5. கருணை இல்லாதோர் ---------- உடையவராவர். (5)
10. -------- கலைகள் அறுபத்து நான்கு. (2)
11. ஆன்மாவிற்கு --------- இயற்கை. (4)
16. மாந்தர்க்குக் ----------த் தூறும் அறிவு. (4)

17. இராமையப்பிள்ளை அவர்களின் ---------- மனைவிகளும் ஒருவர்பின் ஒருவராக இறந்தனர். (3)
18. கூடலூர் அப்பாசாமிச் செட்டியார் வீட்டில் வள்ளலாரை உச்சியில் தீண்டியது எது? (4)
19. ---------- இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு. (3)
20. வாழ்நாள் என்பதை இப்படியும் அழைப்பர். (4)

மேலிருந்து கீழ்:

1. சொல்லால் செய்யப்படும் ரசவாதம் ---------- (6)
3. உடலுக்கான நீரின் தேவை உணர்வினை இவ்வாறு கூறுவர், — (3)
4. வள்ளற்பெருமான் பிறந்த நட்சத்திரம் ----------. (4)
6. பெரியபுராணத்தில் குறித்த 63 நாயன்மார்களும் --------- ஆகும். (7)
13. 1008-ச் செந்தாமரை இதழ்களை அடுக்கி ஒரு ஊசியை அழுத்திய கால அளவு ---------- காலம் ஆகும். (4)
15. நறுமணம் என்பதன் வேறு பெயர் ---------- (4)

கீழிருந்து மேல்:

8. அருள் வடிவாவதே சுத்த சன்மார்க்க --------- ஆகும். (4)
9. ---------- என்பது நிலை முன்னுறு சாதனம். (3)
18. வள்ளலாரின் சொல்லுக்கு இசைந்து, மாமிசம் உண்ணும் பழக்கத்தை விடுத்த வடலூர் பறைச்சேரித் தலைவர் யார்? (4)
20. முத்திக்கு முதற்படி எது? (7)
21. ---------க்குத் தக்க செலவு செய்ய வேண்டும். (3)

விடைக்காண எழுத்துக்களின் எண்ணிக்கையை அந்தந்த குறிப்புகளுக்கு இறுதியில் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த புதிர் **எண்: 07** க்காண விடை அடுத்த மாதம் வெளியிடப்படும்.

சரியாக விடையளிக்கும் சன்மார்க்கிகளில் ஒருவரை குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து அவருக்கு, வள்ளலாரின் மாணவர் காரணப்பட்டு ச.மு.க. அவர்கள் அருளிய ரூபாய் 600/- விலை மதிப்புள்ள (தபால் செலவு உடபட) "பிரபந்தத்திரட்டு" நூல் (திரு.அ.திருநாவுக்கரசு பதிப்பு) பரிசாக அனுப்பி வைக்கப்படும். உங்கள் பதில்களை அஞ்சல் மூலமோ அல்லது vallalarlive@live.com என்ற மின்அஞ்சல் மூலமாகவோ 20-ம் தேதிக்குள் அனுப்பலாம். Postal Address: T.M.RAMALINGAM, No.73-B, SANKARA NAIDU STREET, THIRUPATHIRIPULIYUR, CUDDALORE --607002.

சத்விசாரம்

தி.ம.இராமலிங்கம்

தொடர்ச்சி - 07

சுத்த சன்மார்க்கம் விளங்கும் காலத்தில் நாம் வாழ்கிறோம் என்று கருதலாமா?

சுத்த சன்மார்க்கம் இந்த உலகத்திலே 1823-ஆம் ஆண்டு அறிமுகமானது. அதனை அறிமுகப்படுத்தியவர், சுத்த உடம்பினராகி என்றும் இறவா நிலையில் உள்ளார். அதன்பிறகு இதுவரை யார் ஒருவரும் சுத்த உடம்பினராக மாறவில்லை. எனவே சுத்த சன்மார்க்க காலம் இதுவரை விளங்காமல்தான் உள்ளது.

சுத்த சன்மார்க்க காலம் விளங்கும்போது சித்திவளாகக் கதவுகள் தானாகத் திறக்கும். வள்ளற்பெருமான் இறைவனோடு அங்கு எழுந்தருள்வார். அவ்வமயம் இவ்வுலகில் இறந்தாரை எல்லாம் மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பி சன்மார்க்க சங்கத்தே கூடி இருக்கும்படி செய்வார்கள். அச்சங்கத்தில் முயற்சியுடையார்க்கு சுத்த தேகமும் வழங்குவார்கள். இந்நிகழ்வுகள் இவ்வுலகில் என்று நடக்கிறதோ அன்றுமுதல் சுத்த சன்மார்க்கம் விளங்கும். அதுவரை நாம் சுத்த சன்மார்க்கம் 'பேசும்' காலத்தில்தான் வாழ்கிறோம் என்பதை புரிந்து கொள்ளவேண்டும். சுத்த சன்மார்க்கம் 'விளங்கும்' காலத்திலும் உயிர்பெற்று வாழ்வோம் என்றும் தெரிந்து கொள்ளவேண்டும். நம்பிக்கையோடு இருங்கள்.

இறந்தவர்களை எல்லாம் உயிர் கொடுத்து எழுப்பிவிட்டால், இந்த பூமி என்னாவது?

இக்கேள்வியை படித்தாலே சிரிப்புதான் வருகிறது. 'போனால் போகட்டும் போடா..." என்கிற கண்ணதாசன் பாடலும் நினைவுக்கு வருகிறது... இல்லையா...? நாம் வாழுகின்ற இன்றைய கால கட்டத்தில் உலக மக்கள்தொகை 730 கோடியாக உள்ளது. இந்த உலகில் நாமெல்லாம் இறந்த பிறகு 2100-ஆம் ஆண்டு உலக மக்கள் தொகை 1120 கோடியாக இருக்கும் என ஐக்கிய நாடுகள் சபை கணக்கிட்டுள்ளது. ஒருவேளை சுத்த சன்மார்க்க காலம் 2100-ஆம் ஆண்டிலிருந்து விளங்கப்போவதாக வைத்துக்கொள்வோம். அப்போது இறந்தவர்களை எல்லாம் இறைவன் எழுப்புகிறான் என வைத்துக்கொள்வோம்.

அப்போது இருக்கிற 1120 கோடி மக்கள் மற்றும் இறந்து உயிர்ப்பெற்று வருபவர்கள் சுமார் 1000 கோடி மக்கள் என்று வைத்துக்கொள்வோம். (இதுவரை இப்பூமியில் இறந்தவர்களின் எண்ணிக்கை லட்சம் கோடியை தாண்டும். அதில் மறுபிறவி கணக்கில் எத்தனை கோடி மக்கள் உள்ளனர் என்பதெல்லாம் நமக்குத் தெரியாது.) அப்போது 2120 கோடி மக்கள் உயிருடன் இப்பூமியில் வாழ்வார்கள். 1000 கோடி இறந்த மக்களும் ஒரே நேரத்தில் உயிர்பெற்று எழுந்தால், இவர்களுக்கெல்லாம் யார் உணவிடுவது? இவர்களுக்கெல்லாம் யார் வீடு கட்டித்தருவது? இவர்களுக்கெல்லாம் அடிப்படை வசதி எப்படி இப்பூமியில் கிடைக்கும்? இவர்கள் எல்லாம் தாம் வாழ, ஒருவரை ஒருவர் அழித்துக்கொண்டால், சட்டம் ஒழுங்கு என்னாவது? இறந்தவர்கள் எல்லாம் தான்தோன்றி தனமாக உயிர்பெற்று எழுந்துவிட்டால், இவர்களுக்குள் குடும்ப உறவுகள் இருக்குமா? இவர்கள் தொடர்ந்து உயிர்வாழ உடனே பணம் தேவைப்படுமே! அதனை இவர்களுக்கு அன்றைய அரசாங்கம் இலவசமாகக் கொடுக்குமா? 'டேய்... நாங்கள் உன் தாத்தா, பாட்டி டா... எங்களுக்கு சோறு போடுடா...' என அன்றைய தலைமுறைகளிடம் இறந்தவர்கள் வந்து கேட்பார்களா? அவ்வாறு கேட்டால் அன்றைய பேரன் உறவுகள் அவர்களுக்கு சாப்பாடும் பாசமும் அளிக்க முன்வருவார்களா? இவர்கள் மீண்டும் இறப்பார்களா? அல்லது எல்லோரும் சுத்த தேகம் எடுப்பார்களா? என்றெல்லாம் நமக்குத் தெரியாது.

இவ்வாறு நாம் கணக்கு போடுவோம் என்று நினைத்துதான், அன்றே நமது வள்ளற்பெருமான், இவ்விஷயத்தை ஆராயக்கூடாது என்று தடையும் விதித்துள்ளார். ஆனால் வள்ளற்பெருமான் கூறியது நடக்கும். அது எவ்வாறு நடக்கும் என்று நமக்குத் தெரியாது. அதனை விளக்கமுற வள்ளற்பெருமான் சொல்லாது, "இந்த விஷயத்தில் தருக்கம் / விவாதம் செய்யக்கூடாது, இது உண்மை, நம்பிக்கையோடு இருங்கள், இதனை தூற்றாமல் வைக்கவேண்டும்"

இந்த விஷயத்தில் தருக்கம் செய்யக்கூடாது. இது உண்மை, நம்பிக்கையோடு இருங்கள்.

என்று மட்டும் சொல்லியிருக்கிறார். எனவே நாம் இதுவரை இவ்விஷயத்தை தூற்றியதே / விவாதித்ததே தவறு.

இறந்தவர்களை புதைக்க வேண்டும் என வள்ளலார் கூறுவது ஏன்?

இறந்தவர்களை தகனஞ் செய்யாமல் சமாதியில் வைக்க வேண்டும் என்பது வள்ளற்பெருமானின் கட்டளை. இதற்கு காரணம், "இறந்தவர்கள் திரும்பவும் எழுந்து நம்முடன் இருக்கப் பார்ப்போம்" என்கிற 'செத்தார் எழுதல்' நிகழ்வு பிற்காலத்தில் நடக்க இருப்பதால் நாம் நம்மை புதைத்துக்கொள்ள வேண்டும். தேகத்தை எரித்துவிட்டாலும் இது நிகழும். 30-03-1871-ஆம் ஆண்டிற்கு முன்பு இறந்தோர்களை எரித்து விட்டிருந்தாலும் பரவாயில்லை. அவர்களையும் இறைவன் எழுப்புவார். ஆனால் அந்த குறிப்பிட்ட தேதிக்கு பின்பு இறந்தார்களை எரித்துவிட்டால், அவர்கள் மீண்டும் எழ வாய்ப்பில்லை என்பது வள்ளலார் வாக்கு.

அதாவது 'சமாதி கட்டளை' என்று ஒரு கட்டளையை வள்ளலார் 30-03-1871-ஆம் ஆண்டு இவ்வுலகிற்கு வெளியிடுகிறார். அதில்தான் இவ்வாறு தெரிவித்துள்ளார். எரிந்த தேகத்திற்கு திரும்ப எழுகின்ற தகுதியினை இறைவன் அளிக்கவில்லை. புதைந்த தேகத்திற்கு மட்டுமே திரும்ப எழுகின்ற தகுதி உண்டு என்று இறைவன் அருளியுள்ளார். மேலும் 'சமாதி வற்புறுத்தல்' என்ற தலைப்பில் வள்ளற்பெருமான் ஒரு பதிகத்தையும் நமக்கு அருளி இக்கருத்தினை வலியுறுத்துகிறார்.

பிறந்தக் குழந்தையை தயவுடன் குளிப்பாட்டி சீராட்டும் நீங்கள், இறந்தோரை குளிப்பாட்டி எரித்துவிடும் நிகழ்வினை எப்படி உங்கள் தயவு எண்ணம் ஏற்கிறது? இரவில் தூங்கி எழுந்திருக்க மறந்தவர்களை எப்படி நீங்கள் தீமூட்டி அழிக்கிறீர்கள்? இந்த லட்சனத்தில், நான் இவ்வுலகின் 'வயிரம்' என்று பிறர் மதிப்பிக்கும்படி செய்துகொள்கிறீர்! நீங்கள் எல்லாம் இந்த பூமியில் பிறந்து வீணே திரிவது ஏனோ?.... தெரியவில்லை. என்று செத்தாரை எரிப்போரைப் பற்றி சாடுகிறார்.

பிறர் அச்சமுறும்படி பேயாட்டம் ஆடி, பேரோசையோடு பறையும் அடித்து, பார்க்க சகிக்காத கோரத்துடன் செத்தப் பிணத்தை கழுவி எடுத்துச் சென்று அதனை எரிக்கின்றீர். எதிர்காலத்தில்

சாகப்போகும் பிணங்களே... கேளுங்கள். அந்தப் பிணத்தை கூட்டமாக அமர்ந்து கழுகுகள் உண்டிருந்தாலும் அதனால் ஒரு பயன் உண்டு. பிணத்தை எரித்ததனால் என்ன பயன்தான் நீங்கள் கண்டீர்கள்? ஒன்றுக்கும் உதவாத சாம்பலைத்தான் அதனால் நீங்கள் கண்டீர்கள்! அச்சாம்பலானது, நிலத்திற்கு இடும் எருவுக்கும் உதவாதே!!. என்று செத்தாரை எரிப்போரைப் பற்றி சாடுகிறார்.

எனது வார்த்தைகளை கேட்டும், உலகீர் நீங்கள் பிணத்தை புதைக்க சம்மதிக்கவில்லை.

இறந்தவரின் உடலை புதைத்தால்தான் அவ்வுயில் அடக்கம் கொள்ளும். அதாவது அமைதி அடையும். மாறாக அவ்வுடலை சுட்டால் அது கொலை எனப்படும். எனவே அந்த உடல் வடிவத்தை புதைக்க வேண்டும் என்றே நான் வாய் தடிக்க சொல்கிறேன். எனது வார்த்தைகளை கேட்டும், உலகீர் நீங்கள் பிணத்தை புதைக்க சம்மதிக்கவில்லை. பணத்தை மட்டும் புதைக்க / மறைக்க சம்மதிக்கின்ற பேய்களே... மதிப்பாய் புதைவோம் என்றே உறங்குவோரும் / இறந்தோரும் உங்கள் வன்செயலாகிய எரிக்கும் குற்றம் கண்டு பயப்படுகிறார்கள். நீங்கள் அறிவிலிகளே. என்றும் செத்தாரை எரிப்போரைப் பற்றி சாடுகிறார். இவ்வாறு திருவருட்பா 5608 முதல் 5613 வரை நம்மை சாடியுள்ளார்.

இதைப்பற்றி நான் விரிவாகவே ஒரு கட்டுரையினை 2013-ஆம் ஆண்டு இயற்றியுள்ளேன். அதனை இந்த இணைய இணைப்பில் படிக்கவும். (http://vallalarr.blogspot.in/2013/04/blog-post.html)

(தொடரும்...)



ச.மு.க. அவர்களின்
"பிரபந்தத்திரட்டு"
மின்னூல் வடிவில்
கீழ் காணும் இணைப்பில்
கிடைக்கும்.

http://www.vallalarspace.com/user/c/V000019744B

சுத்த சன்மார்க்க நீதி

நீறு கூடாது

வள்ளற்பெருமான் ஏற்படுத்திய சுத்த சன்மார்க்கத்தை பின்பற்றுபவர்கள் திருநீறு அணியக்கூடாது. ஏனென்றால், சுத்த சன்மார்க்கிகள் திருநீறு அணிதல் வேண்டும் என்று வள்ளற்பெருமான் சொல்லவில்லை. வள்ளற்பெருமான் சொல்லாத ஒன்றை சுத்த சன்மார்க்கிகள் செய்யக்கூடாது.

நீற்றின் உண்மை:

நாம் இந்த திருநீற்றின் உண்மை என்ன என்பதை முதலில் அறிந்தால், இதனை நாம் தொடவே மாட்டோம். சிவபெருமான் சுடுகாட்டில் தலைமாலைப் பூண்டு தாண்டவம் ஆடுகிறார். அப்போது அங்கு பிணங்களை எரித்ததால் உருவான சாம்பலை எடுத்து தனது மேனி முழுதும் பூசிக்கொண்டு ஆடுகிறார். இந்த பிணங்களின் சாம்பலே சைவ சமயத்தில் திருநீறு என்று வழங்கப்பட்டது. இதனை அடலை பூசிக்கொண்டு சுடலை ஆடுதல் என்பர். இறுதியில் நமது தேகங்கள் ஒருபிடி சாம்பல் ஆகும் என்பதே உண்மை. நாம் இந்த உண்மையை அறிந்து நமது ஆணவத்தை விடுக்கவேண்டும் என்பது சைவ சமயத் தத்துவம். சுடுகாட்டு சாம்பலை பூசுவது நாகரிகமாக இருக்காது என்று கருதி, பிற்பாடு பசுவின் சாணத்தை எரித்து அந்த சாம்பலை சைவர்கள் பூசிக்கொண்டனர். இதுதான் திருநீற்றின் உண்மை. இதனை மறைத்து திருநீறு மற்றும் விபூதி என்ற சொற்களின் பொருள் என்ன என்று தேடி, அச்சொற்களின் பொருள் மகிமையை வெளிப்படுத்துவது தவறு.

இறந்த பிணங்களை எரிக்கக்கூடாது, இடுகாட்டில் புதைக்க வேண்டும் என்பது வள்ளற்பெருமானின் சுத்த சன்மார்க்கக் கட்டளை. எனவே இங்கு சாம்பலுக்கு வேலையில்லை. சுடுகாடு என்பதே இவ்வுலகில் இருக்கக்கூடாது என்பது வள்ளற்பெருமானின் லட்சியம். சாம்பல் மரணத்தின் அறிகுறி. அதனை சுத்த சன்மார்க்கிகள் அணிந்தால், வள்ளற்பெருமான் கூறிய மரணமிலா பெருவாழ்வு என்ற அவரது முக்கிய கொள்கையினையே எதிர்ப்பதாக அமைந்துவிடும். எனவே சுத்த சன்மார்க்கத்திற்கு சுடுகாட்டு சாம்பல் கூடவே கூடாது.

நீற்றின் வல்லமை:

பிணம் சுட்ட சாம்பலுக்கு என்று எந்த வல்லமையும் இல்லை. அச்சாம்பலை புன்செய் நிலத்திற்கு உபயோகப்படும் எருவாகக்கூட பயன்படுத்தமுடியாது என்கிறார் வள்ளலார். (திருவருட்பா-5609). ஆனால் சாணம் சுட்ட சாம்பலுக்கு அறிவியல் பூர்வமாகவே வல்லமை உண்டு. காரணம் பசுவின் சாணம் நோய் கொல்லியாக இருக்கிறது. அந்த வகையில் வள்ளற்பெருமான் உட்பட பல மதத்தை சேர்ந்தவர்களும் இந்த விபூதியினை இன்றும் பயன்படுத்துகின்றனர். சுத்த சன்மார்க்கிகளும் இதனை ஒரு மருந்தாக ஏகதேசமாய் பயன்படுத்தலாம். ஆனால் அதனை ஒரு சடங்காக மேனியில் பூசுவது அறவே கூடாது.

பசுவின் சாணம் தற்போது சக்கையாகவே உள்ளது. அதில் உயிர்ப்பு சக்திகள் இல்லை.

வள்ளற்பெருமானின் அணுக்கத் தொண்டர் காரணப்பட்டு ச.மு.கந்தசாமிபிள்ளை அவர்கள், "அருட்பிரகாச வள்ளலார் விபூதிப்பிரசாத மகிமை" என்ற தலைப்பில் 44 பாடல்கள் அருளியுள்ளார்கள். (பிரபந்தத்திரட்டு - 3402-ல் இருந்து 3445 வரை) வள்ளற்பெருமான் வழங்கிய விபூதியால் ச.மு.க. உட்பட பலர் தங்களது நோய்களை தீர்த்துக்கொண்டது வரலாறு.

> பன்மார்க்க சமயம்யாவும் பாறுமிந்தப் பாரினில்
> நன்மார்க்க மதியின்வாத நாளுமெங்கு நடைபெறும்
> துன்மார்க்கந் தொலையுமென்ற தூய்மையோன் விபூதியாற்
> சன்மார்க்க சங்கமெங்குந் தழையுந்தழையுந் தழையுமே. - 3444

என்று, தனது பிரபந்தத்திரட்டில் வள்ளலாரின் விபூதியால் சன்மார்க்க சங்கங்கள் தழைக்குமென காரணப்பட்டு ச.மு.க. அவர்கள் பாடியருளியுள்ளார்கள். வள்ளற்பெருமான் உபயோகித்த விபூதி போன்று தற்போது சுத்தமான விபூதிகள் கிடைப்பதில்லை. அதில் கலப்படம் உள்ளது. பசுவின் சாணம் தற்போது சக்கையாகவே உள்ளது. அதில் உயிர்ப்பு சக்திகள் இல்லை. பசுவின் ஆகாரம் செயற்கை ஆகாரமாக மாறிவிட்டதுதான் இதற்கு காரணம். நாட்டுப் பசுக்களும் மிக அதிகளவில் குறைந்துவிட்டன. ஆகையால் கலப்பின பசுக்களிலிருந்து தயாரிக்கப்படும் விபூதியில் தற்போது

எந்தவகையான அறிவியல் மகத்துவமும் இன்றி காணப்படுகிறது.

மேலும் விபூதி கொடுப்பவர் ஆன்மிக சக்தி உடையவராக இருந்தால்தான், அவர் கொடுக்கும் விபூதிக்கு சக்தி உண்டாகிறது. சாதாரணமானவர்கள் கொடுக்கும் விபூதிக்கு சக்திகள் கிடையாது. எனவேதான் ச.மு.க. அவர்கள் "விபூதிபிரசாத மகிமை" என்று பொதுவாகப் பாடாமல் "அருட்பிரகாச வள்ளலார் விபூதிப்பிரசாத மகிமை" என்று அந்த விபூதியை ஒரு ஆன்மிக சக்தி படைத்த ஒருவருடன் இணைத்துப் பாடுகிறார். ஆகவே விபூதிக்கென்று தனிப்பட்ட சக்திகள் கிடையாது என்பது தெளிவாகிறது. ஆன்மிக சக்தி படைத்தவர்கள் கைப்பிடி மண்ணை அள்ளிக் கொடுத்தாலும் அந்த மண் அவரின் குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றும்.

தங்களது மலங்களை எரித்து அதன்மூலம் சக்திகளை பெற்றுக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு புற விபூதி தேவையில்லை.

சுத்த சன்மார்க்கிகள் தங்களுடைய மலங்களை எரிந்து அதன்மூலம் சக்திகளை பெற்றுக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு புற விபூதி தேவையில்லை. எனவே சுத்த சன்மார்க்கத்திற்கு சுடுகாட்டு சாம்பல் கூடவே கூடாது.

இடுநீறே:

நாம் இறைவனை வணங்கிவிட்டோம் என்று மனதிருப்தி கொள்ளும் ஒரு மூடப்பழக்கம்தான் விபூதி அணிதல். மற்றும் சிலர் நான் நேர்மையானவன், கடவுள் பக்தி உள்ளவன் என்பதை மற்றவர்களுக்கு தெரிவிக்கவே விபூதி அணிகின்றனர். ஆனால் இவர்களின் செய்கைகள் அதற்கு மாறாக இருக்கும். மக்களை ஏமாற்றுவதற்காக சிலர் விபூதி அணிகின்றனர். மற்றும் சிலர் விபூதி அணிந்துக்கொண்டு உயிர்பலி கொடுத்து இறைவனை வணங்குவார்கள். இன்னும் சிலர் விபூதி அணிந்துக்கொண்டு உண்மையிலேயே நல்லவர்களாகவும் இருப்பார்கள். இன்னும் சிலர், முடிவில் நான் சாம்பலாகப் போகிறேன். அதனை நினைவில் நிறுத்தவே விபூதி இடுகிறேன் என்பர். சிலர் நான் சைவ சமயத்தினன், ஆகவே விபூதி பூசுகிறேன் என்பர்.

இவ்வாறு நல்லது முதல் தீயகாரியங்கள் வரை இந்த விபூதி மக்களால் பல்வேறு வகையில் பயன்படுத்தப்படுகிறது. "சிவாயநம என்று இடுநீறே" என்று 11 பாடல்களை வள்ளற்பெருமானும் பாடியிருக்கிறார். சிவபெருமானே... நான் உன்னை வணங்குகிறேன்... என்று சொல்லிக்கொண்டு நாம் விபூதி பூசிக்கொள்ள வேண்டும் என்று வள்ளற்பெருமான் பாடியிருக்கிறார். சிவபெருமானை வணங்குபவர்கள் வள்ளற்பெருமான் காலத்திற்கு முன்பிருந்தே அச்செயலை அவர் குறிப்பிட்டபடி செய்துதான் வருகின்றனர். வள்ளற்பெருமான் சொல்லித்தான் சைவர்கள் விபூதி அணிகின்றனர் என்று சொல்வதற்கில்லை. அது சைவ சமயம் சார்ந்த வழக்கு.

நாம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை வணங்கும் சுத்த சன்மார்க்கிகள். நமக்கு ஏன் அந்த விபூதி என்னும் சுடுகாட்டு சாம்பல்?

சமய சின்னங்கள்:

சைவ சமயத்தில் விபூதி அணிதல் ஒரு சின்னமாகக் கருதப்படுகிறது. அதேபோல் வைணவ சமயத்தில் திருமண் (நாமம்) அணிதல் ஒரு சின்னமாகக் கருதப்படுகிறது. சைவ சமயக்கோயில் யானைகள், மாடுகள் விபூதி அணிந்திருக்கும். வைணவ சமயக்கோயில் யானைகள், மாடுகள் நாமம் அணிந்திருக்கும். விபூதியைக்கண்டால் நாமத்திற்கு பிடிக்காது. நாமத்தைக் கண்டால் விபூதிக்கு பிடிக்காது. விபூதி அணிபவர்கள் நாமத்தை அணியமாட்டார்கள். நாமம் அணிபவர்கள் விபூதி அணியமாட்டார்கள். (விதிவிலக்காக இரண்டையும் அணிபவர்கள் சிலர் உண்டு). விபூதி பூசிய எனது கடவுளே பெரிய கடவுள் என்றும் நாமம் அணிந்த எனது கடவுளே பெரிய கடவுள் என்று கடவுளுக்குள்ளேயே போட்டி. சிதம்பரம் கோவிந்தராஜ பெருமாள் பட்ட பாட்டையும் அதனால் வைணவர்கள் பலர் உயிரிழந்தையும் நாம் அறிவோம் இல்லையா.

வள்ளற்பெருமானும் விபூதி பூசாத மக்களை கடுமையாக விமர்சித்து பத்து பாடல்களை இயற்றியுள்ளார். (திருவருட்பா-997-ல் இருந்து 1006 வரை) இவையெல்லாம் அச்சமய நெறிக்குள் இருப்பவர்கள் படிக்கும் போது, அவர்கள் மனம் குதூகுலம் அடையும். இதனையே மற்ற சமயத்தார்கள் படிக்கும்போது அவர்களது மனம் வெறுப்படையும். இவ்வாறு சமயம் சார்ந்த சின்னங்களால் மக்களுள்

பிரிவினையையும் எதிர்ப்பையும் ஒருவருக்கொருவர் ஈட்டிக்கொள்ளவே இச்சின்னங்கள் இன்றும் பயன்படுகின்றன. வள்ளற்பெருமான் பாடிய பாடல்களே இந்த வெறுப்பிற்கும் பிரிவினைக்கும் சாட்சியாக இருப்பதை பார்க்கலாம்.

ஆகவே சுத்த சன்மார்க்கத்திற்கு எவ்வகையிலும் திருநீறு உபயோகப்படாது. இந்த மார்க்கம் யாவருக்கும் எல்லா உயிர்க்கும் பொதுவான மார்க்கம். இதற்கு முக்கியத்தடைகளாக இருப்பது சமயங்களும் மதங்களுமே ஆகும். எனவே சுத்த சன்மார்க்கத்திற்கு சுடுகாட்டு சாம்பலைக் குறிக்கும் பசுமாட்டு சாண சாம்பல் கூடவே கூடாது.

திருநிலை யறிந்தே திருநீறு அளித்தும்விடுத்த
இரு நிலை இனியன் இராமலிங்கம்

நடுநெற்றியில் நீரிருக்க நல்லநீறெ தற்கென
விடுத்த எனையும் விடாத இராமலிங்கம்

- (இராமலிங்க அகவல்-800, 984)

விடுநீறே:

வள்ளற்பெருமானின் உருவத்தை மண்ணினால் செய்துவந்து அவரிடம் கொடுத்தபோது, "பொன்னான மேனி மண்ணானதே" என்று வருந்தி துயருற்று கோபப்பட்டு அந்த மண்சிலையினை கீழே போட்டு உடைத்தவர் வள்ளற்பெருமான். தனது மேனி புகைப்படத்தில்கூட விழக்கூடாது என்று தன் பொன்மேனியினை மறைத்துக்கொண்டவர் வள்ளற்பெருமான். அப்படிப்பட்ட திருத்தேகத்தில் சுடுகாட்டு சாம்பலை சுமந்திருப்பாரா? என்று சிந்தித்து பார்க்க வேண்டும்.

வள்ளற்பெருமானின் திருவருட்பாவினை நோக்கும்போது, மரணமிலா பெருவாழ்விற்கும் திருநீறுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்பது மிகத்தெளிவாகத் தெரிகிறது. திருநீறினை பூசிக்கொள்பவர்கள் பூசிக்கொள்ளுங்கள். ஆனால் சுத்த சன்மார்க்கம் பேசிக்கொண்டு அதனை செய்யாதீர்கள். அதைவிட அறியாமை ஏதுமில்லை. சுத்த சன்மார்க்கிகள் நீறினை விடவே வேண்டும்.

"ஆசாரங்களை விட்டு ஒழித்தவர்கள் மட்டுமே சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தில் சேரமுடியும். இது எமது கட்டுப்பாட்டு

விதியாகும்". (பக்கம்-411) என்ற வள்ளற்பெருமானின் கட்டுப்பாட்டை மதித்து, விபூதி பூசும் ஆசாரத்தை விட்டவர்களே சன்மார்க்க சங்கத்தில் இணைய வேண்டும்.

என்னை மதிக்கும் உங்களிடம், நான் பால் அருந்தாதீர்கள் என்று கட்டளை இடுகிறேன். நீங்களும் என்சொல் கேட்டு பாலை அருந்தவில்லை. ஆனால் மோர் அருந்துகிறீர்கள். நான் உங்களிடம் ஏன் இப்படி செய்கிறீர்கள்? என்று கேட்க, நீங்கள் பாலைத்தானே அருந்தவேண்டாம் என்று சொன்னீர்கள். மோர் அருந்தவேண்டாம் என்று சொல்லவில்லையே! என்று புத்திசாலித்தனமாக பதிலுரைத்து என்னிடமிருந்து தப்பிக்க முயலுகின்றீர். இது எவ்வளவு பெரிய அறிவீனம்.

பால் கூடாது, என்றால் அதிலிருந்து வருகின்ற மோர், தயிர், வெண்ணை, நெய் போன்ற அனைத்தும் அல்லவா தடைசெய்யப்பட்டுள்ளது என்று பொருள். அதுபோலவே சாதிகள், சமயங்கள், மதங்கள் பொய் என்றால் அதில் வழங்கப்படும் திருநீறு உட்பட யாவும் பொய்யே என்பதை அறிவதுதானே சுத்த சன்மார்க்கம். ஆகவே அன்பர்களே திருநீற்றுடன் இருக்கும் வள்ளற்பெருமானின் படத்தை இனி அச்சடிக்காதீர்கள். நல்லோர் (வள்ளலார்) மனதை நடுங்கச் செய்யும் செயலுக்கு அது ஒப்பாகும்.

விபூதி அணிவதை பல தத்துவங்களைக்கொண்டு விளக்க முற்படுவதும் தவறு. ஏனெனில் தத்துவங்களை எல்லாம் தனித்தனிக் கடந்து... தத்துவாதீத மேல் நிலையில் விளங்குவதுதான் சுத்த சன்மார்க்கம். பக்தி மார்க்கத்திற்கு விபூதி தேவை. சித்த மார்க்கத்திற்கு விபூதி தேவையில்லை. ஞான மார்க்கத்திற்கு விபூதி கூடவே கூடாது. எனவே சுத்த சன்மார்க்க கடவுளான அருட்பெருஞ்ஜோதியை வணங்கும் யாவரும் விடுநீறே.

விடு நீறே

(தி.ம.இராமலிங்கம்)

கலி விருத்தம்

அருட் பெருஞ்ஜோதி அருள் செய்கையில்
குருவருள் எல்லாம் கூடி வருகையில்
மருள்நெறி எல்லாம் மருண் டோடுகையில்
திருநெறி மார்க்கத்தில் தீதாம் விடுநீறே. 1

சுத்த சன்மார்க்கம் சுகந் தருகையில்
நித்தம் நினைக்கும் நெஞ்சம் வருகையில்
சித்த மார்க்கமெலாம் சுருண்டோ டுகையில்
பித்த னெனப்படும் பதரை விடுநீறே. 2

ஞான சபையுள் ஞானம் வருகையில்
வானத்தின் மீதுமயில் வந்தா டுகையில்
கான மதமெல்லாம் குதித்தோ டுகையில்
ஈன சாம்பலை இகழ்ந்து விடுநீறே. 3

வடலூர் பூசம் வந்து பார்க்கையில்
மட மாதர் மயக்கம் தீர்கையில்
இடர் உலக இச்சை விடுகையில்
சுடலை மறக்க சினந்து விடுநீறே. 4

எமபயம் கடந்து எல்லாந் தானாகையில்
நமசிவாய மந்திர நிலை கடக்கையில்
சமயமத வழக்கெலாம் சட மாகையில்
கமலம் மலர்ந்து கூடவே விடுநீறே. 5

ஜீவ காருண்யம் ஜீவனில் இருக்கையில்
ஈவதெனும் மூன்றும் அவனுக்கு அளிக்கையில்
பாவமெனும் மரணம் படுகுழி வீழ்கையில்
சாவதெனும் பழி சாராது விடுநீறே. 6

சாகாக் கல்வியைசுத்த சன்மார்க்கம் அளிக்கையில்
வேகாக்காலை சன்மார்க்க விவேகம் தருகையில்
போகாப்புனலை சன்மார்க்க போகம் விழைகையில்
ஏகாதிபதி அப்பனை இசைந்து விடுநீறே. 7

எல்லா உயிரும் இன்புற்று இருக்கையில்
நல்லான் நடுவில் நெற்றிக்கண் திறக்கையில்
வல்லான் பூட்டை வள்ளல் திறக்கையில்
பொல்லான் பூசும் பூதியாம் விடுநீறே. 8

மாட விளக்கு மாண்புற எரிகையில்
நாட அதனையே நடனம் காணுகையில்
வேடம் போடும் வித்தை மறைகையில்
கூட வருவாரவர் கூடவே விடுநீறே. 9

பொது மார்க்கம் பாரினில் பரவுகையில்
இதுஅது எனஉரைப்பது அரிதா கையில்
மது மயக்கமாம் மதம் ஒழிகையில்
சது மறைகளும் சாய்ந்திட விடுநீறே. 10



மே மாதத்தில்... அன்று...

31-05-1858 - "பழமை பாராட்டலும், கண்ணோட்டம் செய்தலும், சுற்றந் தழுவலும் அவசியம் சமுசாரிக்கு வேண்டும்" என இரத்தின முதலியார் அவர்களுக்கு கடிதம் மூலம் வள்ளற்பெருமான் தெரிவித்தார்.

27-05-1860 - "பரமசிவத்தினிடத்தே மாறாது மனத்தை வைத்துக்கொண்டு புறத்தே ஆயிரம் பெண்களை விவாகஞ் செய்துக் கொள்ளலாம்" என இரத்தின முதலியார் அவர்களுக்கு வள்ளற்பெருமான் கடிதம் எழுதினார்.

07-05-1861 - வரதாசாரிய சுவாமிகளைக் கண்டால், "பாலும் நீரும் போலும் பார்ப்பன சினேகம்" என்று தான் தெரிவித்ததாக தெரிவிக்க வேண்டுமென வள்ளற்பெருமான் இரத்தின முதலியாருக்கு கடிதம் எழுதியனுப்பினார்.

23-05-1862 - "நான் கனவினும் தங்களை மறக்கின்றவனல்ல. மறந்தவனுமல்ல. ஆனால் கால வேற்றுமையாலே நான் மறந்தவனாகத் தங்களுத் தோன்றுகின்றது, அவ்வாறு எண்ண வேண்டாம். இது சத்தியம்." என்று வேலுமுதலியார் அவர்களுக்கு வள்ளற்பெருமான் கடிதம் வரைந்தார்.

19-05-1864 - குழந்தை பேறு அடைந்ததை வாழ்த்தி இரத்தின முதலியார் அவர்களுக்கு வள்ளற்பெருமான் கடிதம் வரைந்து அனுப்பினார்.

23-05-1867 - வள்ளற்பெருமான் அவர்களால் சத்திய தருமச்சாலை தொடக்க விழா கண்டது. சாலை விளம்பரமும், ஜீவகாருண்ய ஒழுக்க விளம்பரமும் ஒருங்கே வெளிவந்தது.

03-06-1868 - "பொன்னுரைக்கின்ற உரைகல் ஒன்று, வெள்ளியுரைக்கின்ற உரைகல் ஒன்று, இவைகளையும் இவைகளைக்கு அடுத்த தராசு முதலிய கருவிகள் வைக்கின்ற பை ஒன்று, இம்மூன்றும் வாங்கி பங்கியில் அனுப்ப வேண்டும். சுமார் 5 பலம் 8 பலம் நிறுக்கத்தக்க தராசு நேரிட்டாலும் அதனுடன் அனுப்ப வேண்டும்." என்று இரத்தின முதலியார் அவர்களுக்கு வள்ளற்பெருமான் கடிதம் எழுதினார். (தங்கம், வெள்ளி போன்றவைகளைத் தாமே உருவாக்கி அதன் தரத்தையும் எடையையும் அளந்து பார்க்க இவைகளை வேண்டி கடிதம் எழுதுகிறார்.)

26-05-1868 - உரைகல், தராசு போன்றவைகள் வந்து சேர்ந்துவிட்டதாக நன்றி தெரிவித்து இரத்தின முதலியார் அவர்களுக்கு வள்ளற்பெருமான் கடிதம் வரைந்தார்.

12-05-1872 - தமது உடல் பொருள் ஆவியை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடத்தில் முற்றிலும் ஒப்படைத்து, கல்பட்டு இராமலிங்கம் அவர்கள் வந்தன விண்ணப்பம் செய்து கொண்டார்கள்.

அருள்ஜோதி தொலைக்காட்சி, அருள்ஜோதி அன்ன ஆலயம் மற்றும் அருள்ஜோதி பாடசாலை ஆகியவற்றின் நிறுவனர் தயவுத்திரு. **சதீஷ் ராஜ்** அடிகளார் அவர்கள் 10-04-2016 அன்று காலை 7.35 மணியளவில் ஆன்ம விடை பெற்றார்.



அவர் மீண்டும் இப்புவியில் சுத்த ஆன்மாவாக வருவிக்கவுற்று இறை வனுடன் இரண்டற கலக்க சுத்த சன்மார்க்கம் உறுதுணையாக இருக்க "சன்மார்க்க விவேக விருத்தி" திருவருட்பிரகாச வள்ளலாரை வேண்டி நிற்கிறது.

கிறுஸ்து

நீதி மொழிகள்: 1:23-33

24. நான் கூப்பிட்டும், நீங்கள் கேட்கமாட்டோம் என்கிறீர்கள்; நான் என் கையை நீட்டியும் கவனிக்கிறவன் ஒருவனும் இல்லை.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு இறைதூதரால் கூறப்பட்ட வாசகம் இதுவாகக் கருதப்படுகிறது. அப்போதய மக்களின் நிலை எப்படி இருந்தது என்பதனை இவ்வாசகம் நமக்குத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது. மக்கள் எப்போதும் நம் முன்னோர்கள் எவ்வழி சென்றார்களோ அதனை அப்படியே ஏற்று ஆட்டு மந்தை என செல்லும் குணமுடையவர்கள். அவ்வழி சரியா, தவறா என்றெல்லாம் ஆராய்வது கிடையாது. தவறு என்றால் வேறு வழியினை மாற்றவும் முயலமாட்டார்கள்.

நீங்கள் செல்லும் மார்க்கம் தவறானது. அதனை விட்டு நான் சொல்லும் மார்க்கத்தை கடைபிடியுங்கள் என்று ஒரு தீர்க்கதரிசி திடீரென அச்சமுதாயத்தில் தோன்றி கூறினால் அது அங்கு எடுபடாது. யாரும் புதிய கருத்தினை கேட்க மாட்டார்கள். மாறாக அவரை ஒழித்துக்கட்டுவதில் ஆர்வமுடையவர்களாக இருப்பார்கள். இயேசு பெருமான் அன்றைய சமுதாயத்தை திருத்தும்போது அவர் அடைந்த இன்னல்கள் ஏராளம். மக்கள் அவரை ஏற்க முன்வரவில்லை.

எனினும் அவரது காலத்திற்கு பின்பு மெல்ல மெல்ல அவரது கருத்துக்கள் உலகம் முழுதும் ஏற்கப்பட்டது. தற்போது உலகில் மிகப்பெரும்பான்மையினரின் மார்க்கமாக கிறிஸ்து இருக்கிறது.

இப்படித்தான், கடந்த இரு நூற்றாண்டிற்கு முன் தோன்றிய வள்ளற்பெருமான், இச்சமுதாயம் செல்லும் பாதை சரியல்ல, என்று ஒரு புதிய மார்க்கத்தை படைத்து அதில் பயணப்படுங்கள் உலகீர், என்று கூவி அழைத்தார். யார் ஒருவரும் அவரை எட்டிப்பார்க்கவில்லை. இரண்டாயிரம் ஆண்டிற்கு முன்னால் சிறிய சிறிய ஆட்டுமந்தைகள் இருந்தன. ஆனால் வள்ளற்பெருமான் காலத்தில் பெரிய பெரிய ஆட்டு மந்தைகள் இருந்தன. அவைகளை

ஒரு புதிய பாதைக்கு அழைத்துவர படாதபாடு பட்டார். நீங்கள் செல்லும் பாதைகள் எல்லாம் பொய்யே. அவைகளில் செல்லாதீர். என்று கூவினார். யாரும் கேட்கவில்லை. இறுதியில் "கடை விரித்தேன் கொள்வார் இல்லை, கட்டிவிட்டேன்" என்றும், "உண்மை சொல்ல வந்தனனே என்று உண்மை சொல்லப் புகுந்தாலும் தெரிந்துகொள்வாரில்லை" என்றும் வேதனையில் உரைக்க நேர்ந்தது.

இருநூறு ஆண்டுகள் கடந்துவிட்டன. தற்போது வள்ளலார் சம்பந்தப்பட்ட இடங்களில் ஓரளவு மக்கள் கூட்டம் சேர்கிறது. ஆனால் அவரின் மார்க்கத்தை பூரணமாக கடைபிடிப்பார் ஒருவரும் இல்லை. இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்து பார்ப்போம். அப்போதாவது உலக மக்கள் எல்லாம் மதங்களை விட்டு சுத்த சன்மார்க்கத்தை கடைபிடிப்பார்களா? என்று பார்ப்போம்.

25. என் ஆலோசனையை எல்லாம் நீங்கள் தள்ளி, என் கடிந்துகொள்ளுதலை வெறுத்தீர்கள்.

இயேசு பெருமானின் ஆலோசனைகளையும் அவரது கட்டளைகளையும் அன்றைய மக்கள் வெறுத்தார்கள். இரண்டாயிரம் வருடங்கள் கடந்து, அதே நிலமை வள்ளற்பெருமானுக்கும் ஏற்பட்டது. இவர் ஆலோசனை வழங்கிய ஜீவகாருண்ய ஒழுக்கம், கரண, ஜீவ, ஆன்ம ஒழுகங்கள், கடவுள் ஒருவரே என்கிற உண்மையை வெளிப்படுத்துதல், சாதிகளையும் மதங்களையும் சமயங்களையும் பொய் என்று சொன்ன அனைத்து ஆலோசனைகளையும் இன்றைய மக்கள் தள்ளிவிடுகின்றனர். பொய்யினை உண்மை எனவே நம்புகின்றனர். நாங்கள் ஏற்கனவே இரண்டாயிரம் ஆண்டுகளாக கிறுஸ்துவையும், இஸ்லாத்தையும், இந்துவையும், சமணத்தையும், புத்தத்தையும், சீக்கியத்தையும் பின்பற்றி வரும்போது நீ எங்களது இத்தனை கூட்டையும் உடைத்து, எங்களை எல்லாம் "சுத்த சன்மார்க்கம்" என்கிற ஒரே கூட்டில் வந்து தங்கும்படி சொல்வதை எப்படி எங்களால் ஏற்கமுடியும்? நாங்கள் எல்லாம் வெவ்வேறு கலாச்சாரம், மொழிகள், நாடுகள், தலைவர்கள், சட்டங்கள், வேதங்கள், தெய்வங்கள் என்று இருக்கிறோமே! எப்படி ஒன்றிணைவது? என்கிறார்கள் மக்கள். தயவு ஏற்பட மேலே சொன்ன அனைத்து பிரிவுகளும் தடையாக இருப்பதாகவும் அவைகளை ஒழித்து யார்க்கும் பொதுவான "ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை" என்கிற புள்ளியில் தெரிகின்ற "அருட்பெருஞ்ஜோதி" ஆண்டவரை ஏற்று, அதன்படி மக்களை எல்லாம் ஒன்றிணைக்க வள்ளற்பெருமான் முயலுகிறார். மேலும் அவர், நம்மிடம் கொலை, புலை தவிர்க்க வேண்டும் என்றும் கடிந்துக்கொள்கிறார். நாம் அவர் கட்டளையை வெறுக்கிறோம். காலம் மாறும், மக்களும் மாற்றம் பெறுவார்கள் என நம்புவோம்.

இஸ்லாம்

சைவ உணவு சாத்தியமா?

தொடர்ச்சி 5

மேலும் அருள்மறை குர்ஆன் 16வது அத்தியாயம் ஸுத்துன் நஹ்லின் 14வது வசனம் நீங்கள் கடலிலிருந்து நய(மும், சுவையுமுள்ள மீன் போன்ற மாமிசத்தை புசிப்பதற்காகவும், நீங்கள் அணிந்து கொள்ளக்கூடிய ஆபரணத்தை அதிலிருந்து நீங்கள் வெளிப்படுத்தவும் அவன் தான் அதனையும் (கடலையும்) வசப்படுத்தித் தந்தான்; இன்னும் அதில் தண்ணீரைப் பிளந்து கொண்டு செல்லும் கப்பலை நீங்கள் காணுகிறீர்கள்; (பல்வேறு இடங்களுக்குச் சென்று) அவன் அருட்கொடையை நீங்கள் தேடவும், நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டும் (அதை) இவ்வாறு வசப்படுத்திக் கொடுத்தான்

மேற்கண்ட வசனத்தை நானே எடுத்துக்காட்டவேண்டியுள்ளது. இவ்வசனத்தில் 'மீன் போன்ற' மாமிசம் என்பது மீன் அல்ல, அது வேறு ஏதோ ஒன்றையே குறிப்பதாக உள்ளது (அருள்மறை - மறைக்கப்பட்டுள்ளது), ஏனெனில் எந்தஒரு ஆபரணமும் மீனிலிருந்து வெளிப்படாது.

இங்கு அருள் மறை வெளிப்படும் விதமாக அருள்மறை குர்ஆனின் ஐந்தாவது அத்தியாயமான ஸுரத்துல் மாயிதாவின் 48வது வசனம், 'மேலும் (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கியுள்ளோம், இது தனக்கு முன்னிருந்த (ஒவ்வொரு) வேதத்தையும் மெய்ப்படுத்தக் கூடியதாகவும் அதைப் பாதுகாப்பதாகவும் இருக்கின்றது. எனவே அல்லாஹ் அருள் செய்த(சட்ட திட்டத்)தைக் கொண்டு அவர்களிடையே நீர் தீர்ப்புச் செய்வீராக; உமக்கு வந்த உண்மையை விட்டும் (விலகி,) அவர்களுடைய மன இச்சைகளை நீர் பின்பற்ற வேண்டாம். உங்களில் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் ஒவ்வொரு மார்க்கத்தையும், வழிமுறையையும் நாம் ஏற்படுத்தியுள்ளோம்; அல்லாஹ் நாடினால் உங்கள் அனைவரையும் ஒரே சமுதாயத்தவராக ஆக்கியிருக்கலாம்; ஆனால், அவன் உங்களுக்குக் கொடுத்திருப்பதைக் கொண்டு உங்களைச் சோதிப்பதற்காகவே

(இவ்வாறு செய்திருக்கிறான்); எனவே நன்மையானவற்றின்பால் முந்திக் கொள்ளுங்கள். நீங்கள் யாவரும், அல்லாஹ்வின் பக்கமே மீள வேண்டியிருக்கிறது; நீங்கள் எதில் மாறுபட்டு கொண்டிருந்தீர்களோ அதன் உண்மையினை அவன் உங்களுக்குத் தெளிவாக்கி வைப்பான்.'

இவ்வசனதில் 'உங்களில் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் ஒவ்வொரு மார்க்கத்தையும், வழிமுறையையும் நாம் ஏற்படுத்தியுள்ளோம்; அல்லாஹ் நாடினால் உங்கள் அனைவரையும் ஒரே சமுதாயத்தவராக ஆக்கியிருக்கலாம்; ஆனால், அவன் உங்களுக்குக் கொடுத்திருப்பதைக் கொண்டு உங்களைச் சோதிப்பதற்காகவே (இவ்வாறு செய்திருக்கிறான்); எனவே நன்மையானவற்றின்பால் முந்திக் கொள்ளுங்கள். நீங்கள் யாவரும், அல்லாஹ்வின் பக்கமே மீள வேண்டியிருக்கிறது; நீங்கள் எதில் மாறுபட்டு கொண்டிருந்தீர்களோ அதன் உண்மையினை அவன் உங்களுக்குத் தெளிவாக்கி வைப்பான்.' என்ற வரிகளை கவனித்தால் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒவ்வொரு வழிமுறைகளை நம்மை சோதிப்பதற்காக உண்டுபண்ணியது புலனாகிறது. இவ்வழிமுறைகளில் நன்மையானவற்றில் முந்திக்கொள்ள சொல்வதை கவனிக்கவேண்டியுள்ளது. எனவே நாம் நமது சமுதாயத்திற்கு எது மனசாட்சிப் படி நன்மை பயக்குமோ அதனில் நாம் முந்திக்கொள்ளவேண்டும்.

மேலும் நீங்கள் எதில் மாறுபாடு கொண்டிருந்தீர்களோ அதன் உண்மையினை அவன் உங்களுக்குத் தெளிவாக்கி வைப்பான், என்று கூறுவதின் மூலம் உண்மையினை தெரிவிக்க முகமது நபிக்கு பின் இவ்வுலகத்தில் நிறைய நபிமார்கள் பிறந்திருப்பார்கள், நாம் தான் அறியவில்லை. ஏனெனில் 'இவ்வாறு அனுப்பப்பட்ட தூதர்களில் இறுதியானவர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அவர்களுக்குப் பின் உலகம் அழியும் காலம் வரை இறைத் தூதர்கள் அனுப்பப்பட மாட்டார்கள். (பார்க்க அல்குர்ஆன்4:79 4:170, 7:158 , 9:33 , 10:57 , 10:108 ,14:52 , 21:107 , 22:49 , 25:1 , 33:40 , 34:28 , 62:3) என்று நாம் நமக்குள்ளேயே குரான் கூறிவிட்டதாகக் கூறி இறையருளை தடைபடுத்திக்கொண்டோம்.

(தொடரும்...)

புத்த பூர்ணிமா

21-05-2016 - இன்று ஆசிய ஜோதி சித்தார்த்தன் கவுதமப் புத்தர் பிறந்த நாள் (கி.மு.480) புத்த பூர்ணிமா என்றும், விசாகம் என்றும் உலகம் முழுவதும் உள்ள பவுத்தர்கள் கொண் டாடுகிறார்கள். நிர்வாணா என்று கூறப்படும் அவர்தம் மறைவு நாளையும் அனுசரிக்கிறார்கள்.

1950 மே மாதத்தில் கொழும்பில் கூடிய உலகப் புத்த அறிஞர்கள் மாநாட்டில் புத்தர் பூர்ணிமா நாள் உறுதி செய்யப்பட்டது.

1. நீ கேட்டது என்பதற்காகவே எதையும் நம்பிவிடாதே!

2. தலைமுறை தலைமுறையாக நடந்துவருகிற பழக்கம் என்பதற்காக எதையும் ஒத்துக்கொள்ளாதே!

3. பலர் பேசுகிறார்கள்; பலர் ஏற்றுக் கொண்டிருக்கி றார்கள் என்பதற்காக மட்டும் எதையும் நம்பிவிடாதே!

4. உன்னுடைய மத நூல்களில் கூறியிருக்கிறது என்பதற்காக மட்டும் எதையும் நம்பி விடாதே!

5. உனக்கு மூத்தவர்களும், உன் ஆசிரியர்களும் சொல்கிறார்கள் என்பதற்காக மட்டும் ஒன்றை நம்பிவிடாதே!

6. ஒரு சங்கதியை உற்றுக் கவனித்து, ஆராய்ந்து பார்த்து, உன் பகுத்தறிவுக்கு ஏற்றது என்றும், பிரத்தியட்ச அனுபவத்திற்குத் தெளிவாக உள்ளது என்றும் உனக்குத் தோன்றுமானால், அதனை ஏற்றுக்கொண்டு அதன்படி நட.

இவைதாம் உலக மானுடத்திற்குக் கவுதம புத்தர் பிரகடனப்படுத்திய அறிவு நெறிகள்.

இவற்றில் தெளிவாக ஊடுருவி நிற்பது பகுத்தறிவுச் சிந்தனை என்பது வெளிப்படை.. மதம் என்றால் நம்பு! நம்பினால் மோட்சம் - நம்பாவிட்டால் நரகம் என்றுதானே கூறுகிறது! தலைவிதி, கர்மப் பலன் என்று கூறும் எந்த மதத்தின் ஆணிவேரையும் வீழ்த்தக்கூடிய அறிவாயுதமே இவை என்பது தெரியவில்லையா?

புத்தர் கோசல நாட்டில் பயணம் மேற்கொண்டபோது ஒரு பார்ப்பனர் ஆத்மா பற்றி உங்கள் கருத்தென்ன? என்று கேட்டார். அதற்குப் புத்தர் சொன்ன பதில்: ஆத்மா எதையும் அறியக்கூடியது என்று வாதத்திற்காகவே வைத்துக்கொள்வோம்;

கண்களைத் தோண்டிவிட்டால் அந்த ஆத்மாவால் பார்க்க முடியுமா? காதுகளைச் செவிடு ஆக்கிவிட்டால் ஆத்மாவால் கேட்க முடியுமா? மூக்கை எடுத்துவிட்டால் நாற்றத்தை ஆத்மாவால் உணர முடியுமா? நாக்கை அறுத்து விட்டால் ருசி அறியுமா அந்த ஆத்மா? என்று கேள்விக்குக் கேள்விகள் மூலம் விடையிறுத்தார் கவுதம புத்தர்.



புத்தர் என்றால் யார் என்ற வினாவுக்குப் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பளிச்சென்று பதில் பகன்றார். புத்தியைப் பயன்படுத்துபவன் ஒவ்வொருவனும் புத்தனே! என்றார்.

ஆரியர்களின் வருணாசிரமத்தையும், யாகப் பண் பாட்டையும் கடுமையாக எதிர்த்தவர் புத்தர். கவுதம புத்தர் சகாப்தத்தில் ஆரியம் வீழ்ச்சியுற்றது. அரசர்கள் பலர் பவுத்த மார்க்கத்தைப் பின்பற்றினர். பிற்காலத்தில் ஆரியத்திற்கே உரிய வஞ்சக - தந்திர முறைகளால் மன்னர்களைக் கைக்குள் போட்டு, பவுத்தத்தை அதன் சுவடு தெரியாமல் அழித்து முடித்தனர் இந்நாட்டில்.

பவுத்தர்கள், சமணர்கள் கழுவில் ஏற்றப்பட்டனர். பவுத்த பள்ளிகள் இந்து மதக் கோவில்களாக மாற்றப்பட்டன. இன் றைக்கு இருக்கும் திருப்பதி ஏழுமலையான் கோவில்கூட புத்தரின் நின்ற கோலம் என்று ஆய்வு நூல்கள் வெளி வந்துவிட்டன. நன்றி- குடியரசு.

ஜைனமத நூல்கள்

புத்தருக்குச் சில ஆண்டுகளுக்கு முந்திய சமகாலத்தவராகிய மஹாவீரரே இந்த மதத்தின் தீர்க்கதரிசியாவார். ஜைன மத மரபுப்படி மஹாவீரர் அதன் ஸ்தாபகர் அல்ல. தீர்த்தங்கரர்கள் என்று அழைக்கப்படும் தீர்க்கதரிசிகளின் வழியில் கடைசியாகத் தோன்றியவர் மஹாவீரர். மஹாவீரருக்கு முந்தியவர் பார்சுவநாதர். இவர் மஹாவீரருக்கு 250 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் என ஜகோபி கருதுகிறார். பார்சுவருக்கு முந்திய தீர்த்தங்கரர் அரிஷ்டநேமி என்பவர். அவர் மஹாவீரர் மறைவுக்கு 34000 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்தவர் என ஜைனர்கள் கூறுகிறார்கள். அவருக்கு முந்தியவர் நாமி என்பவர். இவர் அரிஷ்டநேமிக்கு 5 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர். இப்பட்டியல் பின்நோக்கி நீண்டுகொண்டே போகிறது. இவ்வாறு அம்மதத்தின் ஆச்சாரியர்களுக்கு இடையிலான இடைவெளி பெருகிக்கொண்டே போய் அவர்களாலேயே கணக்கிட முடியாத நிலையை அடைந்துவிட்டது. தங்களுடைய மதம் காலத்தை வென்றது என்று சொல்வதோடு அவர்கள் திருப்தி அடையவேண்டியதாக உள்ளது.

இத்தீர்த்தங்கரர்கள் எல்லாருமே ஏதோ ஒரு இனச் சின்னத்தை (Totemic emblem) இணைத்துக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். காளை, யானை, குதிரை, வாலில்லாக் குரங்கு போன்ற சின்னங்கள் அவர்களோடு தொடர்புடையவை.

ஜைனர்களின் நம்பிக்கையின்படி அவர்களது சாஸ்திர நூல்கள் 14 பூர்வங்கள் மற்றும் 11 அங்கங்கள் எனக் கூறப்படுகின்றன. இவற்றில் 14 பூர்வங்கள், ஏற்கனவே தொலைந்துபோய் விட்டன. 11 அங்கங்கள்கூடத் தொலைந்துபோய் விட்டன என்றே திகம்பரர்கள் கருதுகிறார்கள். 11 அங்கங்கள் என்று இன்று நமக்குக் கிடைப்பவையும், ஸ்வேதாம்பரர்களால் உண்மையான நூல்கள் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டவையும் திகம்பரர்களைப் பொறுத்த மட்டில் போலியான நூல்கள்.

எவ்வாறாயினும் இன்றைக்கு நம்முன் உள்ள ஜைன நூல்களில் இவையே காலத்தால் முந்தியவை. நெடுங்காலமாக இந்நூல்கள் செவிவழியாகத் தொடர்ந்து வந்தன. கி.பி.454 ஆம் ஆண்டுதான் இந்நூல்கள் எழுத்துருவம் பெற்றன. ஆனால் ஜைனத் தத்துவத்தின் முறையான பதிவாக உள்ள நூல் 'தத்துவார்த்த ஆதிகம சூத்திரம்' என்பதே ஆகும். இது உமாஸ்வாதி என்பவரால் எழுதப்பட்டது. பிற்காலத்தில் எழுந்த ஜைன நூல்களுக்கு எல்லாம் இந்நூல் ஒன்றே ஆதாரம்.

மோட்சத்திற்கு உரிய வழியாக நன்னம்பிக்கை, நல்லறிவு, நன்னடத்தை போன்றவைகளையே ஜைனமும் வழிமொழிகிறது. பண்டைய யோகப் பயிற்சிக்கு ஜைனம் பெருமளவில் முக்கியத்துவம் அளித்தது. சொல்லப் போனால் யோகப் பயிற்சிகளுக்கென்றே விரிந்த அளவில் நூல்கள் அவர்களால் எழுதப்பட்டன. ஜைன அறிவியலின் சிறப்பான அம்சமே அஹிம்சையைக் கடைபிடிக்குமாறு அது வலியுறுத்தியது என்பதுதான். உண்மையில் அஹிம்சையை ஒரு முழுமையான வழிமுறையாகவே ஜைனர்கள் ஆக்கிவிட்டார்கள்.

எப்பொருள் குறித்தும் ஒரு தீர்ப்பை வழங்க ஏழு வழிகள் உண்டு என்பது ஜைனர்களின் தத்துவம். அவை,

1. அது உள்ளது (அஸ்தி)
2. அது இருக்கவில்லை (நாஸ்தி)
3. அது இருக்கிறது, இருக்கவுமில்லை
4. அது வருணிக்க இயலாது (அவ்யக்தவ்யம்)
5. அது இருக்கிறது, வருணிக்க இயலாது.
6. அது இருக்கவில்லை, வருணிக்க இயலாததும்கூட
7. அது இருக்கிறது, வருணிக்கலாம்.

இந்த எல்லா முடிவுகளும் ஏதோ ஒருவகையில் உண்மையானவையே. சங்யஞபேலத்திபுத்தன் என்ற அறியொணாவாதக் கொள்கையாளரை (அஞ்ஞான வாதம்) வாயடைக்கச் செய்வதற்காகவே இக்கொள்கையினை பண்டைய ஜைனர்கள் உருவாக்கினார்கள்.

இவர்களின் மோட்சம் என்பது, ஆன்ம வினைகள் விலகியதும், ஆன்மா மேலெழுந்து பிரபஞ்சத்தின் உச்சிக்குச் சென்று, விடுதலை பெற்ற ஆன்மாக்கள் வாழும் உலகை அடைகிறது. இதுவே 'நிர்ஜரம்' என்று அழைக்கப்படும் முடிவான இலக்காகும்.

கடவுளைத் தேடி....

தி.ம.இராமலிங்கம்

– தொடர்ச்சி — 03

மனிதன் கடவுளை பன்றியாக
வழிபட்டாலும் கடவுளுக்கு
கோபம் வருவதில்லை
என்ற தைரியமா?

உனது பிழைப்புக்கு
கடவுள்தானா மூலதனம்!
பழமைப் பேசியதும்
வேதம் பேசியதும்
இதிகாச புராணங்கள் பேசியதும்
பைபிள் குரான் பேசியதும்
கடவுள் ஒன்று என்றும்
கடவுள் இரண்டு என்றும்
கடவுள் பல என்றும்
கடவுள் இல்லை என்றும்
மனிதன் சொன்னதெல்லாம்
உண்மைதானா?
உண்மை என்றால்
அந்த உண்மை பலவாகக்
காட்சி தருமா?
காட்சி தருமென்றால்
அது உண்மைதானா?

உண்மையைத் தேடி...
சில கோடி ஆண்டுகளுக்கு
முன் சென்றுவிட்டேன்...

நானும் அன்றைய மக்களோடு
ஒருவனாய் அம்மணமாய்
ஆகிவிட்டேன்....!
அதோ... என்னருகில்
ஆதிநாதர் வருகிறார்.

ஆருயிர் ஓம்பும் அற்புதர்
அயோத்தி நகர பேரரசர்
உலகினை ஓர் குடையின்கீழ்
ஆளும் போகஉலகர்
ஆதிநாதர் வருகிறார்.

நாபிராஜன் மருததேவியின்
நன்மகனாம் இஷ்வாகு
வம்சத்தின் மாவேந்தராம்
ரிஷபநாதர் என்கிற நம்
ஆதிநாதர் வருகிறார்.

சமண மதத்தின் முதல்குரு
அமணர்களின் ஆருயிர்
முக்காலமும் உணர்ந்து
மக்களுக்கு வழிகாட்டி
உலகின் முதல் மதத்தை
உருவாக்கிய உத்தமராம்
ஆதிநாதர் வருகிறார்.

என்னருகில் வந்தவரை நோக்கி...
பேரரசே... வணங்குகிறேன்...
நலந்தானே அரசே?... என்றேன்.
அப்படி என்றால் என்ன மகனே?

போச்சுடா...! எனது முதல்
கேள்வியையே இவர்
புரிந்துக்கொள்ள வில்லையே...!
ஆம்... இல்லை... என்று
சொல்லாமல் என்னையே
திருப்பி கேள்வி கேட்கிறாரே?..
என்று நினைத்துக்கொண்டே...

நன்றாக இருக்கிறீர்களா? என்றேன்...

மகனே...
இங்கு அப்படியொரு கேள்வியை
யாரும் யாரிடமும் கேட்பதில்லை!
நலமின்மை இருந்தால்தானே
நலம் என்ற ஒன்று இருக்கும்!...
நமது ஆட்சியில் நலமின்மை
என்ற ஒன்றை மக்கள் அறியார்கள்!
எனவே நலம் என்கிற
ஒன்றையும் மக்கள் அறியார்கள்!

ஒன்றும் அறியாத மக்கள்
ஒன்றும் அறியாத மன்னர்
ஒன்றும் அறியாத உலகம்
உண்மையில் சொர்க்கம்தான்...!

அறியத் தொடங்குவதும்
அறிவதும்தான் உலக மக்களை
இன்பத்திலிருந்து துன்பத்திற்கு
அழைத்துச் செல்கிறது.

இங்கு... ஆடையின்றி
அலையும் மக்களுடன் நானும்
ஆடையின்றி இருக்கிறேனே...!
ஆடை என்றால் என்னவென்றே
முழுதும் மறந்துவிட்டேன்!
எல்லா உயிர்களும்
எவ்வாறு இருக்கின்றனவோ
அவ்வாறே மனிதனாகிய நாங்களும்!

ஒன்றை மறைக்கும்போது
அங்கே துன்பம் தோன்றுகிறது.
மறைப்பை விலக்கும்போது
அங்கே இன்பம் தோன்றுகிறது.
அந்த இன்பத்திற்காக நாம்
மீண்டும் மறைக்க விரும்புகிறோம்!
ஒன்றை மறைக்கவில்லை என்றால்

அங்கே துன்பமும் இல்லை!
இன்பமும் இல்லை!
இயற்கை ஒன்றே நம்மை ஆளும்!

அந்த மறைப்புடன்
கூடவே வளர்ச்சியும் வருகிறது.
வளர்ச்சியை வேண்டுகிற
உயிரினங்கள் துன்பமடையும்!
வளர்ச்சியை விரும்பிய
மனித உயிர்களின்
நிலை இதுதானே...!

என்ன மகனே... சிந்தனை..?
நமது ஆட்சியில் யாரும்
உழைக்கத் தேவையில்லை,
அவர்களுக்கு பசி தெரிவதில்லை,
எனவே தேவை என்பதில்லை,
எல்லோர்க்கும் இவ்வுலகம்
பொதுவாய் காட்சி தரும்.

கற்பக மரத்தின் தயவால்
நமது ஆட்சியில்
மக்கள் தங்களுக்குத்
தேவையானதை பெறுகிறார்கள்.
மக்களுக்கு இதுஒரு
போக காலம்... எல்லோர்க்கும்
எல்லாம் கிடைக்கும்.

மகனே... நீயும் உனக்குத்
தேவையானதை பெற்றுக்கொள்!
நலம்... நலமின்மை
என்ற இருமையைவிட்டு
விலகிடு... பிறகு
நலம் என்கிற ஒருமையும்
உன்னைவிட்டு ஓடிவிடும்.
போக காலத்தின் புதல்வன் நீ...!

(தொடரும்...)

ARUTPERUMJOTHI
ARUTPERUMJOTHI

பேருபதேசம்

TOPMOST ADVISE

(Tamil to English Translator T.M.Ramalingam)

—— continues.....

Why they had unknown the God? Because of any eatable thinks had consumed to us. Otherwise that eatable thinks' taste had unknown. Hadn't get to interest to un-known tasted thinks. Likewise, they truly enjoyed to the God. Otherwise hadn't liked to the God. So that, will know the God. It is your important aim. So, you have doing the discussion about the God.

அந்த விசாரம் செய்வது எப்படியென்றால்: அண்டத்தில் சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் - இவைகள் எப்படிப்பட்டன? இவைகளினுடைய சொரூப ரூப சுபாவம் என்ன? இவை முதலான அண்ட விசாரமும், பிண்டத்தில் நாம் யார்? இத் தேகத்தின் கண் புருவம் கைம்மூலம் - இவைகளிலும் இவை போன்ற மற்ற இடங்களிலும் உரோமம் உண்டாவானேன்? நெற்றி முதலான இடங்களில் அது தோன்றாதிருப்பதென்ன? கால் கைகளிலுள்ள விரல்களில் நகம் முளைத்தலும் அந்த நகம் வளர்தலும் - இவை போன்ற மற்றத் தத்துவங்களினது சொரூப ரூப சுபாவங்களும் என்ன வென்னும் பிண்ட விசாரமுஞ் செய்து கொண்டிருங்கள்.

You may say, how will doing that discussion? That is, how it happens, what is the reality of the Sun, Moon and Stars in the universe? What are the appearance, figure and nature of these things? We are who in this body? Why furry had visible / generate on eyebrow, armpit and other kinds of places in this body? Why these are not generating on the forehead and like the same other kinds of places in this body? Nail had been sprouting and rising

in the legs and hand's fingers – what are these kinds of other philosophy of nature, appearance and figure? You are doing these kinds of universal and body discussions.

இப்படி இடைவிடாது விசாரஞ் செய்து கொண்டிருந்தால், இவ்வுலகத்தின்கணுள்ள ஜனங்கள் அதைக்குறித்து ஏளனமாக சொல்லுவார்கள். அப்படிச் சொல்லுவது அவர்களுக்குச் சுபாவம். ஏனெனில், அவர்களுக்கு உண்மை தெரியாது. ஆதலால் நீங்கள் அதை லக்ஷியம் செய்யக்கூடாது.

If you doing discussion, without gape like these – the world people are mock at to your discussion. That contempt spokes are natural temper of those people. Because of they are not realizing the true. So, you are not considering that one.

இப்படியே "காதில் இரண்டு பெரிய பொத்தல் செய்து வர விடுத்தவர் - ஆணுக்குக் கடுக்கனிடுதலும் பெண்ணுக்கு மூக்குத்தி முதலியவை போடுதலும் தமக்குச் சம்மதமானால் - காதிலும் மூக்கிலும் அதற்கு வேண்டிய பொத்தல்களிட்டு வரவிட்டிருக்க மாட்டாரா" என்று விசாரித்துத் தெரிந்து கொள்ளுகிற பக்ஷத்தில், காதில் கடுக்கனிடவும் மூக்கு முதலியவற்றில் நகையிடவும் சம்மதம் வருமா? இப்படி விசாரித்துப் பிரபஞ்ச போகத்தின்கண் அலக்ஷியம் தோன்றினால், நிராசை உண்டாம்,

In this manner, "the God had set our body and came in birth; at the time of two big holes are laid in our center of ears on the birth – wearing the earrings for men, nose-jewel worn by women, if these kinds of activities are an accepted the God – he had already been laid appropriate holes on the ears and nose by birth. If you know this truth through discussion, are you accepting the wearing earrings and nose-jewels? Through this discussion, if you form of ignore to all world's sensual delight, there was freedom from desire.

–Will be continue–